★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்

THINAKARAN தினகரன்

2021 டிசம்பர் 8 புதன்கிழமை

வரு. 89 இல. 291 | Wednesday 08, December, 2021 | 28 பக்கங்கள் | 30/-

## இராணுவ தலைமை அதிகாரியாக லியனகே

இராணுவத் தளபதி பரிந்துரை

**ஸாதிக் ஷிஹான்**



இலங்கை இராணுவத்தின் உயரதிகாரியான மேஜர் ஜெனரல் விகும் லியனகே இலங்கை இராணுவத்தின் 59ஆவது பிரதம அதிகாரியாக (சீப் ஒப் ஸ்டாப்) நியமிக்கப்பட்டுள்ளார்.

2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 06

## சிறு, நடுத்தர வர்த்தகர்களின் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பிரதமர் பணிப்பு



சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்து செல்லும்போது எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவர்களுக்கு உடனடி தீர்வை பெற்றுக் கொடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று 06

## பிரியந்த குமார குடும்பத்துக்கு 25 இலட்ச ரூபாய் இழப்பீடு

அமைச்சரவை அனுமதி வழங்கியது

**ஷம்ஸ் பாஹிம்**




பிரியந்த குமாரவின் இழப்பால் ஆதரவற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள மனைவி மற்றும் பிள்ளைகளின் நலன் கருதி மனிதநேய அடிப்படையில் ரூபாய் 2.5 மில்லியன்களை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.இது தொடர்பாக தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் 06

## அம்பாறையில் விவசாயம் செய்ய முஸ்லிம் மக்கள் மீது கெடுபிடிகள்

தீர்வைப் பெற்றுத்தருமாறு அதாவுல்லா கோரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் மக்கள் காலங்காலமாக விவசாயம் செய்து வந்த காணி தற்போது அவர்களுக்கு தடுக்கப்பட்டுள்ள நிலையில் மீண்டும் அந்த மக்களுக்கு அதனைப் பெற்றுக் கொடுக்க சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஏ.எல்.எம். அதாவுல்லா நேற்று பாராளுமன்றத்தில் 06

## தனக்கு அதிகமாக வாக்களித்த தமிழரின் பிரதிநிதித்துவ கட்சியான

# தமிழ் கூட்டமைப்புக்கு சஜித் பாரிய அநீதி



-சார்ள்ஸ் நிர்மலநாதன் MP கடுமையாக சாடல்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

தமிழ் மக்களின் அதிக வாக்குகளை பெற்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, வடக்கு கிழக்கு பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு பாரிய அநீதி இழைத்துள்ளதாக ஆளும் தரப்பு பிரதம கொறடா ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

செலவினக் குறைப்பு பிரேரணையை முன்வைக்க பெயரிடப்பட்ட 33 எதிரணி எம்.பிக்களிடையே ஒரு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பியின் பெயர் கூட உள்வாங்கப்படவில்லையென்று தெரிவித்த அவர் ஜே.வி.பி எம்.பிக்களின் பெயர்கள் கூட அதில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். 06

**செலவின குறைப்பு பிரேரணையை முன்வைக்க பெயரிட்ட 33 எம்.பிக்களில் TNAக்கு சஜித் இடமளிக்கவில்லை**

**TNAக்கு ஆதரவாக அமைச்சர் ஜோன்ஸ்டன், சுரேன் ராகவன் MP உட்பட பலரும் சபையில் கருத்துகள் முன்வைப்பு**





## தேசிய பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு குறித்து ஆராய

# ஜனாதிபதி தலைமையில் நேற்று கூடிய பாதுகாப்பு ஆலோசனை சபை



பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைச் சபை, நேற்று(07), ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், பாராளுமன்றக் கட்டடத் தொகுதியின் முதலாம் இலக்க அறையில் கூடியது.

பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைச் சபைத் தலைவர் என்ற ரீதியில், இக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகப் பாராளுமன்றத்துக்கு வருகை தந்த ஜனாதிபதியை, சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன மற்றும் ஆளுங்கட்சியின் பிரமத கொறடாவும் அமைச்சருமான ஜோன்ஸ்டன் 06



## பொதுவான நிகழ்ச்சி நிரலில் பொருளாதார முன்னெடுப்பு

நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்வது அவசியம் 03

## சபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு பணிகள் மீண்டும் நேற்று முதல்



மூடப்பட்டுள்ள சபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு பணிகள் நேற்று (07) செவ்வாய்க்கிழமை தொடக்கம் மீண்டும் ஆரம்பமாகியது. களஞ்சியப்படுத்தப்பட்ட மசகு எண்ணெய் நிறைவடைந்ததால் கடந்த மாதம் 15 ஆம் திகதி முதல் இந்த சுத்திகரிப்பு நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தது. 06

## பசிலின் திடீர் இந்திய விஜயம் எதற்காக?




சபையில் ரணில் MP கேள்வி

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவின் திடீர் இந்திய விஜயம் தொடர்பான அனைத்து விவரங்களையும் வெளியிடுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

வரவு செலவுத்திட்டம் தொடர்பாக பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றுக் 06

## தெஹிவல Zooவில் கறுப்பு இன அன்னங்கள்



முதற்தடவையாக மக்கள் பார்வைக்கு

தெஹிவளை மிருகக்காட்சிசாலையின் 86 ஆண்டுகால வரலாற்றில் முதல் முறையாக ஐந்து கறுப்பு அன்னப் பறவைகள், தற்போது பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

கடந்த மார்ச் 22 ஆம் திகதி பிறந்த இந்த அன்னப் பறவைகள், கொரோனா தொற்று பரவல் காரணமாக பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்படவில்லை.

அவுஸ்திரேலியாவுக்கு உரித்தான இந்த 06

## நாட்டில் இதுவரை 458 Gas வெடிப்பு சம்பவங்கள்



ஆய்வுக் குழு அறிக்கையில் தெரிவிப்பு

எரிவாயு கசிவை நுகர்வோர் கண்டறிய, ஒரு தனித்துவமான வாசனையுடன் கூடிய இரசாயன திரவமான எத்தில் மெர்காப்டானைச் சேர்க்குமாறு விநியோக நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக உள்நாட்டு எரிவாயு வெடிப்புகளை ஆய்வு செய்த நிபுணர்கள் குழு கூறியுள்ளது. அந்தக் குழுவின் தலைவரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் குறித்து 06

## ஒரு இலட்சம் மாணவருக்கான ஆட்சேர்ப்பு வேலைத்திட்டம் ஆரம்பம்

# சாதாரண தரத்தை பூர்த்தி செய்த ஒரு இலட்சம் பேருக்கு தொழில்



அரச சேவையில் 45,000 பேர் இணைக்கப்பட்டுள்ளனர்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

க.பொ.த சாதாரணதரத்தைப் பூர்த்தி செய்த 1 இலட்சம் மாணவர்களுக்கான ஆட்சேர்ப்பு வேலைத்திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அரச சேவைக்கு இதுவரை 45,000 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் சமுர்த்தி, நுண் நிதி, சுயதொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று (07) பாராளுமன்றத்தில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மேலும் தெரிவிக்கையில்,

2015 –2019 காலப்பகுதியில் அரச சேவைக்கு வழங்கப்பட்ட மொத்த வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கை 22,145 ஆகும். 06

## வடமேல் மாகாண ஆளுநர் ராஜா கொல்லுரே மறைவு



வடமேல் மாகாண ஆளுநர் ராஜா கொள்ளுரே தனது 83 ஆவது வயதில் நேற்று காலமானார்.

வடமேல் மாகாண ஆளுநர் ராஜா கொல்லுரேவுக்கு கொரோனா வைரஸ் (கொவிட் 19) தொற்றுள்ளமை கடந்த 03 ஆம் திகதி உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து அவர் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் அவர் நேற்று காலமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வட மேல் மாகாண ஆளுநராக ராஜா கொள்ளுரே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் 2020 ஆகஸ்ட் 31 சத்திய பிரமாணம் செய்து கொண்டிருந்தார்.

## பாகிஸ்தானில் படுகொலை செய்யப்பட்ட

# பிரியந்த குமாரவின் இறுதிக் கிரியை இன்று



பாகிஸ்தானின் சியால்கோட்டில் படுகொலை செய்யப்பட்ட பிரியந்த குமாரவின் இறுதிக் கிரியை இன்று (08) நடைபெறவுள்ளது. அவரது பூதவுடல் நேற்று (07) கனேமுல்லையிலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டதாக உறவினர்கள் தெரிவித்தனர். சியால்கோட்டிலுள்ள தொழிற்சாலை ஒன்றின் பொது முகாமையாளரான பிரியந்த குமார சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

அவரது பூதவுடல் 06

## "ஓமிக்ரோன்" மாறுபாட்டில் இதுவரை 32 பிறழ்வுகள் பதிவு

கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தகவல்



ஓமிக்ரோன் மாறுபாட்டின் சுமார் 32 பிறழ்வுகள் இதுவரை பதிவாகியுள்ளதாகவும் இதுவரை இறப்புகள் எதுவும் பதிவாகவில்லையென்றும் கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஓமிக்ரோன் மாறுபாடு 32 பிறழ்வுகளைக் கொண்டுள்ளது. டெல்டா மாறுபாடு 23 மற்றும் அல்பா மாறுபாடு 08 பிறழ்வுகளைக் கொண்டுள்ளதாகவும் வைத்தியர் ஜூட் ஜயமஹா தெரிவித்தார்.

இதன் விளைவாக, ஓமிக்ரோன் மாறுபாடு கடுமையான ஆபத்தை ஏற்படுத்தக்கூடுமென உலக சுகாதார நிறுவனம் அறிவித்ததாக குறிப்பிட்ட வைத்தியர், அதே நேரத்தில் மற்ற காரணிகளும் உள்ளதாகவும் 06

## அடையாள இலக்கத்துடன் கூடிய பிறப்புச்சான்றிதழ்



பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் அடையாள இலக்கத்துடன் கூடிய பிறப்புச் சான்றிதழ்களை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதன்படி, எதிர்காலத்தில் புதிய பிறப்புச் சான்றிதழ் வழங்கும் போது இந்த அடையாள இலக்கம் வழங்கப்படும்.

இந்த அடையாள இலக்கத்தை, தேசிய அடையாள அட்டையை தயாரிக்க பயன்படுத்துவதற்கும், பிறப்பு முதல் இறப்பு வரையிலான அனைத்து செயல்பாடுகளின்போது, பொது மற்றும் தனியார் துறை சேவைகளை அணுகுவதற்கும் வசதியாக இருக்கும்.

முன்னதாக, ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு அடையாள 06



## Gas கம்பனிகள் மீது வழக்கு தொடர பின்நிற்க மாட்டோம்

நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் 03

## யாழிலிருந்து கொழும்பு வந்த வாகனத்தில் கஞ்சா

03

## இலங்கையர் படுகொலையின் முக்கிய சூத்திரதாரி கைது!

ராவல்பின்டியில் நேற்று கைதானார்



பாகிஸ்தானில் காட்டுமிராண்டித்தனமாக கொலை செய்யப்பட்ட பிரியந்த குமார படுகொலை சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பில்லி என்றழைக்கப்படும் இம்தியாஸ் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ராவல்பின்டியில் வைத்து இந் நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பாகிஸ்தானிய 06

## ஜனவரியில் கொரோனா வேகமாக பரவும் அபாயம்

GMOA சங்க அதிகாரிகள் எச்சரிக்கை

பண்டிகைக் காலங்களில் எச்சரிக்கையுடன் செயற்படாவிட்டால் ஜனவரி மாதத்துக்குள் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவுமென அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கிரிக்கெட் போட்டியை பார்ப்பதற்கு செல்லும் பார்வையாளர்கள் முகக்கவசங்களை அணிவது மற்றும் சுகாதார வழிகாட்டுதல்களை கட்டாயம் பின்பற்றுதல் வேண்டும் எனவும் மருத்துவ அதிகாரிகள் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அச்சங்கத்தின் செயலாளர் 06

### விக்கல் வீராச்சாமி



இரத்தம் சிந்தின காலத்தை மறந்து–டுங்க, அது முடிஞ்சு போன கதை, அத நினைச்சு பலன் இல்லை எண்டு சம்பிக்க ஐயா தெரிவிச்சிருக்கிறார்....

ம்ம், அதுவும் யாழ்ப்பாணத்தில வச்சு, நம்ம சனம் சரத் பொன்சேகாவுக்கே வாக்களிச்சவங்கதானே, அதால இது ஒண்டும் பெருசில்லையே...!!!

**89 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்**

# சந்திவெளி பிரதேச மக்களுக்கு உயிர்காக்கும் பாதுகாப்பு அங்கிகள்

## LG கிராமத்தைக் கட்டியெழுப்பும் பிரமுகர்' நிகழ்ச்சித் திட்டத்தில் வழங்குவதற்கு முடிவு




'LG கிராமத்தைக் கட்டியெழுப்பும் பிரமுகர்' நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் மட்டக்களப்பில் மேற்கொள்ளப்பட்ட 'உயிரைக்காப்போம் பாதுகாப்பாக இருப்போம்' திட்டம் மக்கள் மயப்படுத்தப்பட்டது. கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர் மட்டத்திற்கு கொண்டு செல்லும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட 'LG கிராமத்தைக் கட்டியெழுப்பும் பிரமுகர்' நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் மட்டக்களப்பு, சந்திவெளி கிராம மக்களுக்கான 'உயிரைக் காப்போம் பாதுகாப்பாக இருப்போம்' என்ற கருத்தாக்க திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட உயிர் காக்கும் மேலங்கிகள் வழங்கும் திட்டம் அண்மையில் மக்கள் மயப்படுத்தப்பட்டது.

சமீபத்தில் திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தில் பாதுகாப்பற்ற முறையில் படகில் பயணம் செய்த வேளையில் படகு விபத்தின் மூலம் பலர் உயிரிழந்த சம்பவம் நாட்டையே துயரத்தில் ஆழ்த்தியது.

சந்திவெளி கிராம மக்கள் தனது அன்றாட தேவைகளுக்காக எந்தவித பாதுகாப்பு அங்கியும் இல்லாமல் மிதப்பு படகின் மூலம் சுமார் 300 மீட்டருக்கும் அதிகமான தூரத்தை கடந்து செல்கின்றனர். இதை அறிந்த LG கிராமத்தை கட்டியெழுப்பும் முகவர் திட்டத்தின் குழு இந்த மக்களுக்கு உதவி செய்ய முன்வந்தது. அதன் அடிப்படையில் 'உயிரைக் காப்போம் பாதுகாப்பாக இருப்போம்' என்ற கருத்தாக்க திட்டத்தின் கீழ் சந்திவெளி கிராம மக்களுக்கு பாதுகாப்பு மேலங்கிகள் வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டது.

அதன் பிறகு மட்டக்களப்பு சந்திவெளி கிராம மக்கள் பாதுகாப்பாக ஆற்றை கடப்பதற்கான உயிர்க் காக்கும் மேலங்கிகள் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கிராமத்தில் வசிக்கும் 8000 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் நகரத்தை நோக்கி செல்வதற்கு மிதப்பு படகின் மூலமே ஆற்றைக் கடந்து செல்ல வேண்டும்.




அதே போல் மழைக் காலங்களில் இவ்வாறு ஆற்றைக் கடப்பது மிகவும் கடினமாகும். இந்த மின் படகில் ஒரு தடவையில் 80 பேர் பயணிக்க முடியும். பாடசாலை மாணவ மாணவிகள், ஆசிரியர்கள், விவசாயிகள், நோயாளிகள் உள்ளிட்ட சகலரும் இந்த இக்கட்டான சூழ்நிலைக்கு முகங்கொடுத்து வருகின்றனர். LG கிராமத்தைக் கட்டியெழுப்பும் பிரமுகர் திட்டத்தின் உதவியோடு கிராம மக்கள் பாதுகாப்பாகவும், மகிழ்ச்சியாகவும் தமது பயணங்களை மேற்கொள்கின்றனர்.

உலகப் புகழ் பெற்ற இலத்திரனியல் உற்பத்தி நிறுவனமான LG நிறுவனம், இலங்கையின் முன்னணி வணிகக் குழுமமான அபான்ஸ் மற்றும் Community Chest of Korea mikg;G

Korea Friends of Hope International Sri Lanka mikg;G (KFHI) ஆகிய நிறுவனங்களின் கூட்டிணைவில் உருவாக்கப்பட்ட 'LG கிராமத்தை கட்டியெழுப்பும் பிரமுகர்' திட்டத்தின் மூலம் இலங்கை இளைஞர் யுவதிகளுக்கு அவர்களின் கிராமங்களில் உள்ள தேவைகளை இனங்கண்டு அத்தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளக் கூடிய ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டது.

அவ்வாறு வழங்கப்பட்ட வாய்ப்புகளின் மூலம் முதலாவது திட்டமாக வவுனியா தரணிகுளம் மக்களுக்கு தேவையான குடிநீர் வழங்கும் திட்டம் அண்மையில் மிகவும் சிறப்பாக மக்கள் மயப்படுத்தப்பட்டது. அதேபோல் 'LG கிராமத்தை கட்டியெழுப்பும் பிரமுகர்' திட்டத்தின் மூலம் அமுல்படுத்தப்படும் ஏனைய திட்டங்களான பலாங்கொடை ஹந்தகிரிய கிராமத்தில் 'வளமான தலைமுறையை உருவாக்குவோம்' என்ற கருப்பொருளின் கீழ் உருவாக்கப்பட்டு வரும் பிராந்திய சுகாதாரசேவை பணிமனை மீளமைப்புத் திட்டம், அம்பாறை முவாங்கலை கிராமத்தில் 'விளையாட்டு திறன் மிக்க நாளைய தலைமுறை' என்ற கருப்பொருளின் கீழ் உருவாக்கப்பட்டுவரும் கைப்பந்து மைதானம் அமைக்கும் திட்டம் ஆகியனவும் முக்கியமானவையாகும்.

குறைந்த பொருளாதார வசதியின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு சக்தியாக அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்கிவரும் LG கிராமத்தைக் கட்டியெழுப்பும் பிரமுகர் திட்டமானது மக்கள் மத்தியில் மிகப் பெரிய ஆதரவைப் பெற்றுள்ளது.



# கெக்கிறாவ ஸுலைஹாவுக்கு அரச இலக்கிய விழாவில் விருது

இம்மாதம் 03 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகர்த்த மண்டபத்தில் நடைபெற்ற அரச இலக்கிய விருது வழங்கும் நிகழ்வில் அனுராதபுரம் மாவட்டத்தில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட ஒரேயொரு தமிழ் பேசும் சமூகத்தைச் சேர்ந்த ஒருவராக கெகிராவ ஸுலைகா விருது பெற்றுள்ளார்.

கெக்கிறாவ ஸுலைஹா என்ற புனைபெயரில் இலக்கியப் பணியாற்றி வரும் திருமதி ஏ. ஸுலைஹா பேகம் தொழில் ரீதியாக ஆளுமை மிகு பாடசாலையின் அதிபர் ஒருவர் மட்டுமல்ல கடைசியாக 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற 2020 ஆண்டிற்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேற்றில் தமிழ் மொழி மூலம் அகில இலங்கை ரீதியாக முதலிடம் பெற்ற மாணவன் கல்வி கற்ற பாடசாலையின் அதிபராக உள்ளார்.

இவர் 1969 மே 27 இல் அனுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள கெக்கிறாவையில் பிறந்தார்.

இவர் தனது உயர்கல்வியை கண்டி பெண்கள் உயர்நிலைப் பாடசாலையில் விஞ்ஞானப் பிரிவில் கற்றார். அதன் பின்னர் 1992களில் ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்றார். அவர் ஆங்கில ஆசிரியராக கெக்கிறாவ முஸ்லிம் மஹா வித்தியாலயம், மரதன்கடவல அல் அமீன் முஸ்லிம் வித்தியாலயம், மரதன்கடவல இஹலபுளியங்குளம் முஸ்லிம் வித்தியாலயம் ஆகிய இடங்களில் பணியாற்றியுள்ளார்.

ஆசிரியர் பயிற்சிக்கான பேராதனை ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, ஆங்கில ஆசிரியர் டிப்ளோமாப் பயிற்சிக்காக இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், ஆங்கில உயர் தேசிய டிப்ளோமாவுக்காக கண்டி உயர் தொழில்நுட்ப நிறுவகம், கல்விமாணி கற்கை நெறி நிமித்தம் ஆங்கிலம் தேசியக் கல்வி நிறுவகம் என்பவற்றில் கற்றார்.

அதிபர் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டு முதன் முதலாக 2009 ஆம் ஆண்டு மரதன்கடவல அல்அமீன் முஸ்லிம் வித்தியாலயத்தில் நியமனம் பெற்று அங்கு கடமையாற்றி விட்டு தற்போது கெக்கிறாவ முஸ்லிம் மஹாவித்தியாலயத்தில் 2014 ஆம் ஆண்டு முதல் பணியாற்றி வருகின்றார்.



இலக்கிய ஈடுபாட்டுக்கு ஊக்குவித்தவர்கள் வரிசையில் அக்கா கெக்கிறாவ ஸஹானா, பண்ணாமத்துக் கவிராயர் ஸெய்யத் முஹம்மத் ஃபாரூக், சாச்சா பாத்திமா மைந்தன், மேமன் கவி அப்துல் ரஸாக் அவர்கள், 'மல்லிகை' டொமினிக் ஜீவா, மகன் 'ஜீவநதி' கலாமணி பரணீதரன், அனுராதபுரம் அன்பு ஜவஹர்ஷா மற்றும் அவ்வப் போது அவரோடு கற்பித்த ஆசிரியர்கள், அவருக்குக் கற்பித்த ஆசிரியர்கள், உறவினர்கள் என பலரை ஞாபகம் கொள்கிறார்.

பல்வேறு பத்திரிகைகளில் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. 'மல்லிகை', 'ஜீவநதி', 'ஞானம்' சஞ்சிகைகள் நிறைய தன்னை ஊக்குவித்து வளர்த்தமை பற்றி நினைவு மீட்டுகிறார். விருதுகள் பல பெற்றிருக்கிறார் கெக்கிறாவ ஸுலைஹா. 'பட்டுப்பூச்சியின் பின்னுகை போலும்' மொழிபெயர்ப்புக் கவிதைகள் நூலுக்காகக் கிடைத்த இலங்கை அரசின் சிறந்த மொழிபெயர்ப்புக்கான சாகித்திய மண்டலப்பரிசு, மற்றும் மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வழங்கிய விருது (2009), 'வானம் பாடியும் ரோஜாவும்' நூலுக்காகக் கிடைத்த இலங்கை அரசின் சிறந்த மொழிபெயர்ப்புக்கான சாகித்திய மண்டலப்பரிசு(2015), 'ஞாபகிக் கத்தக்கதோர் புன்னகை' மொழியாக்கக் கட்டுரைகள் நூலுக்காகக் கிடைத்த 'துரைவி' விருது (2014), இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகம் 2016 இல் நடத்திய உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வு பொன்விழா மாநாட்டில் அவரின் இலக்கியப் பணிக்காகக் கிடைத்த விருது, யாழ்ப்பாண மகளிர் விவகார அமைச்சு சர்வதேச மகளிர் தினத்தன்று நடத்திய நிகழ்விலே வழங்கப்பட்ட கௌரவ விருது (Inspirational Women Award ) என்பவற்றைக் குறிப்பிடலாம்.

2020 இல் வெளியிடப்பட்ட அவரது 'கிழக்கினை எதிர்கொண்டு' நூலுக்கு இலங்கை அரசின் சிறந்த சிறுகதை மொழிபெயர்ப்புக்கான சாகித்திய மண்டலப்பரிசு விருது இம்மாதம் 03 ஆம் திகதி பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் வழங்கப்பட்டது.

இரவீந்திரநாத் தாகூர், பேட்கார், ஒஸ்கார் வைல்ட், அன்டன் செக்கோவ், ஓ. ஹென்றி, கே. ஏ. அப்பாஸ், லியோ டோல்ஸ்டோய், ஸாகி, காதரீன் மன்ஸ்ஃபீல்ட், கிரீகோரியோ ஃபியோன்டஸ் போன்றோர் எழுதிய புகழ்பெற்ற சில கதைகளுடன் இலங்கை எழுத்தாளர்கள் சீதா குலத்துங்க, புன்னியாகாந்தி விஜேநாயக ஆகியோரின் கதைகளும், காஷ்மீர் பிரதேச எழுத்தாளர்கள் நாசிர் ஜெகாங்கிர், நயீமா அகமட், அப்துல் கனி பேக் அக்தார் போன்றோர் எழுதிய மூன்று கதைகளும் இங்கே உள்ளடங்கி உள்ளன.

**டப்ளியூ.எம்.பைஸல்**
(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)

மக்கள் வங்கியின் தலைமையகத்தில்

# பீப்பிள்ஸ் இன்சூரன்ஸ் பி.எல்.சி அதிநவீன சேவைக் கருமபீடம்

தனது வாடிக்கையாளர்களுக்கு தங்குதடையற்ற காப்புறுதி சேவைகளை வழங்கும் நோக்கில், பீப்பிள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி, இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரியில் அமைந்துள்ள மக்கள் வங்கி தலைமையக வளாகத்தில் புதிய, அதிநவீன சேவைக் கருமபீடத்தை வைபவ ரீதியாகத் திறந்து வைத்துள்ளது. பீப்பிள்ஸ் இன்சூரன்ஸ் பி.எல்.சி மற்றும் மக்கள் வங்கி ஆகிய இரண்டு அரச நிறுவனங்களுக்கிடையிலான உறவுமுறையை மேலும் வலுப்படுத்தி, அவர்களின் சேவைகளை இலகுவாகப் பெற்றுக்கொள்வதை மேம்படுத்துவதற்கும், தனது வாடிக்கையாளர்களுக்கு சௌகரியத்தை வழங்குவதற்கும் காப்புறுதி சேவை மையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபைத் தலைவரான சுஜீவ ராஜபக்ச, பீப்பிள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சியின் பணிப்பாளர் சபைத் தலைவர் இசுரு பாலபட்டபெந்தி, மக்கள் வங்கியின் தலைமை நிர்வாக அதிகாரியும், பொது முகாமையாளருமான ரஞ்சித் கொடித்துவக்கு, மற்றும் பீப்பிள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சியின் தலைமை நிர்வாக அதிகாரியான தீபால் அபேசேகர ஆகியோர் முன்னிலையில் புதிய சேவைக் கருமபீடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.



இந்நிகழ்வில் மக்கள் வங்கி மற்றும் பீப்பிள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சியின் வாடிக்கையாளர்கள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர். மக்கள் வங்கியின் வாடிக்கையாளர்கள் மற்றும் பணியாளர்கள் தற்போது பிரத்தியேகமயமாக்கப்பட்ட சேவையுடன் பீப்பிள்ஸ் இன்சூரன்ஸின் வணிக கருமபீடத்தின் மூலமாக பலதரப்பட்ட நிறுவன மற்றும் தனிப்பட்ட காப்புறுதி தீர்வுகளை அனுபவிக்கும் வாய்ப்பை இப்போது பெற்றுள்ளனர். வணிகக் காப்புறுதி, கடல் அபாயக் காப்புறுதி, பொறுப்புக் காப்புறுதி, குழு மட்ட சுகாதார காப்புறுதி, இயந்திர உபகரணங்களுக்கான காப்புறுதி, தனிநபர் காப்புறுதி, வீட்டுக் காப்புறுதி, தனிநபர் மருத்துவக் காப்புறுதி, சோலர் காப்புறுதி, மோட்டார் வாகன காப்புறுதி மற்றும் பயணக் காப்புறுதி உள்ளிட்ட மேலும் பல்வேறு பொதுக் காப்புறுதி போன்றவற்றை வாடிக்கையாளர்கள் சிரமமின்றியும், பிரத்தியேகமான வடிவமைப்புடனும் பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன், இக்கருமபீடத்தின் மூலமாக வழங்கப்படும் ஏராளமான காப்புறுதி வசதிகளுடன், பீப்பிள்ஸ் இன்சூரன்ஸ் தனது வாடிக்கையாளர்களுக்கு விரிவான மதிப்புக் கூட்டப்பட்ட சேவைகளையும் வழங்குகிறது. பிரேரணைப் பத்திரங்களை பூர்த்தி செய்தல், காப்புறுதித் திட்டத்தை சரிசெய்தல், கட்டுப்பணக் கொடுப்பனவுகள், தற்காலிக காப்புறுதி சான்றிதழ் வழங்குதல், காப்புறுதித் திட்டங்கள் பற்றிய தகவல் விபரங்களைப் பெறுதல் போன்ற இணைய வழியிலான (Online) சேவைகளையும், இழப்பீட்டுக் கோரலை செயல்படுத்தல் மற்றும் ஆவண முகாமைத்துவம் போன்ற நேரடி சேவைகளையும் (Offline) இவை ஒன்றிணைத்து வழங்குகின்றன.

வாடிக்கையாளர்களின் சிறந்த நலன்களை தமது செயல்பாடுகளின் மையமாகப் பேணி, பீப்பிள்ஸ் இன்சூரன்ஸ் சேவைக் கருமபீடம் கவர்ச்சிகரமான கட்டணங்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது. வாடிக்கையாளர்கள் காப்புறுதி கட்டுப்பணக் கொடுப்பனவுகளுக்கு வட்டியின்றிய கடனட்டை மூலமான தவணைக் கொடுப்பனவுத் திட்டத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்.




இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி அல்லாத காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றாக, பீப்பிள்ஸ் இன்சூரன்ஸ், காப்புறுதிச் சந்தையை புத்தாக்கம் மற்றும் சிறப்பான சேவையின் மூலம் வழிநடத்துவதற்கான நீண்ட கால அர்ப்பணிப்பைக் கொண்டுள்ளது. மக்கள் வங்கியின் தலைமைக் காரியாலயத்தில் சேவைக் கருமபீடத்தைத் திறந்துள்ளமை, அனைத்து தனிநபர் மற்றும் நிறுவன காப்புறுதி வாடிக்கையாளர்களின் நிதியியல் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கான நிறுவனத்தின் பயணத்தில் மற்றொரு சாதனை இலக்காகும்.

தற்போதைய தொற்றுநோய் காரணமாக, கொவிட்19 சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைவாக திறப்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டது.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்

THINAKARAN

2021 டிசம்பர் 8 புதன்கிழமை



**தொழுகை நேரம்**

07 முதல் 09 வரை

சுபஹ் - 04.49
லுஹர் - 12.04
அஸர் - 03.25
மஃரிப் - 05.55
இஷா - 07.09

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் கார்த்திகை 22

ராகுகாலம் : பகல் : 12.00 - 01.30வரை
சுபநேரம் : காலை : 09.00 - 10.30வரை

யோகம்: சித்தமரண யோகம்

திதி: பஞ்சமி

**இராசி பலன்கள்**

மேஷம் - நிறைவு
ரிஷபம் - பாராட்டு
மிதுனம் - தனம்
கடகம் - போட்டி
சிம்மம் - செலவு
கன்னி - முயற்சி
துலாம் - நன்மை
விருச்சிகம் - கோபம்
தனுசு - வெற்றி
மகரம் - பொறுமை
கும்பம் - மறதி
மீனம் - சுகம்

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)




பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனை சபை நேற்று ஜனாதிபதி தலைமையில் கூடியபோது பாராளுமன்ற கட்டடத்தொகுதிக்கு வருகை தந்த ஜனாதிபதி வரவேற்கப்படுவதையும் கூட்டம் இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

# பொதுவான நிகழ்ச்சி நிரலில் பொருளாதார முன்னெடுப்பு

## நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்வது அவசியம்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

பொதுவான நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதும் பொருளாதாரத்தை உறுதி செய்வதும் முக்கியமானது என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன கூறியுள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர், 2014 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் பாராட்டத்தக்க நிலையில் இருந்ததாக குறிப்பிட்டார்.

போருக்குப் பின்னர், மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது, இலங்கை பொருளாதாரத்தில் புதிய மைக்கல்லை எட்டியதென அமைச்சர் பந்துல குணவர்தன கூறினார்.

வரலாற்றில் வேறு எந்த அரசாங்கமும் இவ்வாறான சாதனைகளை நிகழ்த்தியதில்லையென குறிப்பிட்ட அமைச்சர், இருப்பினும் அண்மைக்காலமாக பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவித்தார். எனவே அதிகாரிகள் வழங்கிய தரவுகளை மதிப்பீடு செய்து தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டார்.

# Gas கம்பனிகள் மீது வழக்கு தொடர பின்நிற்க மாட்டோம்

## நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்



**ஷம்ஸ் பாஹிம்**

எரிவாயு கம்பனிகள் உரிய பாதுகாப்பு முன்னெப்புகளை மேற்கொள்ளாது எரிவாயு இறக்குமதி மற்றும் உற்பத்தி செயற்பாடுகளை மேற்கொண்டு, அவை தமது பொறுப்பை மீறியிருந்தால் அது தொடர்பில் விசாரணை நடத்தி கம்பனிகளுக்கு எதிராக உச்ச நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்த நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவன்ன, கம்பனிகளுக்கு எதிராக வழக்கு தொடர பின்நிற்க மாட்டோம் எனவும் கூறினார்.

நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் வழிகாட்டல்களை பின்பற்றி லிற்றோ மற்றும் லாப் எரிவாயு கம்பனிகள் உரிய தரத்திலான எரிவாயுவை புதிய ஸ்ரிக்கர் ஒட்டி சந்தைக்கு விநியோகிக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவித்த அவர் எரிவாயு வெடிப்பு சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட நுகர்வோருக்கு நியாயம் நிலைநாட்டப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

06

# யாழிலிருந்து கொழும்பு வந்த வாகனத்தில் கஞ்சா

## 02 கோடி ரூபா பெறுமதியானவை மீட்பு

வவுனியாவில் இரண்டுகோடி ரூபாய் பெறுமதியான 145 கிலோ கேரள கஞ்சாவை கடத்திச்சென்ற இருவரைக் கைது செய்துள்ளதாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய யாழிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த கூளர் ரக வாகனத்தை நேற்று (07) பிற்பகல் வவுனியா ஓமந்தையில் அமைந்துள்ள சோதனை சாவடியில் வழிமறித்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் அதில் சோதனைகளை மேற்கொண்டனர். இதன் போது வாகனத்தில்

06



கொழும்பு, ஹல்ஸ்டொப்பிலமைந்துள்ள உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் அமைந்துள்ள நீதிமன்ற கட்டடத்தொகுதியை புனரமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. நீதி அமைச்சர் அலி சப்ரி சீன அரசுடன் நடத்திய பேச்சு வார்த்தையையடுத்து அதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. நீதி அமைச்சருடன் இலங்கையிலுள்ள சீனத்தூதுவர் Qi Zhenhong படத்தில் காணப்படுகிறார்.அமைச்சின்செயலாளர் பிரியந்த மாயாதுன்ன,சீன பொருளாதார, வர்த்தக ஆலோசகர் LI Guangjun ஆகியோர் கைச்சாத்திட்டனர்

# இளம்பெண்ணை கடத்தி சென்ற வாகனம் விபத்து

## ஒருவர் பலி; இருவருக்கு படுகாயம்

கிளிநொச்சியில் இளம்பெண் ஒருவரை கடத்திச் சென்றதாகத் தெரிவிக்கப்படும் டிப்பர் வாகனம் விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் படுகாயம் அடைந்துள்ளனர்.

வட்டக்கச்சி புதுப்பாலம் பகுதியில் அதி வேகமாக வந்த டிப்பர் வாகனம் வாய்க்கால் ஒன்றுக்குள் குடைசாய்ந்த சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துடன் இளம்பெண் ஒருவர் உட்பட்ட இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இதேவேளை, டிப்பர் வாகனத்தை சிலர் மோட்டார் சைக்கிள்களில் துரத்திச் சென்றதாகவும், அதன் போதே டிப்பர் வாகனச் சாரதி அதிவேகமாக வாகனத்தைச் செலுத்தியதால் கட்டுப்பாட்டை இழந்து வாகனம் விபத்துக்குள்ளதாகியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் கிளிநொச்சி நாகேந்திரபுரம் பகுதியைச சேர்ந்த 17 வயதான டிலக்சன் என்ற இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

வாகனத்தில் கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் 23 வயதுடைய இளம் பெண் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு

இது குறித்து கரவெட்டித்திடல் பகுதியைச் சேர்ந்த இப் பெண்ணின் குடும்பத்தார்

06



பாகிஸ்தான் மதஅடிப்படைவாதிகளால் படுகொலை செய்யப்பட்ட பிரியந்த குமாரவின் உடற்பாகங்களடங்கிய பேழை வைக்கப்பட்டுள்ள அன்னாரின் இல்லத்துக்குச் சென்ற பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேக்கர, இறுதி அஞ்சலி செலுத்திய பின்னர் பிரியந்த குமாரவின் மனைவி, குழந்தைகளுடன் உரையாடியபோது.

# யானை –மனித மோதல்களுக்கு தீர்வாக:

# யானை வேலிகளை பாதுகாக்க 5000 சிவில்பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்

## இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

யானை, மனித மோதல்களை தடுப்பதற்கான நிரந்தர தீர்வு அணைகள் கட்டுவதாகும். அவ்வாறு அணை கட்டுவதற்கு 75,000 கோடி தேவைப்படுகிறது என தெரிவித்த இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க, யானை மனித மோதல்களுக்கு தீர்வு காணும் வகையில் யானை வேலிகளை பாதுகாப்பதற்காக மேலும் 5,000 சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நியமிக்க தீர்மானித்துள்ளோம் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தல் நேற்று வரவு செலவு திட்ட குழுநிலை விவாதம் இடம்பெறாத நிலையில் வனஜீவராசிகள் அமைச்சின் திட்டங்கள் மற்றும் மேற்கொண்ட நடவடிக்கைகளை சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

4600 சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த நடவடிக்கைகளுக்காக எதிர்வரும் மாதங்களில் மேலும் 5000 பேர் இணைத்துக் கொள்ளப்பட இருக்கின்றனர்.

அதற்கிணங்க கடந்த 2019ம் ஆண்டில் 407 யானைகளும் 2020 ஆம் ஆண்டில் 328 யானைகளும் 2021 ஆம் ஆண்டில் இதுவரை 333 யானைகளும் மரணமடைந்துள்ளன என தெரிவித்த அவர் ஊடகங்களும் மனித உரிமை அமைப்புகளும் அது தொடர்பில் அமைச்சு மீதே விமர்சனங்களை முன்வைக்கின்றன என தெரிவித்தார்.

யானைகள் இயற்கையாக மரணிப்பதையும் மோதல்களில் எண்ணிக்கையுடன் சேர்த்து எதிர்க்கட்சி மற்றும் சில அமைப்புகள் விமர்சனங்களையும் குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்து வருகின்றனர். அது முற்றிலும் தவறானது பெருமளவு யானைகள் யானை மனிதர்களின் மோதல்களிலன்றி இயற்கை மரணம் மூலமாகவும் அனர்த்தங்களிலுமே மரணமடைகின்றன என தெரிவித்தார்.

# தமிழ் ஊடகவியலாளரது பாதுகாப்பை உறுதி செய்யவும்

## அரசிடம் ஜ.ம.மு தலைவர் ரவிக்குமார் கோரிக்கை

**கொழும்பு கோட்டை தினகரன் நிருபர்**



தமிழ் ஊடகவியலாளர்களை பாதுகாக்க அரசாங்கம் முன்வரவேண்டுமென புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் என்.ரவிக்குமார் கேட்டுள்ளார்.

இதுகுறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:

மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதை ஒருசில நீதிமன்றம் தடைவிதித்திருந்தபோதும் ஒருசில நீதிமன்றங்கள் அனுஷ்டிப்பதற்கு அனுமதியளித்தன.எது எவ்வாறாக இருந்தாலும் நீதிமன்றம் தீர்ப்புகளை புறக்கணித்து மாவீரர் தினம் அனுஷ்டித்திருந்தமையை காணமுடிந்தது.

இதேநேரம் முள்ளிவாய்க்கால் மாவீரர் நிகழ்வுக்கான செய்திகளை சேகரிக்கச் சென்ற தமிழ் ஊடகவியலார் ஒருவர் அங்கிருந்த இராணுவ முகாமில் கடமைபுரிந்த இராணுவ வீரரால் தாக்கப்பட்டு முல்லைத்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. வல்வட்டித்துறையைச் சேர்ந்த ஜெயச்சந்திரன் சுலக்சன் என்பவர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கு சென்றபோது அங்கு கடமைபுரியும் பொலிஸார் ஒருவரினால் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டுள்ளார். இவ்வாறான செயற்பாடுகளை புதிய ஜனநாயக மக்கள் முன்னணி மிக வன்மையாகக் கண்டிக்கின்றது.

ஊடக சுதந்தரம் முழுமையாக பின்பற்றப்படும் இந்நாட்டில் முள்ளிவாய்க்காலில் செய்தி சேகரிக்கச் சென்ற சுலக்ஷன் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் ஊடக சுதந்திரத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது.

இவ்வாறு தாக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு அனுமதியளித்தது யார்? இதன் பின்னணியில் தமிழ் அரசியல் கட்சிகளோ அல்லது எதிர்க்கட்சியோ இருக்கலாம் என எண்ணத்தோன்றுகின்றது.

இது சர்வதேச அளவில் இலங்கைக்கு இருக்கும் நற்பெயரைக் கெடுக்கும் செயற்பாடாகும். எது எவ்வாறாக

06

# அதிரடியாக வாகன கடத்தல்; சந்தேக நபரை தேடும் பொலிஸ்




மாவனெல்லை, வலகடயாய பகுதியில் கடந்த 02ஆம் திகதி சுமார் 04 மில்லியன் ரூபா பெறுமதியான வெகன்ஆர் ரக கார் மற்றும் 04 கையடக்க தொலைபேசிகளை கொள்ளையிட்டுச் சென்ற சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை கைது செய்வதற்கான விசாரணைகளை மாவனெல்லை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். அதன்படி, சந்தேகநபர் தெஹிவளை நிகபோவ வீதியில் வசித்து வருபவரென பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேக நபர் தொடர்பில் சீ.சீ.ரி.வி கமராக்களில் பதிவான காட்சிகள் மற்றும் படங்களை பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ளது.

# 2021 ஜனவரி முதல் ஒரு இலட்சம் பேருக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு

இவ்வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் நேற்று வரை 1,01,472 பேர் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளைப் பெற்று சென்றுள்ளதாக இராஜாங்க அமைச்சர் பியங்கர ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

ருமேனியா,சைப்ரஸ், ஜப்பான், துபாய், அபுதாபி, ஜோர்டான் உள்ளிட்ட பல நாடுகளில் வேலை வாய்ப்புகள் உள்ளதாக கூறிய அவர் அதன்படி முதல் கட்டமாக ருமேனியாவுக்கு 20 தொழிலாளர்கள் கடந்த 05ஆம் திகதி புறப்பட்டுச் சென்றதாகவும் இவ்வாரம் கொரியாவுக்கு 33 பேர் செல்லவுள்ளதாகவும் அவர் கூறினார். இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வெளிநாட்டு பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கும் வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார். ஐரோப்பிய நாடான ருமேனியாவில் ஹோட்டல் துறையில் பணியாளர்களுக்கான வேலைவாய்ப்புகள்

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 137.69 | 143.87 |
| கனடியன் டொலர் | 153.47 | 159.60 |
| யூரோ | 223.67 | 232.23 |
| ஜப்பான் யென் | 1.7444 | 1.8137 |
| சிங்கப்பூர் டொலர் | 144.31 | 149.17 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 261.26 | 269.89 |
| சுவிஸ் பிராங்க் | 214.26 | 222.22 |
| அமெரிக்க டொலர் | 198.50 | 202.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 536.42 | கட்டார் ரியால் | 55.53 |
| குவைத் டினார் | 668.53 | சவூதி ரியால் | 53.91 |
| ஓமான் ரியால் | 525.31 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 55.08 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

பிலவ வருடம் கார்த்திகை மாதம் 22ம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஜமாதுல் அவ்வல் பிறை 02

**குறள் தரும் சிந்தனை**

மனந்துயார்க் கெச்சம்நன் றாகும் இனந்து யார்க்கு
இல்லைநன் றாகா வினை

# பெருந்தோட்ட மக்களுக்கு ஆறுதல் தரும் அறிவிப்பு

'இந்தியாவின் வீட்டு உதவித் திட்டத்தின் கீழ் பத்தாயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் நடவடிக்கை அடுத்துவரும் மூன்று மாதங்களில் மூன்று கட்டங்களாக ஆரம்பிக்கப்படும்' என்று குறிப்பிட்டுள்ள தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், 'நாலாயிரம் வீட்டுத் திட்டம் இவ்வருட இறுதிக்குள் முழுமைப்படுத்தப்படும்' எனவும் பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்திருக்கிறார்.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டக் குழு நிலை விவாதத்தில் தமது அமைச்சுக்கான நிதியொதுக்கீட்டு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு அறிவித்திருக்கின்றார்.

இராஜாங்க அமைச்சரின் இந்த அறிவிப்பு வீடு குறித்த மலையகப் பெருந்தோட்ட மக்களின் நீண்ட கால எதிர்பார்ப்புக்கும் ஆதங்கத்திற்கும் ஆறுதலாகவும் நம்பிக்கையாகவும் அமைந்துள்ளது. இலங்கையின் மலையகப் பெருந்தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் இந்நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பே பெருந்தோட்டங்களில் பணியாற்றுவதற்காக இங்கு அழைத்து வரப்பட்டவர்கள் ஆவர். அவர்கள் நூற்று ஐம்பது வருடங்களுக்கும் மேலாக இந்நாட்டில் வாழ்கின்றார்கள். இவர்கள் இந்நாட்டின் குடியுரிமை பெற்றுள்ள பிரஜைகளுமாவர்.

அதேநேரம் இந்நாட்டுக்கு அந்நிய செலாவணியை ஈட்டித் தரும் பிரதான துறைகளில் ஒன்றாக விளங்கும் தேயிலை, இறப்பர் தோட்டங்களில் தொழிலாளர்களாகப் பணியாற்றி வரும் இத்தொழிலாளர்கள், இந்நாட்டுக்கு அந்நிய செலாவணியை உழைத்துப் கொடுப்பதற்காக வியர்வை சிந்தி அயராது உழைத்து வருகின்றனர். அத்தோடு இவர்கள் இந்த மண்ணுக்கே உரமாகிப் போகின்றார்கள்.

இவ்வாறு இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு அளப்பரிய பங்களிப்பை நல்கி வரும் இந்த மக்களின் வாழ்க்கைத் தரமோ வாழ்வாதாரமோ இற்றை வரையும் குறப்பிடத்தக்களவில் முன்னேற்றம் அடைந்ததாக இல்லை. அந்த மக்களின் லயன் அறை வாழ்வு இந்நாடு சுதந்திரமடைந்து ஏழு தசாப்தங்கள் கடந்துள்ள போதிலும் கூட முற்றுப் பெறாததாகவே உள்ளது. அவர்களது அவல வாழ்வு நீடித்த வண்ணமே இருக்கின்றது.அதேநேரம் இந்நாட்டில் ஒரு துண்டு நிலம் கூட சொந்தமாகக் கொண்டிராதவர்களாக இம்மக்கள் இருந்து கொண்டிருக்கின்றனர்.

இந்நாட்டுக்கு அந்நிய செலாவணியைத் தேடித் தரும் முக்கிய துறையில் பணியாற்றும் இம்மக்களின் அவல நிலையைப் போக்குவதற்காகவும் லயன் அறை வாழ்வை முடிவுக்கு கொண்டு வருவதற்காகவும் கடந்த காலங்களில் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கடந்த ஆட்சிக் காலத்தில் ஏழு பேர்ச் காணியுடன் தனி வீடு அமைத்துக் கொடுக்கும் திட்டம் இந்திய உதவியுடன் முன்னெடுக்கப்பட்டது. ஆனால் 699 வீடுகள் மாத்திரம் தான் மக்களிடம் கையளிக்கப்பட்டு இருக்கின்றன. மின்சாரம், குடிநீர், வீதி உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டவை தான் முழுமையான வீட்டுத்திட்டமாக அமையும். இதை விடுத்து கட்டடத்தை மாத்திரம் கட்டி விட்டு வீட்டைக் கட்டி விட்டதாகக் கூற முடியாது.

அந்த வகையில் தற்போதைய அசாங்கம் பதவிக்கு வந்த கடந்த ஒரு வருட காலப் பகுதிக்குள் 1936 வீடுகளுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு பெருந்தோட்ட மக்களிடம் அவ்வீடுகள் கையளிக்கப்பட்டிருக்கின்றன. அத்தோடு இம்மாத இறுதிக்குள் மேலும் 2064 வீடுகளுக்கான அடிப்படை வசதிகள் முழுமைப்படுத்தப்பட உள்ளன.

இவை இவ்வாறிருக்க ஏழுப் பேர்ச் காணியை பத்து பேர்ச் காணியாக வழங்கவும் தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கின்றது. அதனால் குறித்த மூன்று பேர்ச்சஸ் காணியில் சுய தொழில் உற்பத்திகளில் ஈடுபடவும் தொழிலாளர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இவ்வாறான சூழலில் இந்திய அரசாங்கத்தின் வீட்டுத் திட்டத்தின் கீழ் மலையகப் பெருந்தோட்ட மக்களுக்காகக் கிடைக்கப்பெற்றுள்ள 10 ஆயிரம் வீடுகளை அடுத்த மூன்று மாதங்களில் மூன்று கட்டடங்களில் நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

இந்த நடவடிக்கையானது மலையகப் பெருந்தோட்ட மக்களின் லயன் அறை வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உண்மையில் அந்த மக்களின் தற்போதைய லயன் அறை வாழ்வு முடிவுக்கு கொண்டு வரப்பட்டு அவர்களது வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தப்பட வேண்டும். அதுவே எல்லோரதும் விருப்பமாகும். அந்த வகையில் இந்த வீடமைப்பு திட்டம் இதற்கு பெரிதும் பக்கத் துணையாக அமையும் என்பது தான் மக்களின் கருத்தாக உள்ளது. இன்றைய நவீன யுகத்தின் தேவையும் அதுவேயாகும்.

editor.tkn@lakehouse.lk

# மத அடிப்படைவாதத்தை ஒழிப்பதற்கு உலக நாடுகள் ஒன்றுபட வேண்டும்!

கடந்த வெள்ளிக்கிழமை தினமானது 'பாகிஸ்தான் வெட்கப்பட வேண்டிய தினம்' என அந்நாட்டுப் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்திருந்தார். அதற்குக் காரணம் அந்நாட்டின் சியல்கொட் மாவட்டத்தில் தொழிற்சாலை ஒன்றுக்கு அருகில் இலங்கையர் ஒருவர் கொடூரமாக தாக்கப்பட்டு, உயிருடன் எரிக்கப்பட்ட சம்பவமாகும். உலகையே அதிர்ச்சிக்கும் கவலைக்கும் உள்ளாக்கிய மனிதநேயமற்ற காட்டுமிராண்டித்தனமானதும், நாகரிக உலகம் வெட்கித்தலைகுனியும்படியானதும் சம்பவமாக அது அமைந்திருந்தது.

மதவாதவெறியின் உச்சகட்டமாகவே அச்சம்பவத்தை சர்வதேசம் வர்ணித்திருந்தது. மதவாதமும், பயங்கரவாதமும் நிறைந்த மண்ணில்தான் இவ்வாறான காட்டுமிராண்டித்தனங்கள் அரங்கேற முடியும். இவ்வாறான கொடூரத்தில் ஈடுபட்டவர்களை மனித குலத்துக்குள் உள்ளடக்க முடியாது. அவர்கள் கொடிய மிருக இனத்துக்குள்ளேயே உள்ளடக்கப்பட வேண்டியவர்களாவர். மனித குலத்துக்கென்று பொதுவான இயல்புகள் உள்ளன. அவர்கள் நிச்சயமாக மனித குலத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். மனிதர்களையும் குரூரமாக கொல்லும் கொடிய விலங்குகளே அவர்களாவர் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.




**மனித குலத்துக்கு ஒவ்வாத காட்டுமிராண்டித்தனங்கள் தடுக்கப்படுவதுடன், பாகிஸ்தானில் தொழில் புரியும் இலங்கையர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவும் வேண்டும்**



இது போன்ற கொடிய காட்டுமிராண்டித்தனங்களை ஒழிப்பதற்கு உலக நாடுகள் அனைத்துமே ஒன்றுபட வேண்டும். அதுவே தற்போது அவசியம்.

இக்கொலையுடன் தொடர்புபட்ட அனைவருக்கும் உயர்ந்தபட்ச தண்டனை பெற்றுக் கொடுப்பதாகவும், சுயாதீன நேரடி கண்காணிப்பின் கீழ் வழக்கு விசாரணையை நடத்தவுள்ளதாகவும் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார். இலங்கையுடன் நெருங்கிய தொடர்பினை பேணும் பிரதமர் இம்ரான் கான் மத அடிப்படைவாதத்தை எதிர்க்கும் தலைவராகவும் பிரபலமாக உள்ளார். அதனால் கொலை செய்யப்பட்ட பிரியந்த குமாரவுக்கு நியாயம் கிடைக்கும் என நம்பிக்கை கொள்ள முடியும்.

பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையே நீண்ட கால நட்பு காணப்படுகின்றது. இம்ரான்கான் பிரதமராக பதவி ஏற்றதன் பின்னர் அந்த நட்பு மேலும் பல மடங்கு பலம் அடைந்துள்ளது எனக் கூறலாம். இம்ரான்கான் கிரிக்கெட் வீரராக இருந்த காலம் தொடக்கம் இலங்கையை நேசித்த ஒருவர் என்பது இரகசியமான விடயமல்ல. இலங்கையில் நண்பர்கள் பலர் அவருக்கு இருக்கின்றார்கள்.

மத அடிப்படைவாதிகளின் இந்தக் கொலைச் சம்பவமானது பிரதமரையும் மற்றும் பாகிஸ்தானையும் பிரச்சினைக்கு உட்படுத்தியுள்ளது. மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச அமைப்புகள் பல இலங்கையரின் காட்டுமிராண்டித்தனமான கொலை தொடர்பாக தமது கவனத்தை செலுத்தி உள்ளன. பலம் வாய்ந்த நாடுகள் கூட இச்சம்பவம் தொடர்பாக தமது கவனத்தை செலுத்தி உள்ளன. இதன் மூலம் தெரிவது என்னவென்றால் குற்றவாளிகள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்க இடமில்லை என்பதாகும்.

இங்கு மூன்று பிரதான விடயங்கள் குறித்து அனைவரும் கவனிக்க வேண்டும். ஒன்று பிரியந்த குமார மற்றும் அவரின் குடும்பத்தாருக்கு நீதியும் நியாயமும் கிடைக்க வேண்டும். இரண்டாவது பாகிஸ்தாணில் பணிபுரியும் ஏனைய பணியாளர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். மூன்றாவது மத அடிப்படைவாத அமைப்புகள் மற்றும் அவர்களின் குரூரத்தனமான நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

பிரியந்த குமாரவுக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர். அவர்களின் எதிர்காலம் பாதுகாக்கப்பட வேண்டும். பாகிஸ்தானில் தொழிற்சாலைகளில் மற்றும் வேறு இடங்களிலும் அதிகளவு இலங்கையர்கள் பணிபுரிகிறார்கள். அவர்கள் ஆபத்தில் உள்ளார்கள் என்றே கூற வேண்டும். அனைத்து நாடுகளும் மத அடிப்படைவாதத்தை நிராகரிக்க வேண்டும்.

இந்தச் சம்பவம் பற்றி அறிந்தவுடன் ஜனாதிபதி காரியாலயம் உடனடியாக செயல்பட்டு பாகிஸ்தான் அரசிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்தது. அதில் சட்டத்தை சரியான முறையில் செயல்படுத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதோடு இலங்கைப் பணியாளர்களுக்கு பாதுகாப்பை வழங்குவதும் அந்நாட்டின் முக்கிய கடமை என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

பாகிஸ்தானின் இலங்கை உயர்ஸ்தானிகராலயம் உடனடியாக இச்சம்பவம் தொடர்பாக கவனம் செலுத்தாத போதும், அந்நாட்டின் பாதுகாப்புப் பிரிவு உடனடியாக செயல்பட்டு பல நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு 124 பேருக்கும் அதிகமானோரை கைது செய்துள்ளது. பிரியங்க குமாரவின் உடற்பாகங்கள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இலங்கையின் தொண்டர் அமைப்புகள் பல பாகிஸ்தானின் உயர்ஸ்தானிகராலயத்திற்கு சென்று பல மகஜர்களை கையளித்துள்ளன. அம்மகஜர்களில் குரூரக் கொலைக்கு சரியான தண்டனையை பெற்றுக் கொடுத்து நியாயத்தை நிலைநாட்டும்படி கோரப்பட்டுள்ளது. கொலையுண்ட பிரியந்த குமாரவுக்கும் மற்றும் அவரது குடும்பத்தாருக்கும் நீதி நிலைநாட்டப்பட வேண்டும். அத்துடன் அவர்களை இச்சந்தர்ப்பத்தில் தனிமைப் படுத்துவது நல்லதல்ல.

பாராளுமன்றத்திலும் இது தொடர்பாக விவாதிக்கப்பட்டது. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு ,கைத்தொழில் அமைச்சு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் என்பன சம்பவம் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தியுள்ளதை காணக் கூடியதாக உள்ளது. இதேவேளை பாகிஸ்தானின் தொண்டர் அமைப்புகள் சில சம்பவத்துக்கு எதிராக 'SORRY SRILANKA' என பதாகைகளை தாங்கியவாறு சம்பவத்துக்கு எதிராக செயல்பட்டதை காணக் கூடியதாக இருந்தது. இதற்கு முன்னரும் பல சந்தர்ப்பங்களில் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள். சிலர் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். ஒருசிலர் சட்டத்தால் குற்றவாளிகளாக்கப்பட்டு மரண தண்டனைக்கு முகம் கொடுத்துள்ளார்கள். ஒருசிலர் மதஅடிப்படைவாதிகளின் பணயக் கைதிகளாகியுள்ளார்கள். ஒவ்வொரு நாட்டிலும் செயல்படும் மதஅடிப்படைவாத பயங்கரவாதம் மட்டுமல்ல, சில சட்டங்கள் காரணமாகவும் துரதிர்ஷ்டமான சம்பவங்கள் நிகழ்வது தெளிவாகின்றது. வெளிநாடுகளில் பணிபுரியும் இளைஞர்களுக்கு அந்நாடுகளின் யதார்த்த தன்மை தொடர்பாக புரிந்துணர்வு இல்லாமை பிரச்சனைகளுக்கு உள்ளாவதற்கான காரணமாக தெரிகின்றது. இலங்கையில் காணப்படும் சுதந்திர மற்றும் சமாதானமான சூழல் அநேகமான நாடுகளில் இல்லை. அது பற்றிய சரியான புரிந்துணர்வுடன் வெளிநாட்டுப் பணிகளில் இணைவது முக்கியமாகும்.

**வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் இதற்கு முன்னரும் பல சந்தர்ப்பங்களில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள். சிலர் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். ஒருசிலர் சட்டத்தால் குற்றவாளிகளாக்கப்பட்டு மரணதண்டனைக்கு முகம் கொடுத்துள்ளார்கள். ஒருசிலர் மதஅடிப்படைவாதிகளின் பணயக் கைதிகளாகியுள்ளார்கள். ஒவ்வொரு நாட்டிலும் செயல்படும் மதஅடிப்படைவாத பயங்கரவாதம் மட்டுமல்ல, சில சட்டங்கள் காரணமாகவும் துரதிர்ஷ்டமான சம்பவங்கள் நிகழ்வது தெளிவாகின்றது**




மரணமடைந்த பிரியந்த குமார தொடர்பாக கவலையடைவதுடன் அவர் குறித்து பெருமையும் அடையலாம். அவர் பாகிஸ்தானுக்கு சென்று அங்கு ஒரு தொழிற்சாலையில் தலைமை நிறைவேற்று அதிகாரியாக பதவி உயர்வு பெற்ற ஒருவராவார். அவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டம் பெற்றவர். திறமையும், சாந்தமும் மிக்க ஒருவர். முன்மாதிரியான குடும்பத் தலைவர் அவர். அவர் அந்நிறுவனத்தின் வளர்ச்சிக்காக நேர்மையாக பணி புரிந்தவர் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

தொழிற்சாலையில் முன்னொரு தடவை மேற்கொள்ளப்பட்டிருந்த வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அவர் முயற்சி மேற்கொண்டு அதில் வெற்றியும் அடைந்தவர். அவரது திறமைகள் மற்றும் நற்குணங்களுக்காக இலங்கையர்களென்ற ரீதியில் நாம் பெருமைப் படலாம். இச்சம்பவத்தில் இரண்டு நாடுகளுக்கும் இடையேயான நட்புக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைவரும் முயற்சி செய்ய வேண்டும்.

சிங்கள மொழிமூலத்திலிருந்து தமிழில்: வயலட்

# இந்தியாவில் நேற்று வரை 23 பேருக்கு ஒமிக்ரோன்

இந்தியாவில் நேற்று வரை 23 பேர் ஒமிக்ரோன் வைரசால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிகபட்சமாக மகாராஷ்டிரத்தில் 10 பேரை இந்த வைரஸ் தாக்கி உள்ளது. சீனாவின் வுகான் நகரில் 2019ம் ஆண்டு டிசம்பர் மாதம் கொரோனா வைரஸ் ஏற்பட்டு உலகம் முழுவதும் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. அந்த வைரஸ் பல வகைகளில் உருமாற்றம் அடைந்து அச்சுறுத்தலாக விளங்கி வருகிறது.

## மூன்றாவது அலை உருவெடுக்குமா?

இந்த நிலையில் தென் ஆபிரிக்காவில் கண்டறியப்பட்ட ஒமிக்ரோன் வைரஸ் 35க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு பரவியுள்ளது. இந்த வகை வைரஸ் டெல்டா வைரசைவிட 10 மடங்கு பரவும் தன்மை கொண்டதால் பீதி ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் நேற்று வரை 23 பேர் ஒமிக்ரோன் வைரசால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிகபட்சமாக மகாராஷ்டிரத்தில் 10 பேரை இந்த வைரஸ் தாக்கியுள்ளது. ராஜஸ்தான் 9, கர்நாடகம் 2, குஜராத் 1, டெல்லி 1 ஆகிய மாநிலங்களிலும் இந்த வைரஸ் பரவி உள்ளது.

இதேவேளை இந்தியாவில் கடந்த சில நாட்களாக கொரோனா வைரசின் பாதிப்பு அதிகரித்து வருகிறது. ராஜஸ்தான், கேரளா, டெல்லி, கர்நாடகா, தமிழ்நாடு, ஜம்முகாஷ்மீர், ஒடிசா மற்றும் மிசோரம் உள்பட 9 மாநிலங்களில் உள்ள 50 மாவட்டங்களில் கடந்த 10 தினங்களில் பாதிப்பு அதிகரித்து உள்ளது. இதன் காரணமாக இந்தியாவில் 3வது அலை ஏற்படலாம் என்று நிபுணர்கள் எச்சரித்து இருந்தனர். ஒமிக்ரோன் வைரசால் 3வது அலை பாதிப்பு ஏற்படுமா? என்பது சில வாரங்களில் தெரியும் என்று மகாராஷ்டிர மாநிலத்தை சேர்ந்த டாக்டர்கள் கருத்து தெரிவித்து இருந்தனர்.

இந்த நிலையில் ஒமைக்ரான் கொரோனா வைரசால் மக்கள் பீதி அடைய வேண்டாம். 3வது அலை வர வாய்ப்பு இல்லை என்று பொது சுகாதாரத்துறை நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். தொற்று நோயியியல் நிபுணரும், சுகாதார அமைப்புகளின் நிபுணருமான டொக்டர் சந்திரகாந்த் லகாரியா இது தொடர்பாக கூறியதாவது:

அறிகுறியற்ற அல்லது லேசான அறிகுறிகள் கொண்டவர்களை உள்ளடக்கிய சோதனை அதிகரிப்பால் பாதிப்பு அதிகமாக ஏற்படுகிறது.

இதுவரை கிடைக்கப்பட்ட மாறுபாடு பற்றிய தகவலின் அடிப்படையில் மக்கள் பீதி அடைய தேவையில்லை. 3வது அலைக்கு இப்போது சாத்தியமில்லை. சில மாவட்டங்களில் பரிசோதனைகள் மூலம் பாதிப்பு எண்ணிக்கை ஓரளவு உயரும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஒமிக்ரோன் பரவல் குறித்து நாம் கவலைப்பட தேவையில்லை.

# கிழக்கு பிராந்தியத்தின் டிஜிட்டல் தொழில்நுட்ப விழிப்புணர்வு மாநாடு

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் (ICTA) இலங்கையை டிஜிட்டல் உள்ளடக்கிய தேசமாக மாற்றுவதை இலக்காகக் கொண்ட டிஜிட்டல் மாற்றத்தின் முன்னோடி நிறுவனமாகும். அது தொழில்நுட்ப அமைச்சு, தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு (TRCSL), தொலைத்தொடர்பு பங்காளிகள் மற்றும் தொழில் பங்காளிகளுடன் இணைந்து தேசிய டிஜிட்டல் நடைமுறை நிகழ்ச்சி நிரலைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஒரு நாள் விழிப்புணர்வு நிகழ்வை தொடங்கியது. இது பிராந்திய பங்காளிகளையும் ஈடுபடுத்திய ஒரு நிகழ்வாகும்.

கிழக்கு பிராந்திய விழிப்புணர்வு நிகழ்வு ICTA இனால் தொடங்கப்பட்ட ஐந்து பிராந்திய ஈடுபாட்டு திட்டங்களில் நான்காவது ஆகும். முதல் பிராந்திய அபிவிருத்தி விழிப்புணர்வு நிகழ்வு வடக்கு பிராந்தியத்தை மையமாகக் கொண்டு ஜூன் மாதம் ஏற்பாடு செய்யப்பட்டது. இரண்டாவது மற்றும் மூன்றாவது பிராந்திய நிகழ்வுகள் தெற்கு மற்றும் மத்திய பிராந்தியங்களிலும் வெற்றிகரமாக நடைபெற்றன. இந்த ஆண்டில்

அண்மையில் நடைபெற்ற முக்கிய பங்குதாரர் மன்றத்தில் பங்கேற்பாளர்கள் நேரடியாகவும் ஒன்லைன் மூலமும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வு சிங்களம், தமிழ் மற்றும் சைகைமொழிகளில் விளக்கப்பட்டது, இது அதிக பார்வையாளர்களை சென்றடைவதை உறுதி செய்வதற்கான ஒரு ஏற்பாடாகும். அரசாங்க மன்றமும் அன்றைய தினம் இடம்பெற்றது டன் கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களைச் சேர்ந்த மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் பிரசன்னத்துடன் நடத்தப்பட்டது.

தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் ஜயந்தடி சில்வா, பங்குதாரர்களின் ஆதரவும் ஈடுபாடும்

## டிஜிட்டல் மயமான இலங்கை தேசத்தை உருவாக்கும் திட்டம்

மேற்கு பிராந்தியத்தில் மேலும் ஒரு விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற உள்ளது.

1500 இற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கிழக்கு பிராந்திய வீதிக்கண்காட்சியில் கலந்து கொண்டதுடன் கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகளைச் சந்தித்தனர். இந்த முன்முயற்சி கிழக்கு பிராந்தியத்தில் உள்ள அரசு நிறுவனங்கள், தொலைத்தொடர்பு மற்றும் தொழில்நுட்பத்துறை அதிகாரிகள், விவசாயம், கல்வி மற்றும் பிற தொழில்களில் பணிபுரியும் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் போன்ற பங்குதாரர்களுடன் ஒத்துழைப்பதில் கவனம் செலுத்துகிறது. புதிய மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களை, நிபுணர்கள் மூலம் அறிமுகப்படுத்தவும், புதிய தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு தேவையான உள் கட்டமைப்புகளை வழங்கவும் இது உதவும்.

ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது என்றும், நாடு முழுவதும் பிராந்திய ரோட்ஷோக்களை நடத்துவது மற்றொரு நோக்கமாகும் என்றும் கூறி அமர்வை ஆரம்பித்து வைத்தார்.

அவர் மேலும் கூறுகையில், "மக்களுக்கு நட்புடனான, எவ்வேளையும் தொடர்பு கொள்ள ஏற்புடையதாக அரசாங்கத்தை மாற்றியமைப்பதற்கு உதவும் ஒரு கருவியை உருவாக்க ICTA முயற்சிக்கின்றது" என்றார்.

ICTA தலைவரும் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் (TRC) பணிப்பாளர் நாயகமுமான ஓஷத சேனாநாயக்க உரையாற்றுகையில் "நாங்கள் கடந்த சில வருடங்களாக 5 பில்லியன் டொலர் பொருளாதாரத்தைப் பற்றி பேசி வருகிறோம். இன்று, 3 பில்லியன் டொலர்களுக்கு ICT தொழிற்துறையினால் முன்னேறி, ஏற்றுமதி வருவாயை உருவாக்க முடியும் என்று நாங்கள் நம்புகின்றோம்" என்றார். ICTA பிரதம நிறைவேற்று அதிகாரி மஹிந்த பி. ஹேரத், ICTA நாடு முழுவதும் டிஜிட்டல் மாற்றத்தை மூலோபாயப்படுத்துவதற்கும் இயக்குவதற்கும் நிர்ணயப்படுத்திய நிறுவனமாகும் என்றார்.




டிஜிட்டல் அரசாங்கம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் ஆகிய இரண்டு முக்கிய விடயங்களை அடிப்படையாகக் கொண்ட தேசிய டிஜிட்டல் உருமாற்ற உத்தி பற்றியும் அவர் பேசினார்.

"சுற்றுச்சூழல் அமைப்பில் உள்ள அனைத்து பங்குதாரர்களின் ஆதரவுடனும் உதவியுடனும் ICTA ஆனது இந்த நாட்டின் டிஜிட்டல் மாற்றத்தை வழிநடத்துகிறது மற்றும் ஒழுங்கமைக்கிறது" என்று கூறி தன் உரையை நிறைவு செய்தார்.

தலைமை டிஜிட்டல் பொருளாதார அதிகாரி அனுர டி அல்விஸ், ICTA க்குள் டிஜிட்டல் பொருளாதாரத்தின் பங்குபற்றி பேசினார். "ஏற்றுமதி மேம்பாடு, தொழில்நுட்பப் பரவல் மற்றும் தொடக்க சுற்றுச்சூழல் அமைப்பை மேம்படுத்துதல் உள்ளிட்ட, 2024 ஆம் ஆண்டிற்குள் கிழக்கு பகுதிக்கான பயணம் மற்றும் தேசிய இலக்குகளை அடைய திட்டமிடப்பட்டுள்ளது. எங்கள் தொழில் துறையானது தயாரிப்பு மற்றும் உயர்தர பொறியியலில் இருந்து பெறப்படும் ஏற்றுமதி வருவாயில் 35% இருப்பதை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம். எங்கள் சொந்த ஐ.பிகள், எங்களின் தனித்துவமான தயாரிப்புகள் மற்றும் சேவைகளை உலகிற்கு கொண்டு வருவதன் மூலம் மட்டுமே நாம் உலக அளவில்போட்டியிட முடியும்" என்றார் அவர்.

கிழக்கு ஸ்டார்ட்அப் ஹப்பின் உத்தியோகபூர்வ அறிமுகமும் நிகழ்வில் இடம்பெற்றது. சுற்றுச்சூழல் அபிவிருத்திப் பணிப்பாளர் சசீந்திர சமரரத்ன கூறுகையில், 2016 ஆம் ஆண்டில் ஊவா மாகாணத்தில் முதன் முதலாக ஒரு ஸ்டார்ட் அப் ஹப் ஒன்றுக்கு ICTA ஆதரவளித்தது. மேலும் கிழக்கு மாகாணமானது ஸ்டார்ட் அப்கள், இன்குபேட்டர்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஃப்ரீலான்ஸர்கள் என ஒன்றிணைந்து தங்களது சொந்த ஸ்டார்ட் அப் ஹப்பை தொடங்குவதற்கு கைகோர்த்து வருவதைக் கண்டு பெருமையடைகிறேன் என்றார்.

கிழக்கு பிராந்தியத்தில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்வதில் இரு நிறுவனங்களுக்கிடையிலான பங்காளித்துவத்தை குறிக்கும் வகையில் கிழக்கு பிராந்திய திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய இரு வர்த்தக சபைகளினால் ICTA உடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இந்த தேசிய முயற்சியில் இணைந்த அனைத்து பங்காளிகளுக்கும் சிறப்பு நன்றி தெரிவிக்கப்பட்டது. தொழில்நுட்ப அமைச்சு, அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டச் செயலாளர்கள், தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு, டயலொக் அக்சியாடா லிமிட்டட், ஸ்ரீலங்கா டெலிகொம்

மற்றும் மொபிடெல், பாரதி ஏர்டெல் லங்கா லிமிடெட், ஹட்சிசன் டெலிகாம் ஸ்ரீலங்கா, லங்காபெல் லிமிடெட், SL மென்பொருள் சேவை நிறுவனங்கள் (SLASSCOM), இலங்கைத கவல் தொழில்நுட்பகூட்டமைப்பு(FITIS), தலைவர் பிரிட்டிஷ் கணினி சங்கம் (BCS), CSSL, SLINTEC, SLIBTEC, மற்றும் அனைத்து அரசு மற்றும் தனியார் துறை மற்றும் கிழக்கு பிராந்தியத்தில் இருந்து இணைந்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. தகவல் தொடர்பு நிர்வாகக்குழுவுடன் இணைந்து RCD குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வை வெற்றிகரமாக நடத்துவதற்கு ICTA அதிகாரிகளின் மகத்தான முயற்சிக்கு பாராட்டு மற்றும் சிறப்பு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

## அரச வானொலி விழாவில் விருது;

# அம்பாறை மாவட்ட தமிழ்ப் பட்டறை இலக்கியப் பேரவையினால் பிறை எப்.எம்.வானொலி அறிவிப்பாளர்களுக்கு பாராட்டு விழா

இம்முறை நடைபெற்ற அரச வானொலி விருது விழாவில் விருதினைப் பெற்றுக் கொண்ட இலங்கை வானொலி பிராந்திய சேவையான பிறை எப்.எம்.வானொலி அறிவிப்பாளர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அம்பாறை மாவட்ட தமிழ்ப் பட்டறை இலக்கியப் பேரவையினால் நடத்தப்பட்டது.

அம்பாறை மாவட்ட தமிழ்ப் பட்டறை இலக்கியப் பேரவையின் தலைவர் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஹனீபா இஸ்மாயில் தலைமையில் ஒலுவில் கிறீன் விலா அரங்கில் இடம்பெற்ற இந்நிகழ்வின் போது இலங்கை வானொலி பிறை எம்.எம்.சேவை நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பசீர் அப்துல் கையூம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

பட்டயக் கணக்காளர் ஏ.எல். அமீன் கௌரவ அதிதியாய் கலந்து கொண்ட இந்நிகழ்வின் போது தேசிய வானொலி விருது பெற்ற பிறை எப்.எம். சேவை நிலையத்தில் சேவையாற்றும் அறிவிப்பாளர்களான எம்.ஏ.றமீஸ் மற்றும் ஜே.வஹாப்தீன் ஆகியோர் பொன்னாடை போரத்தி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இலங்கையின் வானொலி ஊடகத்துறையில் ஈடுபட்டிருக்கும் கலைஞர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் வகையில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட அரச வானொலி விருது விழா 2021



அண்மையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதற்கமைவாக, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிறை எப்.எம். சேவைக்கு இரண்டு விருதுகள் கிடைக்கப் பெற்றன. பிறை எப்.எம்.வானொலி சேவை நிலையத்தில் கடமையாற்றி வரும் அறிவிப்பாளர் எம்.ஏ. றமீஸ், ஜே.வஹாப்தீன் ஆகியோர் இவ்விருதுகளைப் பெற்றுக் கொண்டனர்.

சிறந்த கலந்துரையாடல் நிகழ்ச்சிக்காக அறிவிப்பாளர், ஆசிரியர் மற்றும் ஊடகவியலாளர் எம்.ஏ.றமீஸ் தெரிவு செய்யப்பட்டதுடன், வானொலி சிறந்த நாடகப் பிரதியாளருக்காக ஆசிரியர் அறிவிப்பாளர் ஜே.வாஹாப்தீன் தெரிவு செய்யப்பட்டு இவ்வாறு தேசிய விருதுகளைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. தமிழ் பட்டறை இலக்கியப் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட கௌரவிப்பு நிகழ்வின் போது ஓய்வு நிலை வலயக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம்.ஹாசீம், ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் வீ.குணாளன், நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் ஓய்வு நிலை மாவட்ட பணிப்பாளர் அக்கரையூர் அப்துல் குத்தூஸ், நில அளவையாளர் ஏ.எல்.முகைதீன்பாவா, ஓய்வு நிலை கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.இராசமாணிக்கம், அக்கரைப்பற்று கல்வி வலய தமிழ்த்துறை ஆசிரிய ஆலோசகர் எம்.ஏ.சவுறுதீன், பிரதி அதிபர் எம்.அப்துல் றஸாக், ஆசிரியர் எஸ்.ஏ.றபியுஸ் மௌலானா, அக்கரைப்பற்று மஸ்ஜிதுல் மீரா நம்பிக்கையாளர் சபைத் தலைவர் பி.ரி.செய்னுலாப்தீன், பிரதேச செயலக உத்தியோகதர் எம்.எச்.ஜெய்னுதீன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(அட்டாளச்சேனை தினகரன் நிருபர்)...

# நீண்ட இலக்கிய வாழ்வு வாழ்ந்து மறைந்து விட்டார் கணேசலிங்கன்

கணேசலிங்கன் மறைந்து விட்டார். நீண்ட இலக்கிய வாழ்வை வாழ்ந்து விட்டு மறைந்து விட்டார். கடந்த பதினைந்து ஆண்டுகளில் அவரோடு அதிகமாக பழக நேரிட்டது. அயராமல் அவர் படித்துக் கொண்டே இருந்ததை நான் கண்டிருக்கிறேன். அறிந்திருக்கிறேன்.

தினமும் எங்களது அலுவலகத்தில் மதிய உணவை முடித்து விட்டு, என். ராம் அவர்களை சந்தித்து விட்ட பிறகு, என்னுடைய cabin இற்கு வந்து, தொலைக்காட்சியில் செய்திகளை பார்ப்பதை வாடிக்கையாக வைத்திருந்தார். அப்பொழுது என்னுடன் பலவிதமான அரசியல் நிகழ்வுகளைப் பற்றி விவாதிப்பார். ஆங்கில மொழியில் உள்ள நுணுக்கங்களைக் கூறுவார். சந்தேகங்களை அவரிடம் கேட்கலாம். அவர் விளக்கமளிப்பார். நான் எழுதியதை அவரிடம் படித்து காண்பித்தால், பிழைகள் அல்லது பொருத்தமற்ற வார்த்தைகள், சொற்றொடர்கள் இருப்பின் அவற்றைத் திருத்துவார்.

என்னைப் போன்ற மற்றொரு தலைமுறையைச் சார்ந்தவருடன் விவாதிப்பது அவருக்கு சகஜமாக இருந்தது. இலங்கையில் ஜனவரி 2010 மற்றும் ஜனவரி 2015 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களைப் பற்றி அதிகமாக விவாதித்துள்ளோம்.

என்னிடம் தனிக் கவனமும் அன்பும் செலுத்திய கணேசலிங்கன், நான் 'தி இந்து' அலுவலகத்தில் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு சேர்ந்த பொழுதிலிருந்தே என்னை தொலைவிலிருந்து கவனித்து வந்துள்ளார்.

ஆரம்ப காலக்கட்டத்தில் என் தந்தையிடம் "ராமகிருஷ்ணன் சமாளித்து வந்து விடுவான்" என்று ஒருமுறை கூறியுள்ளார். அப்



பொழுது அவரை எனக்கு அதிகம் தெரியாது.

ஜனவரி 2018 இல் '1987 இந்திய_

### 'இந்து'பத்திரிகையில் பணிபுரியும் எழுத்தாளர் இராமகிருஷ்ணனின் (அசோகமித்திரனின் மகன்) பதிவில் இருந்து...

இலங்கை ஒப்பந்தத்தை' பின்னணியாக வைத்து எழுதப்பட்ட 'ஓர் இனப்பிரச்சினையும், ஓர் ஒப்பந்தமும்' என்ற என்னுடைய புத்தகம் வெளியான சமயத்தில், அவரை நான் சந்திப்பது அரிதாகி விட்டது. அப்பொழுது, தற்செயலாக ஒரு நாள் நாங்கள் சந்தித்த பொழுது "நீங்கள் இவ்வளவு நன்றாக தமிழில் எழுதுவீர்கள் என்பது எனக்குத் தெரியாது" என்று கூறினார்.

இலங்கை இனப்பிரச்சினையைப் பற்றி ஒரு முழுமையான புத்தகம் நான் எழுத வேண்டும் என்பதே அவரது விருப்பம்.

ராம் என்னிடம் கூறியது போல, கணேசலிங்கனுக்கு நண்பர்கள் இலங்கை சமூகத்தின் அனைத்து பிரிவுகளிலும் இருந்தனர். இலங்கைக்கு நிருபராக செல்வதற்கு முன்னர் அவரோடு பேசும் பொழுது, " தினேஷ் குணவர்தன அவர்களுடன் (இலங்கையின் தற்போதைய அமைச்சர்) தொடர்பு கொள். எனது பெயரை பயன்படுத்திக் கொள்ளலாம்" என்றார்.

அதைப் போலவே, தினேஷ் குணவர்தன அவர்களுடன் தொடர்பு கொண்டேன். கணேசலிங்கன்தான் அவரைப் பற்றிக் கூறினார் என்று கூறிய பிறகு தினேஷ் என் மீது காண்பித்த அக்கறை மிகவும் அதிகம். அவருடைய வீட்டிற்கு அழைத்து ஒரு heavy breakfast ஐ எனக்கு அளித்தார் தினேஷ் குணவர்த்தன. கொழும்பில் இருக்கும் பொழுது அதிகாலையில் எனக்கு தொலைபேசியில் அழைப்பு வந்தால் அது தினேஷிடம் இருந்து தான் இருக்கும். தனிப்பட்ட ரீதியில் அவ்வளவு இனிமையாக இருப்பவர் தினேஸ்.

பெரியவர் கணேசலிங்கன் மறைந்ததைப் பற்றி என் பத்திரிகைக்காக எழுத நேரிட்டது தற்செயல் என்று மட்டும் என்னால் நினைக்க முடியவில்லை.

## Gas கம்பனிகள்... (03 ஆம் பக்கத் தொடர்)

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் கலந்து கொண்ட அவர் எரிவாயு விவகாரம் குறித்து தெளிவுபடுத்தினார். மேலும் குறிப்பிட்ட அவர், எரிவாயு உற்பத்தி செயற்பாடுகளை நுகர்வோர் பாதுகாப்பு அதிகார நேரில் சென்று மேற்பார்வை செய்கிறது. இறக்குமதி செய்யப்படும் எரிவாயுவை கப்பலிலிருந்து இறக்க முன்னர் குழுவொன்று சென்று மாதிரிகளை பெற்று ஆய்வு செய்து உரிய தரத்தில் இருந்தால் மாத்திரமே கப்பலில் இருந்து எரிவாயுவை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படும். இரு எரிவாயு கம்பனிகளும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் வழிகாட்டல்களை பின்பற்றுகிறதா என தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்படுகிறது.

தொழில்நுட்ப ரீதியான விடயங்கள் இந்த பிரச்சினையில் சம்பந்தப்பட்டிருப்பதால் மொறட்டுவ பல்கலைக்கழக நிபுணர்கள் அடங்கிய குழு நியமிக்கப்பட்டு இது பற்றி ஆராய்ந்து வருகிறது. இரு கம்பனிகளுக்கும் அந்தக் குழு நேரில் சென்று ஆராய்ந்துள்ளது. வெடிப்பு நடந்த இடங்களுக்கும் சென்றுள்ளனர். பரிந்துரைகளை செயற்படுத்துவதில் முன்னுரிமை வழங்கி செயற்படுவோம்.

இந்தப் பிரச்சினையை அரசும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சும் உச்ச அளவில் செயற்பட்டு இதற்கு தீர்வு காண நடவடிக்கை எடுத்து வருகிறது. கடந்த 29 ஆம் திகதி ஒரே நாளில் 16 சம்பவங்கள் நடந்தன. ஜனவரி முதலாம் திகதி முதல் கடந்த மாதம் 29 வரை 28 சம்பவங்கள் நடந்துள்ளன. கடந்த காலத்திலும் இவ்வாறு நடந்துள்ளன. கடந்த காலத்தில் அனைத்து அரசுகளும் நிறுவனங்களும் இது தொடர்பில் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

1960 கள் தொடக்கம் எந்த அரச நிறுவனமும் மேற்பார்வையும் பரிசோதனையும் மேற்கொள்ளப்படவில்லை. கேஸ் உற்பத்தி செயற்பாடுகள்,இறக்குமதி செயற்பாடுகளில் எந்த பாதுகாப்பு முன்னேற்பாடுகளும் பின்பற்றப்படவில்லை. இந்த பொறுப்பில் இருந்து அவற்றுக்கு தப்ப முடியாது. 12.5 கிலோ சிலிண்டரை 18 லீட்டராக மாற்றியதற்கு எதிராக நாம் வழக்கு தொடர்ந்தோம். கட்டாயம் நீதிமன்ற நடவடிக்கை எடுப்போம். வழக்கு நடவடிக்கை எடுப்பதை முறையாக மேற்கொள்ளாவிட்டால் அது கம்பனிகளுக்கு சாதகமாக அமையும் என்றார்.

எரிவாயு சிலிண்டர் வெடிப்பு சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படுமா ? வீடுகளில் உள்ள சிலிண்டர்களை மாற்ற முடியுமா? என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அவர்,

சம்பவம் நடந்த இடங்களுக்கு சென்று விசாரணை நடத்தப்பட்டது. 400 ற்கும் அதிகமான சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இந்த தரவுகளை பயன்படுத்தி இவ்வாறான சம்பவங்கள் நடக்காதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் நிலைநாட்டப்படும்.

இது சிக்கலான பிரச்சினையாகும். 270 இலட்சம் சிலிண்டர்கள் வரை மாதாந்தம் பரிமாறப்படுகிறது. 30 வீதமான மக்களை பாதிக்கும் பிரச்சினை இது. முதன்முறையாகவே இந்தப் பிரச்சினை ஏற்பட்டது. நாட்டுக்கு எரிவாயு கொண்டுவருவது நிறுத்தப்பட்டதோடு தரமற்ற எரிவாயு விநியோகிப்பதும் நிறுத்தப்பட்டது.முன்னரை விட கவனமாக எரிவாயு பயன்படுத்துமாறு பாவனையாளர்களை கோருகிறேன் என்றார்.

## இளம்பெண்ணை... (03 ஆம் பக்கத் தொடர்)

எனத் தெரிவிக்கும் நபர்கள் தெரிவிக்கையில், தம்முடைய பெண்ணை சில நபர்கள் டிப்பர் வாகனத்தில் கடத்திச் சென்றதாகவும் அவர்களை தாங்கள் விரட்டிச் சென்றதாகவும் தப்பிக்க முற்பட்ட டிப்பர் வாகனமே விபத்துக்குள்ளதானதாகவும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## ஜனவரியில் கொரோனா...

கலாநிதி செனல் பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்,சிங்கள புத்தாண்டு காலத்தில் கவனக்குறைவான நடத்தை காரணமாக ஏற்பட்ட சிக்கல்கள் குறித்து பொதுமக்களுக்கு ஏற்கனவே அனுபவம் உள்ளது என அவர் கூறினார்.

பண்டிகைக் காலங்களில் கொரோனா தொற்றினை பொதுமக்கள் அலட்சியமாக எண்ணினால் அது பரவுவதற்கு வழிவகுக்கும் என அவர் குறிப்பிட்டார்.எனவே பொது மக்கள் சுகாதார வழிகாட்டுதல்களை கடைபிடிக்க வேண்டும் என்றும் தடுப்பூசி செலுத்திக்கொள்வதை உறுதி செய்ய வேண்டும் என்றும் செனல் பெர்னாண்டோ கேட்டுக் கொண்டார்.

## சபுகஸ்கந்த எரிபொருள்...

எதிர்வரும் 02 வாரங்களில் 90 ஆயிரம் மெற்றிக் தொன் மசகு எண்ணெய்யை ஏற்றிக் கொண்டு ஒரு கப்பல் இலங்கையை வந்தடையவுள்ளது.

ஜனவரி மாத நடுப்பகுதியிலும், எரிபொருளை ஏற்றிக் கொண்டு மற்றுமொரு கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டில் இதுவரை 458 Gas...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் நவம்பர் 28ஆம் திகதி வரை 458 எரிவாயு தொடர்பான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அவற்றில் 244 முறைப்பாடுகள் கசிவுகள் தொடர்பான முறைப்பாடுகள் எனவும் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் இரசாயன மற்றும் செயன்முறைப் பொறியியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் சாந்த வல்போலகே தெரிவித்தார்.

கசிவுகளை மக்கள் அடையாளம் காண துர்நாற்றத்துடன் கூடிய இரசாயனப் பொருள் இல்லாதது கவலைக்குரிய ஒரு முக்கிய விடயமென குழு அடையாளம் கண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். மேலும் காலாவதியான மற்றும் தாழ்வான ரெகுலேட்டர்கள், hoses மற்றும் hose clips பயன்படுத்துவது கவலைக்குரிய மற்றொரு விடயம் என்றும் இது தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என அக்குழு தெரிவித்துள்ளது.

இதுபோன்ற உள்நாட்டு விபத்துகளுக்கு வழிவகுக்கும் வீட்டு எரிவாயு கலவை மாற்றப்பட்டதா? என்பதை இன்னும் ஆய்வு செய்து வருவதாகவும் அக்குழு தெரிவித்துள்ளது. எனவே, எரிவாயு நிரப்பப்பட்ட மற்றும் சிறப்பு முத்திரை கொண்ட சிலிண்டர்களை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அந்தக் குழு மேலும் கூறியுள்ளது.

## 2021 ஜனவரி முதல் ஒரு... (03 ஆம் பக்கத் தொடர்)

தற்போது கிடைத்துள்ளதாகவும் பல கட்டங்களாக இவர்களை வெளிநாட்டுக்கு அனுப்பும் நடவடிக்கை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

கொவிட்19 சவாலுக்கு மத்தியில் இந்த இலக்கை அடைந்துள்ளதாக கூறிய இராஜாங்க அமைச்சர் எதிர்வரும் வருடங்களில் மூன்று இலட்சம் பேரை வெளிநாட்டு பணியாளர்களாக அனுப்புவதே இலக்காகும் எனவும் தெரிவித்தார்.

இவ்வருடம் 08பில்லியன் ரூபா இலக்கை கொவிட் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் அடைந்துள்ளதாக கூறிய இராஜாங்க அமைச்சர் பியங்கர ஜயரத்ன எதிர்வரும் வருடத்தில் 10 மில்லியன் ரூபாவாக அதனை உயர்த்துவதே நோக்கம் எனவும் கூறினார்.

2017, 2018, 2019 ஆம் வருடங்களில் வெளிநாட்டு பணியாளர்கள் எண்ணிக்கை இரண்டு இலட்சத்தையும் தாண்டி இருந்தது. 2020 ஆம் ஆண்டும் இவ்வருடமும் பெரும் சவாலான இரண்டு வருடங்களாகும். வெளிநாட்டிற்குச் செல்லும் பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது கொவிட்19 காரணமாக தடைப்பட்டது எனக் கூறிய இராஜாங்க அமைச்சர் பியங்கர ஜயரத்ன இவ்வருடமும் கொவிட்19 காரணமாக வேலை வாய்ப்புக்காக வெளிநாடு செல்பவர்களின் எண்ணிக்கை ஓரளவு குறைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காக செல்பவர்களின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய டிசம்பர் மாதம் முடிவடைவதற்கு முன்னரும் எதிர்வரும் ஜனவரி மாதத்திலும் பல குழுக்கள் வெளிநாடுகளுக்கு செல்லவுள்ளதாகவும் அவர்களுக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றதுடன் இணைந்து பயிற்சிகள் அளிக்கப்படுவதாகவும் கூறினார்.

## அடையாள இலக்கத்துடன்...

இலக்கங்களை வழங்க அதிகாரம் அளிக்கப்பட்டிருந்ததுடன், இனிவரும் காலங்களில் பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கும் அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஆட்பதிவுத் திணைக்களத்தின் தகவல் தொகுதி மூலம் இணையவழி ஊடான அடையாள இலக்கத்தை பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு வழங்குவதற்கும், அந்த இலக்கத்தை உள்ளடக்கி பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் மூலம் அந்த நபர்களின் பிறப்புச் சான்றிதழை வழங்குவதற்கும் பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## பிரியந்த குமார குடும்பத்துக்கு...

வழங்கியுள்ளதாக இணை அமைச்சரவை பேச்சாளர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

பிரியந்த குமார தியவடனவின் இழப்பு குறித்து தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் அவர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சரவை கூட்டத்தில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அனைத்து அமைச்சர்களும் பிரியந்த குமார தியவடனவின் இழப்பிற்கு தமது அனுதாபத்தை தெரிவித்துள்ளர் என்றும் ரமேஷ் பத்திரண மேலும் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் சியல்கொட் பிரதேசத்தின் தொழிற்சாலையொன்றில் முகாமையாளராக பணிபுரிந்து வந்த பிரியந்த குமார தியவடன 2021 திசம்பர் மாதம் 03 ஆம் திகதி அடிப்படைவாத கொலைகாரக் கும்பலால் மனிதநேயமற்ற வகையில் கொலை செய்யப்பட்டுள்ளார். புலம்பெயர் பணியாளராக 11 வருடங்களுக்கு மேலாக அவர் இலங்கைப் பொருளாதாரத்திற்கு வழங்கிய ஒத்துழைப்பைக் கருத்தில் கொண்டு, அவருடைய இழப்பால் ஆதரவற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள மனைவி மற்றும் பிள்ளைகளின் நலன் கருதி மனிதநேய அடிப்படையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக ஊழியர் நலனோம்புகை நிதியத்தின் மூலம் 2.5 மில்லியன்களை வழங்குவதற்காக தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## சாதாரண தரத்தை பூர்த்தி...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷஆட்சிக்கு வந்த பின்னர் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு மாத்திரம் 60,000 பட்டதாரி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.இந்த 60,000 பேருக்கு பயிற்சிக் காலம் முடிந்து அவற்றை உறுதிப்படுத்தத் தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.மேலும், க.பொ.த சாதாரண தரம் வரை படித்த அல்லது க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சித்தியடையாத 100,000 இளைஞர், யுவதிகளை இணைத்துக்கொள்ளும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கையர் படுகொலையின்...

ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை இச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 26 பேரை டிசம்பர் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க பாகிஸ்தானின் தீவிரவாத தடுப்பு சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## "ஒமிக்ரோன்" மாறுபாட்டில்...

கூறினார்.

ஒமிக்ரோன் மாறுபாட்டிற்கு பூஸ்டர் டோஸ் பதிலளிக்கவில்லையென சமூக ஊடகங்களில் பொய்யான தகவல் பரப்பப்படுவதாக வைத்தியர் ஜூட் ஜயமஹா தெரிவித்தார்.

ஒமிக்ரோன் மாறுபாட்டின் வீரியம் காரணமாக கொரோனா தடுப்பூசியியை பெற்றுக் கொள்வது பயனற்றதென்ற கூற்றை மறுப்பதாவும் அவர் கூறினார்.

ஒருவரின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க அல்லது அன்டிபாடிகளை உருவாக்க தடுப்பூசிகளில் ஸ்பைக் புரதம் சேர்க்கப்பட்டுள்ளதென்றும் வைத்தியர் சுட்டிக்காட்டினார்.

## தெஹிவல Zooவில்...

ஐந்து கறுப்பு அன்னப் பறவைகள் தற்போது தெஹிவளை மிருகக் காட்சிசாலையில் வசித்து வருகின்றன. புதிதாகப் பிறந்த அன்னப்பறவைகளில் மூன்று ஆண் பறவைகளும், இரண்டு பெண் பறவைகளும் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழிலிருந்து கொழும்பு... (03 ஆம் பக்கத் தொடர்)

பொதி செய்து மறைத்து வைக்கப்பட்டிருந்த 145 கிலோ கேரள கஞ்சவை மீட்டதுடன், வாகனத்தையும், அதில் பயணித்த சாரதி உட்பட இருவரையும் கைது செய்தனர்.

மீட்கப்பட்ட கஞ்சாவின் பெறுமதி சுமார் இரண்டு கோடி ரூபாய் இருக்கலாம் என பொலிஸார் தெரிவித்ததுடன், கைது செய்யப்பட்டவர்களை மேலதிக விசாரணைகளின் பின்னர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

## தமிழ்... (03 ஆம் பக்கத் தொடர்)

இருந்தாலும் அரசாங்கம் ஊடகவியலாளர்களை தாக்குபவர்களை காப்பாற்ற ஒருபோதும் முன்வரக்கூடாது.

இந்த சந்தர்ப்பத்தில் ஊடகவியலாளரை தாக்கிய இராணுவ வீரர் விடயத்தில் அரசாங்கம் 24 மணி நேரத்திற்குள் கைதுசெய்து சட்டத்தின்முன் நிறுத்தியுள்ளது.

இதனை அரசாங்கத்தின் பங்காளிக்கட்சி என்ற முறையில் வரவேற்கின்றோம்.

இதற்காக அரசாங்கத்திற்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என தெரிவித்தார்.

## சிறு, நடுத்தர வர்த்தகர்களின்...

முன்தினம் (6) நடைபெற்ற வர்த்தக பிரதிநிதிகள் குழுவுடனான கலந்துரையாடலின்போதே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொற்று நிலைமைக்கு மத்தியில் பல்வேறு இக்கட்டான சூழ்நிலைகளுக்கு முகங்கொடுத்த வர்த்தகர்களுக்கு மேலும் கடன் நிவாரண காலத்தைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் ஏலம் விடப்பட்ட சொத்துக்களை மீளப்பெறல் தொடர்பில் இதன்போது பிரதமருக்கு வர்த்தகர்கள் தெளிவுபடுத்தினர்.

சுற்றுலாத்துறை, பேக்கரித்தொழில், பூஞ்செடி விற்பனை, வாகன உதிரிப் பாகங்கள் இறக்குமதி, ஆடை மற்றும் மாணிக்கக்கல் வர்த்தகம், உலோகப் பொருட்கள் உற்பத்தி மற்றும் மெனிங் சந்தை பிரச்சினை, கட்டுமானத் தொழிற்துறை ஆகியவற்றை பாதித்துள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் வர்த்தகர்கள் இதன்போது கருத்துகளை முன்வைத்தனர்.

இந்த பிரச்சினைகளுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்குமாறு , அதிகாரிகளின் கவனத்திற்கு பிரதமர் கொண்டுசென்றதாக பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதி தலைமையில் நேற்று...

பெர்னாண்டோ ஆகியோர் தலைமையிலான அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் வரவேற்றனர்.

நாட்டின் தேசிய பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு, தற்போதைய பாதுகாப்புப் பிரிவினரின் அவதானத்துக்கு இலக்காகியுள்ள விடயங்கள் தொடர்பில், அமைச்சர் சமல் ராஜபக்ஷஉள்ளிட்ட அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்த பிரச்சினைகள் மற்றும் யோசனைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

பாராளுமன்றத்தின் பொதுச் செயலாளர் தம்மிக தசநாயக்க, பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்ன, முப்படைகளின் தளபதிகள் மற்றும் பொலிஸ் மாஅதிபர் உள்ளிட்ட பாதுகாப்பு அமைச்சின் கீழ் காணப்படும் நிறுவனங்களின் அதிகாரிகள், இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்தனர்.

## பிரியந்த குமாரவின்...

நேற்றுமுன்தினம் (06) பிற்பகல் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் மூலம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டு பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின் குடும்பத்தாரிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

## இராணுவ தலைமை...

07ஆம் திகதி முதல் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினதும், பாதுகாப்பு அமைச்சினதும் பரிந்துரைக்கு அமைய பாதுகாப்பு படைகளின் பிரதம அதிகாரியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வாவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தின் 58ஆவது பிரதம அதிகாரியாக இதுவரை காலமும் சேவையாற்றிய மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா இராணுவத்திலிருந்து அண்மையில் ஓய்வுபெற்றுச் சென்றதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே 59ஆவது பிரதம அதிகாரியாக மேஜர் ஜெனரல் விகும் லியனகே புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவத்தின் கஜபா படையணியைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் விகும் லியனகே, இறுதியாக இராணுவ தொண்டர் படையணியின் கட்டளை தளபதியாக சேவையாற்றி வந்தார்.

இராணுவத்தின் பல்வேறு உயர் பதவிகளை வகித்த இவர் மாத்தளை விஜய கல்லூரியின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பசிலின் திடீர் இந்திய...

கொண்டிருக்கும் வேளையில், நிதியமைச்சரின் திடீர் இந்திய விஜயம் கவலையளிப்பதாகவும் கூறினார்.

மேலும் வரவு செலவுத் திட்டம் மீதான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது எந்தவொரு நிதி அமைச்சரும் நாட்டை விட்டு வெளியேறியதில்லையென்றும் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பொருளாதார மீட்சிக்கான அனைத்து நிதி விவரங்கள் மற்றும் திட்டங்களை சபையில் முன்வைக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கும் நிதி அமைச்சருக்கும் உள்ளதாக குறிப்பிட்ட ரணில் விக்கிரமசிங்க , ஆனால் நாட்டின் தற்போதைய வெளிநாட்டுகையிருப்பை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு அரசாங்கத்திடம் சில நாட்களுக்கு முன்னர் கோரிக்கை விடுத்திருந்த போதிலும், அதற்கான ஆவணம் இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

## தமிழ் கூட்டமைப்புக்கு...

பாராளுமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் கூடியது.

இதன் போது கருத்துத் தெரிவித்த சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி, செலவின குறைப்பு பிரேரணையை முன்வைக்க 33 எம்.பிக்களின் பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. அதில் தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் எவரது பெயரும் உள்ளடக்கப்படவில்லை. அது அநீதியானது. அவர்களது தீர்மானம் என்பது வேறு விடயம். ஆனால் வடக்கு கிழக்கு பிரச்சினைகளை பேச இடமளிக்க வேண்டும்.

வரவு செலவுத் திட்டம் 2022 குழுநிலை விவாதத்தின் போது சம்பிரதாயபூர்வமாக அமைச்சின் செலவினத் தலைமைப்புக்களின் தொகை குறைப்புப் பிரேரணைக்காக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பெயர் பட்டியலில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் உள்வாங்கப்பட்டுள்ள போதிலும் எதிர்க்கட்சியில் இரண்டாவது இடத்திற்கு உறுப்பினர்களைக் கொண்டுள்ள (10) கட்சியான இலங்கை தமிழரசுக்கட்சியின் எந்தவொரு உறுப்பினரது பெயரும் அதில் உள்ளடக்கப்படவில்லை.

இதன் காரணமாக 2020.12.06 ஆம் திகதி மற்றும் 07 ஆம் திகதி ஆகிய இரு தினங்களிலும் குழுநிலை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட அமைச்சுக்கள் தொடர்பாக, விசேடமாக எமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதிநிதித்துவம் செய்கின்ற வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பொது மக்கள் முகம்கொடுக்கின்ற பிரச்சினைகளை கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு இருந்த வாய்ப்பு நழுவிப்போனது.

மேலும் சாதாரண விவாதங்களின் போது எதிர்க்கட்சிக்குக் கிடைக்கப்பெறுவது உரையாற்றுவதற்கான மொத்த காலத்தில் 40% ஆக உள்ளமையால் எமது கட்சிக்கு அதன் மூலம் கிடைக்கப்பெறுகின்ற காலமானது மேலும் வரையறுக்கப்படுகின்றது. எனினும் வரவு செயலவுத் திட்டத்தின் குழுநிலையின் போது எதிர்க்கட்சிக்கு 60% உரையாற்றுவதற்கு காலம் கிடைக்கப்பெறுவதனால் இவ்வாய்ப்பு கிடைக்கப்பெறாமை மூலம் எமது கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

எனவே வரவு செலவுத்திட்டத்தின் குழுநிலை விவாதத்தின் போது எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவம் செய்கின்ற கட்சியில் இரண்டாவது இடத்திற்கு அதிக உறுப்பினர்களைக் கொண்டுள்ள கட்சியைச் சார்ந்தவன் என்ற அடிப்படையில் சம்பிரதாயபூர்வமாக தொகை குறைப்புப் பிரேரணையை முன்வைப்பதற்கு எனக்கு வாய்ப்பைப் பெற்றுத்தருமாறு பணிவுடன் வேண்டுகிறேன் என்றார். தங்களது பெயர்களையும் செலவின குறைப்பு பிரேரணை பட்டியலில் சேர்க்க வேண்டும் என்றும் அவர் கோரினார்.

சார்ள்ஸ் நிர்மலநாதன் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினையின் போது கருத்துத் தெரிவித்த ஆளும் தரப்பு பிரதம கொறடா ஜோன்ஸ்டன் பெர்னான்டோ ,

கடந்த தேர்தலில் வடக்கு, கிழக்கு மக்கள் சஜித் பிரேமதாசவுக்கே அதிகமாக வாக்களித்தனர். ஆனால் அவரோ, அந்த மக்களுக்கு அநீதி இழைத்துள்ளார். ஜனநாயகம் இல்லை என்று சபை பகிஷ்கரிப்பை மேற்கொள்ளும் இவர் தனது முன்னாள் அமைச்சு தொடர்பான விவாதத்தை தவிர்க்கவே இப்படி செயற்பட்டார். சார்ள்ஸ் நிர்மலநாதன் எழுப்பிய விடயம் முக்கியமானது. அவரின் கட்சி எம்.பிக்கள் எவரின் பெயரும் பட்டியிலில் சேர்க்கப்பட வில்லை என்றார்.

ஆனால் இது குறித்து முன்கூட்டி அறிவித்திருக்க வேண்டும் எனவும் தற்பொழுது எதுவும் செய்ய முடியதெனவும் சபாநாயகர் தெரிவித்தார்.

இதேவேளை டிலான் பெரேரா எம்.பி கருத்துத் தெரிவிக்கையில், எதிர்க்கட்சியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் பிரதான இனக்குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி. 33 பேர் பட்டியலில் அவர்களின் பெயர்கள் உள்ளடக்கப்படவில்லை.எதிர்க்கட்சித் தலைவர் அந்த இனக்குழுவிற்கு பாரிய அநீதி செய்துள்ளார். இந்த அநீதியை மாற்றிமைக்க வேண்டும் என்றார்.

சுரேன் ராகவன் எம்பி கருத்துத் தெரிவிக்கையில், எமது நாட்டின் ஜனநாயகம் குறித்து முழு நாடும் கவனித்துக் கொண்டிருக்கிறது. அதனை ஐக்கிய மக்கள் சக்தி மீறி செயற்படுகிறது. ஜனநாயகத்தை பாதுகாக்க வந்துள்ள அவருக்கு பேச இடமளிக்க வேண்டும் என்றார். அவருக்கு பேச இடமளிப்பது ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக அடிப்படை செயற்பாடாக அமையும் என்றார்.

திருத்தங்கள் முன்வைக்கப்படும் போது பேச அனுமதிப்பதாக சபாநாயகர் இதன்போது அறிவித்தார்.(பா)

## அம்பாறையில் விவசாயம்...

தெரிவித்தார்.

அப்பாறை மாவட்டச் செயலாளரினால் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டுள்ள அந்த காணி தொடர்பில் எவரும் தன்னிச்சையான முடிவை எடுக்க முடியாது என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

அந்த வகையில் மேற்படி காணிகளை சம்பந்தப்பட்ட மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வன ஜீவராசிகள் அமைச்சின் வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

மஹிந்த ராஜபக்ஷஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் யுத்தம் நிறைவடைந்த பின்னர் விவசாயத் துறையை முன்னேற்றுவதற்காக பாரிய நடவடிக்கைகளை மேற்கொண்டார். காணிகளை விடுவித்து விவசாயிகளுக்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்.

அந்த வகையில் 1975ஆம் ஆண்டு அம்பாரை மாவட்ட செயலாளரினால் உத்தியோக பூர்வமாக காணிகள் வழங்கப்பட்டன. அக்கரைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவு உருவாக்கப்பட்டதுடன் அட்டாளைச்சேனை உதவி அரசாங்க அதிபர் பிரிவு, திருக்கோவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு, ஆலையடிவேம்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவு என பிரிவுகள் அமைக்கப்பட்டன.

அந்தப் பிரதேசங்களில் தமிழ் சிங்களம் முஸ்லிம் என மூவின மக்களும் தமக்கான விவசாய நடவடிக்கைகளை பல வருடங்களாக மேற்கொண்டு வருகின்றனர்.

யுத்தத்தின் பின்னர் திருக்கோவில் மக்கள் பிரதிநிதிகள் திருக்கோவில் மக்களுக்கு மட்டுமே அந்தப் பகுதி உரித்தானது என்றும் அங்கு முஸ்லிம்கள் விவசாயம் செய்ய முடியாது என தெரிவிக்கின்றார்கள். வட்டமடு பிரதேசத்தில் அக்கறைப்பற்று விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அங்குள்ள அதிகாரிகள் தடுத்துள்ளனர்.

எழுபது வருடங்களுக்கு மேலாக முஸ்லிம் மக்கள் விவசாயம் செய்த அந்தக் காணியை மீட்டுத் தருவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாம் கேட்டுக் கொள்கின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வைத்தியர்களை நியமிக்க கோரி உடப்பு மக்கள் ஆர்ப்பாட்டம்

உடப்பு குறூப் நிருபர்




முந்தல் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவுக்குட்பட்ட உடப்பு கிராமிய வைத்தியசாலைக்கு வைத்தியர்களை நியமிக்க கோரி நேற்று (07) காலை முதல் வைத்தியசாலைக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்று மக்களினால் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது நூற்றுக்கு மேற்பட்டவர்கள் பல்வேறு சுலோகங்களை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே!! கோயிலை மூடினாலும் வைத்திய சாலையை மூடாதே!! வேண்டும் வேண்டும் வைத்தியர் வேண்டும்!! ஏழைகளாகிய எங்கள் உயிரை காப்பாற்றுங்கள்!! அப்பாவிகள் எங்கள் உயிரை காப்பாற்றுங்கள்!! போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினார்கள். ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எவ்வித தீர்வும் கிடைக்காமையினால் அவர்கள் களைந்து சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## புத்தளத்தில் உலர் உணவு பொதிகள் கையளிப்பு

புத்தளம் தினகரன் நிருபர்



புத்தளத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்காக சர்வமத தலைவர்களிடம் உலர் உணவு பொதிகள் கையளிக்கப்பட்டுள்ளன.

புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரியின் 2007 க.பொ.த. சாதாரண தரம் மற்றும் 2010 உயர்தரம் மாணவர்களுடைய பழைய மாணவர் அமைப்பான "பிரமிட்" அமைப்பினரால் இவைகள் வழங்கப்பட்டுள்ளன.

புத்தளம் முஹியத்தீன் ஜும்ஆ பெரியபள்ளியின் வழிகாட்டலில் புத்தளம் மாவட்ட சர்வமத தலைவர் அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம் "பிரமிட்" அங்கத்தவர்கள் சகிதம் உலர் உணவு பொதிகளை சர்வமத தலைவர்களிடம் கையளித்தார்.



தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படும் 'பிரஜா ஜல அபிமானி' தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நொச்சியாகம பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட அலியவிட்டவெவ பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட குடிநீர் திட்டத்தினை காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன (06 ) ஆரம்பித்து வைத்த போது எடுத்த படம்.

படம்: கல்நேவ தினகரன் விசேட நிருபர்

## நீண்டகாலமாக வசிப்போருக்கு காணி உறுதிப்பத்திரம்

திறப்பனை தினகரன் நிருபர்

மிஹிந்தலை பிரதேச செயலக பிரிவில் நீண்ட காலமாக காணி உறுதிப்பத்திரம் இன்றி வசிக்கும் குடும்பங்களுக்கு சட்டபூர்வமான உரித்துடைய காணி அனுமதி பத்திரங்களை பெற்றுக் கொடுக்க மிஹிந்தலை பிரதேச செயலகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

மிஹிந்தலை பிரதேச செயலக பிரிவின் 29 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் காணி உரிமை பத்திரம் இல்லாமல் வசிக்கும் குடும்பங்களை சேர்ந்த தகைமையுள்ள குடும்பங்களுக்கே சட்ட பூர்வ அனுமதி பத்திரங்களை பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## படிகாரமடுவ பகுதிக்கு சுத்தமான குடிநீர்

திறப்பனை தினகரன் நிருபர்

கலன்பிந்துனுவெவ பிரதேச படிகாரமடுவ பகுதியில் "படிகாரமடுவ குடிநீர் வேலை திட்டம்" என்ற பெயரில் சுத்தமான குடி நீர் வேலை திட்டமொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

"பிரஜா ஜல அபிமானி" தேசிய வேலை திட்டத்தின் கீழ் வலயத்திலுள்ள பொது மக்கள் இதன் ஊடாக குடிநீர் வசதிகளை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை பெற்றுள்ளனர். தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை இதற்கான நிதியை வழங்கியுள்ளது.

"சௌபாக்யா எதிர்கால நோக்கு" வேலை திட்டத்தின் கீழ் மேற்படி பிரதேசத்திலுள்ள சுமார் 450 குடும்பங்கள் இதன் மூலம் சுத்தமான குடிநீர் வசதிகளை பெறும் வாய்ப்பை பெற்றுள்ளனர்.

இதற்கு 12 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதோடு இதனை காணி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன அண்மையில் ஆரம்பித்து வைத்தார்.

## மஜ்மா நகர் மையவாடிக்கு கொங்ரீட் வீதி நிர்மாணம்




கல்குடா தினகரன் நிருபர்

சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்திற்கமைய ஒரு லட்சம் கிலோ மீற்றர் வீதிகள் அமைக்கும் வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நஸீர் அஹமட்டின் முயற்சியினால் கிராமிய வீதி அபிவிருத்தி உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சின் ஆறு கோடி எழுபது இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் மஜ்மா நகர் கொவிட் மையவாடியை சுற்றிவரவுள்ள இரண்டு கிலோ மீற்றர் வீதி கொங்ரீட் வீதியாக அமையப்பெறவுள்ளது.

இவ் வீதி கொவிட் 19 ஜனாசாக்கள் நல்லடக்கம் செய்யப்படுகின்ற மையவாடியை சுற்றிவர அமையப்பெறவுள்ளதுடன் இவ்வீதி அபிவிருத்தி செய்யப்படுவதனால் கொவிட் 19 மையவாடிக்கு செல்வதற்கும் அப்பகுதியில் உள்ள விவசாயிகளுக்கும் போக்குவரத்து இலகுவானதாக அமையும்.

பாராளுமன்ற உறுப்பினரின் ஓட்டமாவடி இணைப்பாளர் மௌலவி பி.எம்.எம். காஸிம் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நஸீர் அஹமட் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் அதிதிகளாக ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர், பிரதேச சபை செயலாளர் எஸ்.எம்.சிஹாப்தீன், ஓட்டமாவடி மற்றும் வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது அதிதிகளால் வீதியோரங்களில் நிழல் தரக்கூடிய மரங்களும் நாட்டப்பட்டன.


திகதி 06.12.2021 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4608
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ.10,137,760.00
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 3 9 5 0 5 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.24,248,701.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2903
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ.5,451,420.00
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 01 10 63 72
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.76,772,116.16

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 956
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,267,220.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 157,752,094.80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து Z
சுப்பர் இலக்கம் 25
வெற்றி இலக்கங்கள் 09 42 44 60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 638
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,820,140.00
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 04 48 51 60
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 86,678,321.60

ஜாதிக சம்பத JATHIKA SAMPATHA
சீட்டிழுப்பு இலக்கம் : 1177
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ.2,156,800.00
வெற்றி இலக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 2 8 0 1 6 1
இப்பொழுது ஜாதிக சம்பத புதன் மற்றும் சனி கிழமைகளில் மாத்திரமின்றி திங்கள் மற்றும் வியாழக் கிழமைகளிலும் உங்களுக்கு அதிர்ட்டத்தை கொண்டு வருகின்றது.
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,795,826.40

06.12.2021 தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 594,963
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 23,833,340.00
ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 100,000.00 பரிசுகள 25

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெரும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01



## மண்முனை தென்மேற்கு பிரதேசசபை, கொக்கட்டிச்சோலை

## வழங்குநர்களை பதிவு செய்தல் – 2022

மண்முனை தென்மேற்கு பிரதேசசபையால் 2022ஆம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்படும் வழங்கு பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தக்காரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தொகுதிகள்**

தொகுதிகள் "A"- பொருட்கள் வழங்குதல் (பொது)
தொகுதிகள் "B"- சேவைகள் வேலை
தொகுதிகள் "C"- ஒப்பந்தக்காரர்கள்.

| தொ. இல | பொருட்கள் வழங்குதல் (பொது) |
|---|---|
| A-01 | அனைத்து அலுவலக எழுது பொருட்கள், அச்சிடப்பட்ட ஆவணங்கள் வழங்கல் |
| A-02 | அனைத்து அச்சிடல் நடவடிக்கைகள் |
| A-03 | அலுவலக உபகரணங்கள், மரத்தளபாடங்கள், உருக்கு தளபாடங்கள் |
| A-04 | கணனிகள், பிரிண்டர் / கணனி வன்பொருட்கள், மென்பொருட்கள் மற்றும் ரோனர் வகைகள் வழங்கல் |
| A-05 | டிஜிட்டல் அறிவித்தல் அச்சிடுவோர் |
| A-06 | சுகாதார மற்றும் தடுப்பு காப்பு உபகரணங்கள் |
| A-07 | மின்சார உபகரணங்கள் மற்றும் வீதி விளக்கு உபகரணங்கள் |
| A-08 | கிருமிநாசினி, பீடைநாசினி மற்றும் பசளை வகைகள் |
| A-09 | அனைத்து வகையான ஹியூம் குழாய்கள், கம்பி தூண், வேலிக் கம்பிகள் வழங்கல் |
| A-10 | அனைத்து வகையான தீந்தைகள் (Paints) |
| A-11 | சீருடைக்கான புடவை வழங்கல் |
| A-12 | விளையாட்டு உபகரணங்கள் |
| A-13 | முன்பள்ளி உபகரணங்கள் |
| A-14 | வீதி அபிவிருத்திக்கான பொருட்கள் வழங்கல் (தார்,சரளைக்கல்,மண்,கொங்கிறீட் கல், ABC கல்குற்றிகள் மற்றும் கிறவல்) |
| A-15 | வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் வழங்கல் |
| A-16 | அனைத்து வகையான டயர், ரீயூப் மற்றும் பெட்டரி / டயர் மீள் நிரப்பி (Rebuild) |
| A-17 | வாகன மற்றும் கனரக வாகன உதிரிப்பாகங்கள் வழங்கல் |
| A-18 | அனைத்து கட்டிடப் பொருட்கள் வழங்கல் (சீமெந்து, மரம், இரும்பு, மணல், புளொக்கல், செங்கல், தரைஓடுகள், கூரைத்தகடுகள்) |
| A-19 | புத்தகங்கள், பருவகால வெளியீடுகள் |
| A-20 | சமைத்த உணவுப் பொருட்கள், ஏனைய உணவுப்பொருட்கள் |
| A-21 | குடிநீர் விநியோகத்திட்டத்திற்கான குழாய்கள் மற்றும் ஏனைய உதிரிப்பாகங்கள் (PVC மற்றும் GI குழாய் மற்றும் DI உதிரிப்பாகங்கள்) |

| தொ. இல | சேவைகள் | |
|---|---|---|
| B-01 | வாகனங்கள் திருத்துதல் | |
| B-02 | வாகனங்கள் சேர்விஸ் செய்தல் | |
| B-03 | கணனி / பக்ஸ் இயந்திரம்/ நகல் பிரதி இயந்திரம் திருத்துதல் | |
| B-04 | ஓட்டுனர்கள் | |
| B-05 | காணி அளவை நடவடிக்கைகள் | |
| B-06 | பெயர்ப் பலகை / பெனர் வரைதல் / ஞாபகார்த்த பலகை சேவை வழங்கல் | |
| B-07 | பாவிக்கப்பட்ட பத்திரிகை, வெற்றுப் போத்தல்கள், பழைய இரும்பு கொள்வனவு செய்தல் | |
| B-08 | மரங்களை வெட்டி அகற்றும் நடவடிக்கைகள் | |
| B-09 | அலுவலக உபகரணங்கள் திருத்துதல், மின் உபகரணங்கள் திருத்துதல் | |
| B-10 | வாடகை அடிப்படையில் போக்குவரத்து வசதிகள் வழங்கல் | |
| B-11 | சட்ட நடவடிக்கைகளுக்கு சட்ட ஆலோசகர்கள் / மொழி பெயர்ப்பாளர்கள் சேவை வழங்கல் | |
| B-12 | மரக்கன்றுகள் வழங்குனர்கள் | |
| | ஒப்பந்தக்காரர்கள் | பதிவுக்கட்டணம் |
| C-01 | ரூபா : 100,000.00 க்குக் குறைந்த கைத்தொழில்கள் | 1,000.00 |
| C-02 | ரூபா : 100,000.00 தொடக்கம் 500,000.00 வரை | 2,000.00 |
| C-03 | ரூபா : 500,000.00 தொடக்கம் 10,000,000.00 வரை | 3,000.00 |
| C-04 | ரூபா : 1,100,000.00 க்குக் கூடிய | 3,500.00 |

**நிபந்தனைகள்**

1. விண்ணப்பப்படிவங்கள் யாவும் தரப்பட்டுள்ள மாதிரியில் தயாரிக்கப்பட்டு மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபா.1000/=க்கான காசுக்கட்டளையை "செயலாளர், மண்முனை தென்மேற்கு பிரதேசசபை, கொக்கட்டிச்சோலை" என்ற பெயரில் அல்லது மக்கள் வங்கி, கொக்கட்டிச்சோலை கணக்கு இலக்கம் 342100160001310 இற்கு வைப்புச்செய்யப்பட்ட வைப்புச்சீட்டை இணைத்து அனுப்புதல் வேண்டும். அல்லது "பிரதேசசபை அலுவலகம், கொக்கட்டிச்சோலை"எனும் முகவரியில் இயங்குகின்ற எமது அலுவலகத்தில் அலுவலக நாட்களில் (முற்பகல் 8.30மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை) பணத்தினை நேரடியாக செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பற்றுச்சீட்டுடன் அனுப்புதல் வேண்டும்.
2. விண்ணப்பப்படிவங்களை நேரடியாகவோ அல்லது தவிசாளர், மண்முனை தென் மேற்கு பிரதேசசபை, கொக்கட்டிச்சோலை என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ 31/12/2021 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறவேண்டும்.
3. வழங்கல்கள் /சேவைகள் 2022 ஆம் ஆண்டிற்கு செல்லுபடியானதாகும்.
4. பதிவிற்காக பெறப்பட்ட விண்ணப்பங்களை நிராகரிக்கும் உரிமை மற்றும் திருப்திகரமற்ற வழங்கல்கள்/சேவைகளை நிராகரிக்கும் உரிமை என்பன பிரதேசசபைக்கு உண்டு.
5. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். (அலுவலக தொலைபேசி இலக்கம் 0652056916/0652056913)

**தவிசாளர்,**
**மண்முனை தென்மேற்கு பிரதேசசபை,**
**கொக்கட்டிச்சோலை.**

**Application Form**
**REGISTRATION OF SUPPLIERS FOR THE YEAR -2021**
**MANMUNAI SOUTH WEST PRADESHIYA SABHA -KOKKADDICHOLAI**

| Office Use Only | |
|---|---|
| Receipt Number | |
| Date | |
| Amount | |

1. Name of the Applicant : ......................................
2. Name of the Business: ......................................
3. Address: ......................................
4. Telephone No i. Land ......................................
ii. Mobile ......................................
5. Fax No: ......................................
6 . E-Mail Address : ......................................
7. Business Registration Certificate No.(Certified Photocopy should be attached) : ......................................
8. VAT Registration Certificate No.(Certified photocopy should be submitted): ......................................
9. Details of Credit facilities offered
i. Value Rs : ......................................
ii. Period : ......................................
10. Registration for the Supplies/Services : ......................................
(please specify the category item e.g. : A-01,B-02)

I hereby agree to conditions Pertaining to supply of goods and services laid down by the Manmunai South West Pradeshiya Sabha, Kokkadicholai, if. my/our institution is selected as a Supplier/ Contractor. the payment receipt /money order /bank slip No:........................ Dated........................ Amount Rs........................ is herewith annexed.

........................ ........................
Signature of Applicant Date
Rubber Stamp

இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம்

சுற்றுலாத்துறை அமைச்சு

## மனு அழைப்பிற்கான கால நீட்டிப்பு அறிவிப்பு

| | |
|---|---|
| தலைப்பு: | இலங்கையின் நீருக்கடியில் உள்ள கடல்வாழ் உயிரினங்களின் வீடியோ ஸ்ட்ரீமிங்கை மேற்கொள்வதற்கான முகவர் நிறுவனமொன்றை தெரிவு செய்தல் |
| மனு இல: | SLTPB/PROC /2021/ NCB / 30 |

**2021.11.16** ஆம் திகதி "லங்காதீப" "டேலிநியுஸ்" மற்றும் "தினகரன்" பத்திரிக்கைகளில் மேல் குறிப்பிடப்பட்ட செயற்திட்டத்திற்கான மனுக்கோரல் விளம்பரத்துடன் தொடர்புடையதாகும். மனுக்களை முன்வைக்கும் கால எல்லை **2021.12.27** ஆம் திகதி **மு.ப 10.00** மணி வரை நீடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்கள வழங்கல் குழு,**
**இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம்,**
**இல 80, காலி வீதி, கொழும்பு 03.**

---

### கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

## 2022 ஆண்டிற்கான வழங்குநர்கள் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2022 ஆண்டு சார்பாக நீர்வழங்கல் அமைச்சின் www.mws.gov.lk இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளை கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் பெறுகை செயற்றிட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிற்கு வழங்குவதற்காக பதிவுசெய்வதற்கு எதிர்பார்க்கும் உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்கள் மற்றும் சேவை வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- **நிபந்தனைகள் மற்றும் அறிவுறுத்தல்கள்**

01. வழங்கல்கள் அல்லது சேவைக்காக பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் வழங்குநர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் ஒவ்வொரு உருப்படிக்கும் ரூ. 500.00 மீளளிக்கப்படாத தொகையை கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் செயற்றிட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் பெயரில் இலங்கை வங்கி, பெலவத்த கிளை, கணக்கு இலக்கம் 7042707 இற்கு காசு செலுத்தி குறித்த பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பத்தை மேற்படி இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம். பதிவு செய்யும் சகல உருப்படிக்கும் வேறுவேறாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. பதிவு செய்துள்ள வழங்குநர்களிடமிருந்து மற்றும் சேவை வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுவதுடன், அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் குறைந்த பட்சம் 30 நாள் காலத்திற்கு செல்லுபடியாதல் வேண்டும்.

03. தேவை என எண்ணும் வேளையில் வேறு வழங்குநர்களிடம் அல்லது சேவை வழங்குநர்களிடம் பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக் கொள்ளும் உரிமை அமைச்சிற்கு உரியது. கோரப்படும் போது விலைமனுக்களை சமர்ப்பிக்காத வழங்குநர்கள் / சேவை வழங்குநர்களின் பதிவு இரத்துச் செய்யப்படும்.

04. விண்ணப்பங்கள் உள்ளடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்குநர்கள் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2022ஆம் ஆண்டு' என்று குறிப்பிட்டு, 2021.12.27ம் திகதிக்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நிர்வாகப் பிரிவிற்கு பி.ப. 3.00 இற்கு முன் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

05. விவரமான அறிவுறுத்தல்கள் மற்றும் நிபந்தனைகள் மேற்படி இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**செயலாளர்**
**கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் செயற்றிட்ட இராஜாங்க அமைச்சு,**
**இல. 35 'லக்தியமெதுர'**
**புதிய பாராளுமன்ற வீதி,**
**பெலவத்த,**
**பத்தரமுல்ல.**

---

## 2022 வருடத்திற்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல்

### வலயக் கல்வி அலுவலகம்
### பிலியந்தல

இந்த கல்வி அலுவலகம் மற்றும் அதற்குரிய பாடசாலைகளில், 1ஆம் தரம் தொடக்கம் 13ஆம் தரம் வரை கல்வியைப் பெற்றுக் கொடுப்பதற்காகத் தேவைப்படும் காகிதாதிகள், உபகரணங்களை வழங்குவதற்கும், உபகரணங்களைப் பழுதுபார்ப்பதற்கும், உணவு பானங்களை வழங்கவும் மேல் மாகாணத்தில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | விபரம் |
|---|---|
| 01. | காகிதாதி |
| 02. | நூலகப் புத்தகங்கள் |
| 03. | கணித உபகரணங்கள் |
| 04. | கமத்தொழில் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் |
| 05. | விளையாட்டுத்துறைப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் |
| 06. | சங்கீத, நாட்டிய மற்றும் ஓவிய உபகரணங்கள் |
| 07. | கட்புல, செவிப்புல மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் |
| 08. | கணனி, அச்சுப்பொறி, மல்டிமீடியா, போட்டோக்கொப்பி இயந்திரம் மற்றும் டுப்ளோ இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல் |
| 09. | கணனி, அச்சு இயந்திரம், மல்டிமீடியா போட்டோக்கொப்பி இயந்திரம் மற்றும் டுப்ளோ இயந்திரங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் |
| 10. | விசேட கல்விக்குத் தேவைப்படும் அனைத்து பாவனைப் பொருட்கள் |
| 11. | ஆய்வுகூட, இரசாயனப் பதார்த்தங்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல். |
| 12. | அலுவலக உபகரணங்களைக் (உலோகம் மற்றும் மரம்), பிளாஸ்டிக் கதிரைகளைக் கொள்வனவு செய்தல் |
| 13. | பிலியந்தல வலயக் கல்வி அலுவலகத்தினுள் மற்றும் அதற்குரிய பிரிவு கல்வி அலுவலகம் மற்றும் பாடசாலைகளில் நடாத்தப்படும் நிகழ்ச்சிகள், போட்டி, விளையாட்டு நிகழ்ச்சிகள்/ விசேட வைபவங்கள்/ ஏனைய நிகழ்வுகள் உணவு, பானங்களை வழங்கல். |
| 14. | பிலியந்தல வலயக் கல்வி அலுவலகத்தினுள் மற்றும் அதற்குரிய பிரிவு கல்வி அலுவலகம் மற்றும் பாடசாலைகளுக்குரிய வாகனங்களையும் பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல் |

வழங்குநர்களைப் பதிவு செய்யும் கட்டணம் உருப்படியொன்றிற்கு ரூ. 300.00 என்பதுடன் அந்த தொகை மீளளிக்கப்படமாட்டாது. 2021.12.08 முதல் 2021.12.21 வரையான வாரத்தின் வேலை நாட்களில், மு.ப. 10.00 மணிமுதல் பி.ப. 3.00 மணிவரை, அலுவலக சிறாப்பரிற்கு பணம் செலுத்திய பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொண்டு, அதை அலுவலக கணக்குப் பிரிவிற்குச் சமர்ப்பித்து, வழங்குநர்களைப் பதிவு செய்யும் விண்ணப்பமொன்றை பெற்றுக்கொள்ளலாம். உங்களால் விண்ணப்பிக்கப்படும் சேவை அல்லது வழங்கல்கள் தொடர்பாக வியாபார பதிவுச் சான்றிதழ் விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ளும் போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் சேர்க்கப்படும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில், 2022 வருடம் தொடர்பாக வழங்குநர்களைப் பதிவுசெய்தல் எனக் குறிப்பிட்டு, 2021.12.22 அன்று பி.ப. 1.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படவோ அல்லது நேரில் வந்து இந்த அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்படவோ வேண்டும். மேலதிக தகவல்களை 0112614200 (பொது நிர்வாகப் பிரிவு) என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலயக் கல்வி அலுவலகம்,**
**பிலியந்தல.**

---

## Huawei தற்போது பரந்துபட்ட ஸ்மார்ட் அணிகலன் வகைகளை நுகர்வோருக்கு வழங்குகிறது


HUAWEI BAND 4E HUAWEI BAND 6 HUAWEI WATCH GT 2 PRO HUAWEI WATCH 3 HUAWEI WATCH FIT

முன்னணி தொழில்நுட்ப தீர்வு வழங்குநரான Huawei, மேம்படுத்தப்பட்ட தொடர்பாடல், அனைத்து சூழ்நிலைகளுக்கும் ஏற்ற வகையிலான, விருப்பத்திற்கேற்ப, சுதந்திரம் கொண்ட இணைப்பு ஆகியவற்றின் மூலம் மிகவும் வசதியான ஸ்மார்ட் வாழ்க்கை அனுபவத்தை கொண்டு வந்து, நுகர்வோரின் பல்வேறு தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையிலான ஸ்மார்ட் அணிகலன் வகைகளை தற்போது இலங்கையில் வழங்குகிறது. இதுவொரு புத்திசாலித்தனமான வாழ்க்கையை வாழ்வதற்கான எளிய வழியாகும்.

சந்தையில் பலவிதமான ஸ்மார்ட் அணிகலன் வகைகளை Huawei அறிமுகப்படுத்தியுள்ளது. Huawei Watch 3, Huawei Band 6, Huawei Watch GT2 Pro, Huawei Watch Fit, Huawei Band 4e, ஆகிய இந்த ஐந்து விசேட பொருட்கள் தொடர்பிலும் நுகர்வோரிடையே அதிக கேள்வி நிலவுகின்றது.

அனைத்து Huawei தயாரிப்புகளையும் போன்று, இலங்கையில் தற்போது கிடைக்கும் ஸ்மார்ட் அணிகலன் வகைகளும் அற்புதமான அம்சங்களுடன் வருகிறது. Huawei Watch 3 ஆனது 1.43 அங்குல AMOLED திரையுடன் வருகிறது. இது, ஸ்மார்ட் கைக்கடிகார வடிவமைப்புக்கான எதிர்காலத்தை மீள் வரையறை செய்வதாக அமைகின்றது. தொடு உணர் திறன் அதிகம் கொண்ட திரை, பக்கவாட்டிலான பொத்தான், முழுமையாக சுழற்றக்கூடிய சுழலும் திருகாணி பகுதி, smart mode இல் இருக்கும்போது 3 நாட்கள் வரையான நீண்ட மின்கல ஆயுளையும், ultra-long battery life mode பயன்முறையில் 14 நாட்கள் வரையான மின்கல ஆயுளையும் அது வழங்குகிறது.

Huawei Band 6 ஆனது 1.47 அங்குல AMOLED full view display, நாள் முழுவதும் SpO2 கண்காணிப்பு, 96 பயிற்சி பாணிகள், TruSeen 4.0 இதயத் துடிப்பு கண்காணிப்பு, TruSeen 2.0 தூக்க கண்காணிப்பு ஆகியவற்றுடன் 2 வார மின்கல ஆயுளை பேணுகின்றது.

Huawei Watch குவை ஆனது 1.64 அங்குல பல்வர்ண AMOLED திரை, 10 நாட்கள் வரையான மின்கல ஆயுள், 2.5D வளைந்த கண்ணாடி, 96 உடற்பயிற்சி முறைகள், உள்ளார்ந்த GPS czup, 5ATM10 நீர் எதிர்ப்புத் திறன், யுஐ இதயத் துடிப்பு செயற்பாடு கண்டறிதல் மற்றும் புத்தாக்கம் கொண்ட சென்சர்கள், TruSeen™ 4.0 இதய துடிப்பு வீத கண்காணிப்பு ஆகியவற்றை வழங்குகிறது. ஒட்சிசன் செறிவூட்டல் கண்டறிதல்13, TruSleep™ 2.0 தூக்க கண்காணிப்பு, மற்றும் நாள் முழுவதும் மன அழுத்தத்தைக் கண்காணிக்கும் Huawei TruRelax™ தொழில்நுட்பம் ஆகியவற்றையும் கொண்டுள்ளது.

---

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**119** **பஸ்கள், லொறிகள்** விற்பனைக்கு

WP HY-7118 Ashok Leyland Viking Bus, 2004, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714542 958 079205

**122** **மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்** விற்பனைக்கு

NW QJ-3170 Bajaj, 2006, WP ABF-7178 Bajaj, 2015, SP YT-7648 Bajaj, 2011, three wheel கூடிய விலைக் கோரிக்கைக்கு . வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 . 079203

SG ABI-7058 Piaggio, 2015, threewheel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 . 079201

SG BGI-2658 Bajaj Pulsar, 2018, motor cycle கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 079209

SG YX-7 648 Bajaj, 2012, WP AAL-3031 Bajaj, 2013, three-wheel கூடிய விலைக் கோரிக்கைக்கு . வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே . 0711210810 . 079208

### காணி/தோட்டம்

**601** **சொகுசு வசிப்பிடங்கள்/ வீடுகள் தொடர் வீடுகள்** விற்பனைக்கு

இரண்டு அறைகளுடன் அப்பார்ட்மென்ட் ஐந்தாம் மாடி லிப்ட், கார்பார்க் உண்டு. விற்பனைக்கு ரூ.10 மில்லியன், மெசன்ஜர் வீதி (லாபீர் மாவத்த) கொழும்பு 12. தொடர்பு 0714275384. 077766

**பெயர் மாற்றம்**

மத்துகமையை பிறப்பிடமாகவும் ஏறாவூரை வசிப்பிடமாகவும் கொண்ட மாடசாமி முத்துகிருஷ்ணன் ஆகிய நான் எனது சுய விருப்பின் பெயரில் இஸ்லாம் மதத்தை தழுவிக் கொண்டு எனது பெயரை மகுமுது லெவ்வை முகம்மட் என மாற்றிக் கொண்டுள்ளேன் என இலங்கை சனநாயக குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

---

## இலங்கை வங்கி

### விலை கோரல் (IFB)

### இலங்கை வங்கிக்கு 2022.02.01 தொடக்கம் 2023.01.31 வரையான காலப்பகுதிக்கான வாகனத் தொகுதிகளுக்கான காப்புறுதிகளை வழங்குதல்.

**கேள்விப்பத்திர இலக்கம் : P/PROC/2021/361**

BOC சதுக்கம், இலக்கம் 01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை வங்கித் தலைமையகத்தின் 14ஆவது மாடியிலுள்ள சொத்துக்களும் சேகரிப்பும் பகுதிப் பிரதான முகாமையாளரிடமிருந்து இலங்கை வங்கிக்கு 2022.02.01 தொடக்கம் 2023.01.31 வரையான காலப்பகுதிக்கான வாகனத் தொகுதிகளுக்கான காப்புறுதிகளை வழங்குவதற்கு இலங்கையில் உள்ள தகுதியுடைய அனுமதி பெற்ற காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து (காப்புறுதி முகவர் நிறுவனங்கள் தவிர்த்து) முத்திரையிடப்பட்ட விலை கூறல்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| மீளளிக்கப்படாத ஏலவிலைக் கட்டணம் | ரூ. 3,780./- (ரூ. 3,500/- + 8% VAT) |
| சமர்ப்பிக்கப்பட வேண்டிய விலைகூறல் பிணையின் பெறுமதி | ரூ.100,000/- |
| ஏலவிலை கூறல் ஆவணங்களை விநியோகிக்கும் கடைசித் திகதியும் நேரமும் | 2021.12.28 1400 மணி வரை |
| ஏலவிலை கூறல் முடிவடையும் திகதியும் நேரமும் | 2021.12.29 1000 மணி வரை |

**ஏலவிலை கூறுவதற்கு ஏலவிலை கூறுபவர் குறைந்தபட்சம் கீழ்க்காணும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.**

i. ஏலவிலை கூறும் நிறுவனமானது இலங்கையில் வாகனக் காப்புறுதி வியாபாரத்தை நிகழ்த்துவதற்காக பதியப்பட்ட அனுமதிபெற்ற காப்பீட்டு நிறுவனமாகக் காணப்பட வேண்டும்.

ii. ஏலவிலை கூறுபவர் இலங்கையில் வாகனக் காப்பீட்டு நிறுவனமாக கடந்த ஐந்து ஆண்டுகளாக செயற்பட்டுக்கொண்டிருக்க வேண்டும். (உ.ம் அனுமதிப்பத்திரமானது 2016.01.01ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட்டிருக்க வேண்டும்)

iii. கடந்த மூன்று ஆண்டுகளில் பொதுவான காப்பீட்டு வர்த்தகம் மூலமாக ஈட்டப்பட்ட சராசரி மொத்த எழுத்து மூலமான காப்பீட்டு வருமானமானது ரூ. 5 பில்லியனாகக் காணப்பட வேண்டும். (2018, 2019 மற்றும் 2020).

iv. ஏலவிலை கூறுபவர் கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் 100இற்கும் அதிகமான மோட்டார் வாகனங்களைக் கொண்ட ஒரு நிறுவனத்திற்காவது மோட்டார் வாகனக் காப்பீட்டினை வழங்கிய அனுபவத்தினைக் கொண்டிருக்க வேண்டும் (2018, 2019 மற்றும் 2020).

v. ஏலவிலை கூறுபவர் இலங்கை வங்கியின் துணை நிறுவனமாகக் காணப்படலாகாது.

ஏலவிலை கூற ஆர்வமுடையவர்கள் ஆங்கில மொழி விலை கூறல் ஆவணத்தொகுதி மற்றும் தொடர்புடைய விவரக் குறிப்புகளை 2021.12.28ஆம் திகதி வரையுள்ள வேலை நாட்களில் 0900 மணி தொடக்கம் 1400 மணிக்குள் இலக்கம் 01, "BOC சதுக்கம்", இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01இல் அமைந்துள்ள இலங்கை வங்கியின் 14ஆம் தளத்தில் உள்ள சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் எழுத்து மூலமான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்துத் திருப்பிச் செலுத்தாக் கட்டணம் ரூபா.3,780/-ஐ (கட்டணம் செலுத்தும் முறை பணமாகும்) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட ஏலவிலை கூறல்களை (இலங்கை வங்கி தவிர்ந்த) இலங்கையில் செயற்படும் மற்றொரு வர்த்தக வங்கியிடமிருந்து மேற்கூறப்பட்டவாறு விலைமுறிக்குப் பொருத்தமான பெறுமதியில் பெறப்பட்டதும் 2022.04.27ஆம் திகதி வரை செல்லுபடியானதுமான வங்கி உத்தரவாதத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். வங்கி உத்தரவாத்திற்குப் பதிலாக பண வைப்புகள் / வங்கிக் கொடுப்பனவுக் கட்டளை / வங்கிக் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

குறிப்பிட்ட ஏலவிலை கூறலை 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பொது ஒப்பந்தச் சட்டத்தில் அல்லது அதன் திருத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய PCA3 படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

ஏலவிலை கூறல்கள் குறித்த முடிவுத் திகதியன்று 1000 மணிக்குப் பின் உடனடியாகத் திறக்கப்படும். 1000 மணிக்குப் பின்னர் பெறப்படும் விலை கூறல்கள் நிராகரிக்கப்படுவதோடு, திறக்காமலே திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

இலங்கை வங்கி, எவ்விதக் காரணங்களையும் குறிப்பிடாது எந்தவொரு அல்லது எல்லாக் கேள்விப் பத்திரங்களையும் நிராகரிக்கும் அல்லது கேள்விப்பத்திரமொன்றின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்ளும் உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.

மேலதிக விபரங்களை சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி,
இல. 01, "இலங்கை வங்கி சதுக்கம்"
இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி : 0112-434786, 0112-544310,
தொலைநகல் : 011-2449629
மின் அஞ்சல் : procurement@boc.lk

www.boc.lk

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

---


Sunday Observer adz தினகரன் வாரமஞ்சரி

**Promotional Rates for Classified Advertisements** (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| ரூ. 300/- (Except Thinakaran Varamanjari) | ரூ. 500/- (Except Thinakaran Varamanjari) | ரූ. 650/- |

**- ISLANDWIDE -**

MONARAGALA
MONARAGALA ........ 077 6 565 653
SRI RAMYA STORES., NO 19., 20, MONARAGALA.

MATARA
MATARA ........ 047 2 230 093
NILMINI STORSE - NO 69., DHARMAPALA MAWATHA, MATARA

ANURADAPURA
THABUTTEGAMA ........ 025 2 276 431
MUTHUNUBA PAPER CORNER - No 86, Thambuttegama

ANURADHAPURA ........ 025 2 221 411
MAHAJANA BOOK SHOP - Anuradhapura

ANURADHAPURA ........ 025 2 222 806
SATHSARA BOOK SHOP - 40, KADAPANAHA., ANURADHAPURA

ANURADHAPURA ........ 025 2 222 575
PANDIKTA BOOK SHOP - 58/24, MAITHRIPALA SENANAYAKE MW, NEWS BUS STAND, ANURADHAPURA

RATHNAPURA
RATHNAPURA ........ 071 2 900 35
NO 15, CHURCH ROAD, RATNAPURA

RATHNAPURA ........ 045 2 223 883
LAKE HOUSE ADVERTISING CENTER - NO 88, MAIN STREET, RATNAPURA

HAMBANTHOTA
MIDDENIYA ........ 047 2 27 245
SOMASIRI STORES - HUNGAMA ROAD, MIDDENIYA.

TANGALLE ........ 047 2 240 402
D.W TRADERS - NO 158, MATARA ROAD., TANGALLE

HAMBANTOTA ........ 077 0 051 975
MISHIRA STORSE - NO 17, MAHAJANA POLA., HAMBANTOTA

AMBALANTOTA ........ 047 2 223 152
SUMITHRA TRADE CENTER - NO 11, MAIN STREET., AMBALANTOTA.

TISSAMAHARAMA ........ 047 2 239 088
T.D. MADANAYAKE & COMPANY (PVT) LTD - MAIN STREET, TISSAMAHARAMA.

BATTICALO
KATHTHANKUDY ........ 077 7 435 566
A.L.M. UWAIS, OLD POST OFFICE BUILDING., KATHTHANKUDY.

BATTICALA ........ 065 2 226 034
PRIYA STORES, H.K. RATHNASINGHAM, NO. 01, MARKET ROAD, BATTICALOA.

POLONNARUWA
POLONNARUWA ........ 077 9 627 542
PARAKUM BOOK SHOP - HOSPITAL JUNCTION, POLONNARUWA.

KADURUWELA ........ 076 4 201 263
GALLE CITY STORES - KADURUWELA, POLONNARUWA.

KANDY
HIDAGALA ........ 081 3 813 666
ANURA STORES - DOLUWA ROAD., HINDAGALA.

KANDY ........ 081 2 222 780
JAYAKODY TRADERS (PVT) LTD - NO.229/A, PERADENIYA ROAD, KANDY.

GAAMPOLA ........ 081 2 354 994
DAMASA CENTER - NO.14., STATION ROAD., GAMPOLA.

NAWALAPITIYA ........ 077 3 039 996
CHEAP SIDE BOOK SHOP - NO 46, GAMPOLA ROAD, NAWALAPITIYA.

classified@lakehouse.lk
011 2 429 342 | 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380



Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to. classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER Marriage Proposals Decades of Trusted Service

# யுத்தத்தினால் தமது கிராமங்களை விட்டுச் சென்றோரின் பிரச்சினைக்கு தீர்வு



## வனஜீவராசிகள் அமைச்சர் சி.பி ரத்னாயக்க

30 வருடயுத்தத்தினால் தமது கிராமங்களை விட்டுச்சென்ற மக்களுக்கு அவற்றை மீளப்பெற்றுக் கொடுக்க காலஅவகாசம் தேவை.அந்தப் பிரச்சினைக்கு தீர்வு வழங்குவோம் என வனஜீவராசிகள் அமைச்சர் சி.பி ரத்னாயக்க தெரிவித்தார்.

சுற்றாடல், வனஜீவராசிகள் மற்றும் கடற்றொழில் அமைச்சு மற்றும் ராஜாங்க அமைச்சுக்கள் மீதான குழுநிலை வவிவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

30 வருட கால யுத்தத்தின் போது மக்கள் இடம்பெயர்ந்தார்கள். சொத்து செல்வங்களை கைவிட்டு நாட்டை விட்டு கூட சென்றார்கள். அதனை உருவாக்கியவர்கள் இங்கு வந்து பேசுகின்றனர்.

பாகிஸ்தானில் எமது நாட்டு பொறியியலாளர் அடிப்படைவாதிகளால் கொல்லப்பட்டார். மிருகத்தை விட மோசமாக நடத்தியுள்ளனர். அவருக்கு எமது அனுதாபத்தை தெரிவிக்கிறோம். அந்நாட்டு பிரதமர் கடுமையாக நடவடிக்கை எடுத்துள்ளார். 35 ஆயிரம் கண்களை பாகிஸ்தானுக்கு தானம் செய்யப்பட்டிருக்கையில் தமது நாட்டு மக்களின் கண்கள் குருடாகி இருப்பதாக அந்த நாட்டு கண் மருத்துவர் குறிப்பிட்டுள்ளார். ஓரிருவர் செய்யும் தவறுக்கு முழு நாடும் பொறுப்பல்ல. புலிகள் காரணமாக நாட்டை விட்டு பலர் சென்றார்கள். அவர்கள் காணிகளை கைவிட்டுச் சென்றார்கள். பொருளாதார ரீதியில் நாடு கஷ்டமான நிலையில் உள்ளது. ஆனால் சிலர் தமது அரசியல் லாபத்திற்காகவும் டயஸ்போரவிற்காகவும் பேசுகின்றனர். தங்களுக்கு குறைந்த கவனிப்பு இருப்பதாகவும் உதவி வழங்க வேண்டாம் என்றும் கேட்கின்றனர். நாமும் ஆளும் தரப்பிலும் இருந்துள்ளோம். எதிர்தரப்பிலும் இருந்துள்ளோம். நாட்டில் அனைவருக்கும் ஒரே சட்டம் இருக்க வேண்டும். 30 வருடயுத்தத்தினால் தமது கிராமங்களை விட்டுச்சென்ற மக்களுக்கு அவற்றை மீளப்பெற்றுக் கொடுக்க காலஅவகாசம் தேவை. காடு எத்தனை அடி உயரத்திற்கு உள்ளது என்பது பிரச்சினை கிடையாது. தேசிய மட்ட திட்டமொன்றை மேற்கொள்ள இருக்கிறோம்.

நிர்மலநாதன் எம்.பி விவாதங்களில் பங்கேற்றார். அவருக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

### தர்மலிங்கம் சித்தார்த்தன்: தமிழ் தேசியக்கூட்டமைப்பு எம் பி.

கூகுள் வரைபடத்தில் சற்று பச்சை வட்டமாக இருந்தால் அதுவும் வன பிரதேசமாக ஒதுக்கப்படும் அவலம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டும் முன்னெடுக்கப்படுகிறது..

வன ஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு என்ற இரு திணைக்களங்களும் வனப்பாதுகாப்புக்கா அல்லது வன ஜீவராசிகள் பாதுகாப்புக்காவா செய்யப்படுகின்றன என்ற கேள்வி எம் மத்தியில் எழுகிறது.

இந்த இரு திணைக் களங்களினாலும் முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளைப் பார்க்கின்ற போது அந்த கேள்வி எழுகிறது.

2001-2005ல் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் அடிப்படையிலேயே சில விடயங்கள் நடைபெறுகின்றன.

ஆறடிக்கு மேற்பட்ட மரங்கள் காணப்படுமானால் அந்த காணி காடாக ஒதுக்கப்பட்ட இடமாக பார்க்கப்படுகின்றது. அதேபோல் கூகுள் வரைபடத்தை பார்த்து அதில் சற்று பச்சை வட்டமாக இருந்தால் அதுவும் ஒரு வன பிரதேசமாக ஒதுக்கப்படுகின்றது ,

இவ்வாறான நடவடிக்கைகள் வடக்கு,கிழக்கில் மட்டுமே நடக்கின்றன.

வன்னியில் பல இடங்களில் இவ்வாறு நடக்கின்றன.

83 காலகட்டத்தில் யுத்தம் காரணமாக பெருந்தொகையான மக்கள் இடம்பெயர்ந்து வேறு பாதுகாப்பான இடங்களுக்கு சென்று யுத்தம் முடிந்த பின்னர் அந்த இடங்களுக்கு மீண்டும் செல்லும் போது அவர்களை அங்கு விடாது அதிகாரிகள் தடுக்கின்றனர்.

அத்துடன் இந்த இரண்டு திணைக்களங்களும் அந்த மக்களின் காணிகளை சுவீகரிப்பதையே மேற்கொள்கின்றன.

காடு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. இருக்கின்ற காடுகளை பாதுகாக்க வேண்டுமே தவிர காடுகள் இல்லாத இடங்களை காடுகளாக்கக்கூடாது.

மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் உள்ள இடங்களும் காடுகளாக்கப்படுகின்றன. அந்த இடங்களில் தென்னை மரங்கள் கமுகு மரங்களும் உள்ளன. அங்கு இடிபாடான தமிழ் பாடசாலைக் கட்டிடங்கள் கூட உள்ளன. இந்த இடங்களெல்லாம் காட்டுப்பிரதேசங்கள் என ஒதுக்கப்படுவது பாரதூரமான விடயம்.

எனவே சம்பந்தப்பட்ட அமைச்சர் இதில் கவனம் செலுத்தி மக்கள் தமது சொந்தக் காணிகளுக்கு செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

**பட்ஜட் விவாதம்**



சபை நிருபர்கள்
லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்



### கோவிந்தன் கருணாகரம்: தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்பி

மணல் அகழ்வு என்பது நாட்டில் பாரிய கொள்ளைச் சமபவமாகவே காணப்படுகிறது.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து ஒரு நாளில் 500க்கும் மேற்பட்ட லொறிகளில் மணல் அந்த மாவட்டத்தை விட்டு வெளியில் கொண்டு செல்லப்படுகின்றன. அது மட்டுமனறி ரயில் மூலமாகவும் பெருமளவு மணல் வெளியே கொண்டு செல்லப்படுகிறது.

புவி சரிதவியல் திணைக்களத்தின் முகாமையாளராக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு அதிகாரி சுமார் பத்து வருடங்கள் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்.

அரச திணைக்களங்களில் உயரதிகாரிகள் ஐந்து வருடங்களுக்கொருமுறை சுழற்சி முறையில் இடமாற்றம் செய்யப்படுவது நாட்டின் வழமை.

புவி சரிதவியல் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளர் மட்டும் ஒரே இடத்தில் பத்து வருடங்களுக்கும் மேலாக கடமையாற்றுகின்றார். அரசியல் செல்வாக்குடன் அவர் கடமையாற்றுகின்றார்.

இதற்கு சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர பதிலளிக்கையில், மணல் அகழ்வுகள் தொடர்பில் சில அதிகாரிகள் முறைகேடுகளில் ஈடுபடுகின்றனர்.

சிலருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தகவல்களைத் தந்தால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### ராஜாங்க அமைச்சர் விமலவீர திசானாயக்க

அம்பாறை மாவட்டத்தில் நிலவும் விவசாயக் காணிகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு இன முரண்பாடுகளற்ற விதத்தில் தீர்வுகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அந்த பிரதேசங்களிலுள்ள மக்கள் பிரதிநிதிகள், அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட விவசாய சமூகத்துடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு இன முரண்பாடுகள் ஏற்படாத விதத்தில் அந்த பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். எனினும் அது தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதால் உடனடியாக அவ்வாறு செய்ய முடியாதுள்ளது.

பாராளுமன்றத்தில் முன்னாள் அமைச்சர் அதாவுல்லா உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

இது நீண்டகால பிரச்சினையாகும். தமிழ் , முஸ்லிம் மக்கள் நீண்ட காலம் தொட்டே அந்தப் பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளனர். அரசாங்கம் உள்ளூர் உற்பத்திக்கு முக்கியத்துவம் வழங்கி வரும் நிலையில் அவர்கள் தமது விவசாய நடவடிக்கைகளை சுமுகமாக முன்னெடுப்பதற்கான வாய்ப்புகள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். இரு சாராரும் கலந்துரையாடி ஒரு நியாயமான தீர்வை பெற்றுக் கொள்வதே சிறந்தது. அதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### இஷாக் ரஹ்மான் எம்.பி

எல்லைகளில் யானை வராமல் வேலி இடப்படுகிறது.

நாட்டின் உற்பத்திகளை அதிகரிக்க வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். ஆனால் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. காணிப்பிரச்சினை காணப்படுகிறது. அநுராதபுரம் பகுதியில் இந்தப்பிரச்சினை காணப்படுகிறது. உரிய கொள்கையின்றி பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. இந்தியாவில் தமது தேவைகளை அங்கு உற்பத்தி செய்கின்றனர். ஜனாதிபதி சேதனப் பசளை திட்டத்தை ஆரம்பித்தார். மீண்டும் இரசாயன பசளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கிடையாது. ஆட்சி மாறுகையில் கொள்கைகளும் மாறுகிறது. இந்தியாவை விட அதிக வளம் இங்குள்ளது. ஆனால் நிரந்தர கொள்கை இல்லாததால் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதில்லை. ஆட்சி மாறினாலும் மாறாத கொள்கை தேவை.

### எச்.எம்.எம்.ஹரீஸ் எம்.பி

வர்த்தமானி அறிவிப்பின் பிரகாரம் தமன பகுதியில் 200 வருட காலமாக இருந்த குடியிருப்புப் பகுதி உட்பட பல பிரதேசங்கள் வன இலாகா பகுதிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது. இதனால் பல ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வனஇலாகா அனுமதி மறுக்கப்பட்டதால் மக்கள் விவசாயம் செய்ய முடியாது பாதிக்கப்பட்டுள்ளனர். வட்டமடு பிரச்சினைக்கு தீர்வு பெற்றுத் தர வேண்டும்.

ராஜாங்க அமைச்சர் விமலவீர திசானாயக்க பதிலளிக்கையில் இது இன ரீதியான விவகாரமுள்ள பிரச்சினையாகும். தமது மேய்ச்சல் தரை என தமிழ் மக்கள சொல்கின்றனர். இவர்கள் தமது வயல் நிலம் என்கின்றனர். இது தொடர்பில் ஆராயப்படுகிறது. யாராவது ஒரு தரப்பிற்கு கைவிட நேரிடும்.

### மொஹமட் முஷாரப் எம்.பி

பொத்துவில் பிரதேசத்தில் யானை எந்த வழியால் வருகிறது என்று தெரியாதுள்ளது. எல்லா வழிகளாலும் அவை ஊடுருவுகின்றன. மக்கள் பீதியில் உள்ளனர். யானை வேலி அமைக்க பலர் நியமிக்கப்பட்டு வருகின்றனர். நகர் பிரதேசங்களுக்கு யானைகள் வர ஆரம்பித்துள்ளன.

கடந்த பாராளுமன்றங்களிலும் வன இலாகாவினால் வர்த்தமானி ஊடாக விவசாய காணிகளை பெறுவது பற்றி பேசப்படுகிறது. அவற்றை மீளக் கையளிக்குமாறு கோரப்படுகிறது. ஜனாதிபதியின் கொள்கை பிரகடனத்திலும் காணி விடுவிப்பு பற்றி உள்ளது. இது வரை எந்த ஆட்சியாளரும் இது பற்றி குறிப்பிடப்படவில்லை. கிழக்கு ஆளுநர் நிபுணத்துவ குழுவொன்றை நியமித்துள்ளார். அந்தக் குழு பல காணிகளை அடையாளங் கண்டுள்ளது. மத்திய அரசும் இது தொடர்பில் முடிவு எடுத்து இந்தப் பணிகளை துரிதப்படுத்த வேண்டும்.

### சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி

முல்லைதீவு மாவட்டத்திலுள்ள 23083 ஏக்கர் நிலத்தை வன இலாக வர்த்தமானியில் அறிவித்து ஒதுக்கப்பட்ட வன பகுதியாக அறிவிக்க மாவட்ட செயலகத்திடம் கருத்து கோரியுள்ளது. மகாவலி அதிகார சபை 70 வீதத்திற்கு மேற்பட்ட நிலங்கள் வன இலாகா திணைக்களத்திடமும் வனஜீவராசிகள் திணைக்களத்திடமும் மகாவலி அதிகார சபையிடமும் தான் உள்ளன. இந்த நிலையில் மேலதிகமாக காணிகளை எடுக்கும் முயற்சியை அமைச்சர் நிறுத்த வேண்டும். அவ்வாறு வர்த்தமானி அறிவிக்கப்பட்டால் விவசாயம் செய்யவோ மேய்ச்சலுக்கோ அனுமதி கிடைக்காது.

### பைசல் காசிம் எம்.பி

அமைச்சர் அஷ்ரப் ஒலுவில் துறைமுக திட்டத்தை கொண்டு வந்தார்.அவர் 2000 ஆம் ஆண்டு இறந்தார்.ஆனால் அவர்தான் இந்த திட்டத்தை மேற்கொண்டதாக சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர். அதற்கான நிதியைகொண்டுவரவில்லை.

### காஞ்சன விஜேசேகர: இராஜாங்க அமைச்சர்

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் இறால் வளர்ப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அத்துடன் நோர்வேயின் நிதி உதவியுடன் திருகோணமலையில் பல்வேறு திட்டங்களை எதிர்வரும் ஜனவரியில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

எமது அரசாங்கம் மீனவர்களின் வருமான வரியை நீக்கியுள்ள நிலையில் அவர்கள் தமது வருமானத்தை அதிகரிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. புதிய மீன்பிடி துறைமுகங்கள் நிர்மாணிப்பு மற்றும் சுற்றுலாத்துறை, கடற்தொழில் ஆகியவற்றுக்கு வசதியாக பல்வேறு திட்டங்களை முன்னெடுப்பதே எமது எதிர்கால திட்டமாகும்.

மீன் வளர்ப்பு, மீன் குஞ்சுகளை இடல், மீனவர்களுக்கான உதவிகளை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை எமது அமைச்சு முன்னெடுத்து வருவதுடன் தனியார் துறையுடன் இணைந்து அவர்களின் ஒத்துழைப்புடன் பல்வேறு திட்டங்களை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மூவாயிரத்துக்கும் அதிகமான ஏக்கர்களில் இறால் வளர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கு சிவநேசதுரை சந்திரகாந்தன் எம் பி மற்றும் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் ஆகியோரின் ஒத்துழைப்புகளும் பெறப்படும்.

# ஒன்லைனூடாக 3,000 அமெ. டொ. வரை மாணிக்கக் கற்களுக்கான கட்டளைகளை வழங்குவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்

## கைத்தொழில் அமைச்சு பற்றிய ஆலோசனைக் குழுவில் அனுமதி



3,000 அமெரிக்க டொலர்கள் வரை பெறுமதியான மாணிக்கக் கற்களை இணையத்தின் ஊடாக (ஒன்லைன்) ஆடர் செய்து கொள்வனவு செய்வது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கைத்தொழில் அமைச்சு பற்றிய ஆலோசனைக் குழுவில் (06) அங்கீகரிக்கப்பட்டது.

தற்போது நிலவும் கொவிட்19 சூழ்நிலை காரணமாக சுற்றுலாத்துறை மீதான கட்டுப்பாடுகளால் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழிலை மேம்படுத்துவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக இங்கு தெரியவந்தது.

இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையினால் அறவிடப்படும் 0.5 வீத கட்டணத்தை 0.25 வீதமாகக் குறைப்பது இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

1993ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் கைத்தொழில் அமைச்சரினால் உருவாக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் அடங்கிய 2165/2 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் இவ்வாறு குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது.

கைத்தொழில் அமைச்சர் கௌரவ விமல் வீரவன்ச, இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஆகியோர் தலைமையில் (06) நடைபெற்ற இக்கூட்டத்தில் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் தயா ரத்னாயக உள்ளிட்ட அரச அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இரத்தினபுரி 'வேகங்க' பிரதேசத்தில் மாணிக்கக்கல் அகழ்வுக்காக ஆரம்பிக்கப்பட்ட திட்டம் அங்கு ஏற்பட்ட எதிர்ப்புப் போராட்டம் காரணமாக இடைநிறுத்தப்பட்டமை குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பில் கலந்துரையாடி, நாட்டுக்குப் பாரிய வருமானத்தை ஈட்டித்தரக்கூடிய இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த சுட்டிக்காட்டினார்.

எலஹெர பிரதேசத்தில் இரத்தினக்கல் அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறையை ஒழுங்குபடுத்துவதன் ஊடாகப் பொது மக்களை மாணிக்கக்கல் அகழ்வுத் தொழிலில் இணைத்து கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் இதற்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும் என இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் உள்ள பல்வேறு தொழிற்பேட்டைகள் மற்றும் கைத்தொழில்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் கவனத்தை ஈர்த்தனர்.

அவற்றை உரிய அதிகாரிகளின் ஒருங்கிணைப்பில் உடனடியாக தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறும், விரிவான அறிக்கைகளை அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிக்குமாறும் அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

# பாராளுமன்றில் எதையும் பேசலாம் என்று சிலர் நினைப்பது தவறு

## சுமந்திரனின் கருத்துக்கு அமைச்சர் டக்ளஸ் பதில்



பாராளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி எதையும் பேசலாம் என்று சிலர் நினைத்துக் கொண்டிருப்பதாக குற்றம்சாட்டியுள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குருநகர் இழுவை வலை மீன்பிடிப் படகு உரிமையாளர்களிடம்; கப்பம் அறவிப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் சபையில் தெரிவித்த கருத்தை ஹன்சாட்டிலிருந்து நீக்க வேண்டமெனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட கடற்றொழில் அமைச்சு தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு நேற்று(07) உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

விவாத்தில் தொடர்ந்தும் கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் முண்டு கொடுக்கப்பட்ட கடந்த ஆட்சிக் காலத்தில் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில், இழுவை வலைத் தொழில் தடை சட்டம் மற்றும் வெளிநாட்டு படகுகள் தொடர்பான சட்டம் போன்ற சட்டங்கள் உருவாக்கப்பட்ட போதிலும், இழுவை வலைத் தடைச்சட்டத்தை பயன்படுத்த வேண்டாமென்று அறிவுறுத்தப்பட்டிருந்ததுடன் அவை அமுல்படுத்தப்படவில்லையெனவும்,

நாரா நிறுவனத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ளூர் இழுவை வலைப் படகுகள் தொழிலில் ஈடுபடுவதற்கு தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டிய கடற்றொழில் அமைச்சர், உள்ளூர் இழுவை வலை படகு ஒன்றுக்கு 5,000 ரூபாய் வீதம் கடற்றொழில் அமைச்சருக்கு வழங்கப்படுவதனாலேயே அவை தொழிலில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்த கருத்திற்கு தன்னுடைய கண்டனத்தையும் தெரிவித்தார்.

பாராளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி குறித்த கருத்தை வெளியிட்டுள்ள பாராடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், முடியுமானால் பொது வெளியில் ஊடகங்கள் முன்னிலையில் தெரிவிக்குமாறும் சவால் விடுத்தார்.

அத்துடன், கடற்றொழில் அமைச்சரின் ஊடகச் செயலாளர் நெல்சன் எதிரிசிங்க தொடர்பாக அண்மையில் சில ஊடகங்களில் வெளியாகிய செய்தியை முழுமையாக மறுத்துள்ள கடற்றொழில் அமைச்சர், கடந்த 30 வருடங்களுக்கு மேலாக தன்னுடைய ஊடகச் செயலாளராக பணியாற்றி வருகின்ற நெல்சன் எதிரிசிங்க, பணி நிமித்தம் நாடு முழுவதும் பயணிப்பதாகவும், அந்தவகையில் அண்மையில் முல்லைத்தீவுக்கு சென்றிருந்ததாகவும் தெரிவித்ததுடன், சட்டவிரோதச் செயற்பாடுகள் எதிலும் அவர் ஈடுபடவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்தில் கடற்றொழில் சார்ந்து முன்வைக்கப்பட்டிருந்த 16 இலக்குகளை செயற்படுத்துவதற்கு ஏதுவான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கு அமைவாக, 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் செப்டெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதிக்குள் மொத்தம் 3,21,575 மெற்றிக் தொன் மீனின அறுவடையை எட்டியுள்ளதாகவும் தெரிவித்ததுடன், கடந்த வருடத்தில் கடற்றொழில் அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் மற்றும் மக்களுக்கு கிடைத்த நன்மைகள் தொடர்பாகவும் தெளிவாக எடுத்துரைத்ததுடன் அடுத்த வருடத்தில் மேற்கொள்ளவுள்ள திட்டங்கள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தினார்.

# சர்வதேச செய்திகள்

## பீஜிங் ஒலிம்பிக்கை அமெரிக்கா இராஜதந்திர ரீதியில் புறக்கணிப்பு

### பதில் நடவடிக்கை பற்றி சீனா எச்சரிக்கை




சீனாவில் அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டியை இராஜதந்திர ரீதியில் புறக்கணிப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

சீனா மீதான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் காரணமாக, குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளுக்கு தங்கள் நாட்டின் சார்பாக அதிகாரிகள் அனுப்பப்பட மாட்டார்கள் என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

ஆனால், தங்கள் நாட்டு விளையாட்டு வீரர்கள் அப்போட்டிகளில் கலந்துகொள்வார்கள் எனவும், அவர்களுக்கு அரசின் முழு ஆதரவு இருக்கும் எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இந்த அறிவிப்புக்கு சீனா கண்டனம் வெளியிட்டுள்ளது. இதற்கான தீர்க்கமான பதில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சீன வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் சவோ லிஜியான் எச்சரித்துள்ளார். எனினும் அது பற்றி மேலதிக விபரம் எதனையும் அவர் கூறவில்லை.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய சாவோ, விளையாட்டில் அரசியல் நடுநிலைத் தன்மையை அமெரிக்கா மீறி இருப்பதாகவும் கூறப்பட்டிருக்கும் புறக்கணிப்பு 'பொய்கள் மற்றும் வதந்திகள் அடிப்படையில்' எடுக்கப்பட்ட முடிவு என்றும் குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்கு இடையிலான பதற்றம் அதிகரித்துள்ளது. சீனாவின் மேற்கு பிராந்தியமான சின்ஜியாங்கில் சிறுபான்மை உய்குர் முஸ்லிம்கள் மீது ஒடுக்குமுறையை கட்டவிழ்த்து இனச்சுத்திகரிப்பில் சீனா ஈடுபடுவதாக அமெரிக்கா குற்றம்சாட்டுகிறது. இந்த குற்றச்சாட்டை சீனா மறுத்துள்ளது.

ஹொங்கொங்கில் அரசியல் சுதந்திரத்தை சீனா ஒடுக்குவதான குற்றச்சாட்டும் இரு நாடுகளுக்கும் இடையிலான பதற்றத்தின் மற்றொரு காரணியாகும்.

ஒலிம்பிக் போட்டிகளில் அமெரிக்கா மற்றும் ஏனைய நாடுகளின் உயர் மட்ட அரச பிரதிநிதிகள் பங்கேற்பது வழக்கமானதாகும். இந்த ஆண்டு ஆரம்பத்தில், டோக்கியோவில் இடம்பெற்ற கோடைகால ஒலிம்பிக்கில் முதல் பெண்மணி ஜில் பைடன் தலைமையில் அமெரிக்க பிரதிநிதிகள் குழு பங்கேற்றிருந்தனர்.

## தென்னாபிரிக்காவில் ஒமிக்ரோன் உச்சம்



தென்னாபிரிக்காவில் ஒமிக்ரோன் கொரோனா வைரஸ் திரிபினால் நோய் பரவல் சம்பவங்கள் கணிசமாக அதிகரிப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

அன்றாடம் பதிவாகும் வைரஸ் தொற்றுச் சம்பவங்கள் ஒரே வாரத்தில் 5 மடங்கு அதிகரித்து 16,000ஐத் தாண்டியுள்ளது.

நோய்த்தொற்றுப் பரிசோதனைகளில் கால்வாசி, வைரஸ் தொற்றியிருப்பதை உறுதி செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. இரண்டு வாரங்களுக்கு முன், அந்த எண்ணிக்கை 2 வீதம் மட்டுமே இருந்தது.

'வைரஸ் தொற்றுச் சம்பவங்கள் இதுவரை காணாத விதத்தில் அதிகரிக்கின்றன' என்று தென்னாபிரிக்க ஜனாதிபதி சிரில் ராமபோசா கூறினார். இந்நிலையில், அனைவரும் உடனடியாகத் தடுப்பூசி போட்டுக்கொள்ளுமாறு அவர் கோரினார்.

## பேஸ்புக் மீது ரொஹிங்கிய முஸ்லிம் அகதிகள் வழக்கு



தமக்கு எதிரான வெறுப்புப் பேச்சை தடுக்கத் தவறியதாக பிரிட்டன் மற்றும் அமெரிக்காவில் இருக்கும் ரொஹிங்கிய அகதிகள் பேஸ்புக் சமூகதளத்தின் மீது வழக்குத் தொடுத்துள்ளனர்.

பாகுபடுத்தப்பட்ட சிறுபான்மையினரான ரொஹிங்கியருக்கு எதிராக வன்முறையை தூண்டியதான குற்றச்சாட்டில் பேஸ்புக்கிடம் இவர்கள் 150 பில்லியல் டொலர் இழப்பீடு கேட்டுள்ளனர்.

பௌத்த பெரும்பான்மை நாடான மியன்மாரில் 2017 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை ஒன்றில் சுமார் 10,000 ரொஹிங்கிய முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

தற்போது மெடா என்று அழைக்கப்படும் பேஸ்புக் நிறுவனம், இது தொடர்பில் எந்த பதிலும் அளிக்கவில்லை. அந்த நிறுவனம் பல ஆண்டுகளாக வெறுப்புப் பேச்சு மற்றும் அபாயகரமான தாவறான தகவல்களை பரப்புவதற்கு அனுமதி அளித்ததாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

கலிபோர்னியா நீதிமன்றம் ஒன்றில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த வழக்கில், அமெரிக்காவை தளமாகக் கொண்ட நிறுவனம் கடைப்பிடித்த வழிமுறைகள் தவறான தகவல்கள் மற்றும் கடும்போக்குச் சிந்தனைகளை உண்மையான உலகில் வன்முறையாக மாற்ற ஊக்குவித்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மியன்மாரில் பேஸ்புக் 20 மில்லியன் பயனர்களை கொண்டுள்ளது. செய்திகளை பகிர்வதற்கும் பெறுவதற்கும் பிரதான மற்றும் ஒரே சமூதளமாக அது உள்ளது.

## சூக்கியின் தண்டனை பாதியாக குறைப்பு



மியன்மாரில் பதவியிலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் அரசாங்க ஆலோசகர் ஆங் சான் சூக்கியிற்கு விதிக்கப்பட்ட 4 ஆண்டுச் சிறைத் தண்டனை பாதியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

மியன்மாரின் அதிகாரபூர்வத் தொலைகாட்சி நிறுவனம் அதனை அறிவித்தது.

சூக்கியையும் முன்னாள் ஜனாதிபதி வின் மிண்ட்டையும் மன்னித்து தண்டனைக் காலத்தைக் குறைத்ததாக மியன்மார் இராணுவத் தலைவர் மின் ஆங் லைன் தெரிவித்தார்.

சூக்கியிற்கும் வின் மிண்ட்டுக்கும் இராணுவத்திற்கு எதிராகக் கருத்து வேறுபாட்டைத் தூண்டிவிட்டதற்காகவும் கொவிட்–19 விதிமுறைகளை மீறியதற்காகவும் தண்டனை விதிக்கப்பட்டது.

## ஐக்கிய அரபு இராச்சியத்தில் வார இறுதி நாட்களில் மாற்றம்



ஐக்கிய அரபு இராச்சியம் தனது வாரத்தின் உத்தியோகபூர்வ வேலை நாட்களை நான்கரை நாட்களாகக் குறைத்து சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுகிழமை வார இறுதி நாட்களாக மாற்றியுள்ளது.

வரும் ஜனவரி 1ஆம் திகதி முதல் இந்த புதிய தேசிய வேலை வாரம் கட்டாயமாக்கப்படுவதோடு, இது முஸ்லிம்களின் ஜூம்மா தொழிகை நாளான வெள்ளிக்கிழமைகளில் முழு நாள் விடுமுறை என்ற பிராந்தியத்தின் வழக்கத்தை மீறுவதாக உள்ளது.

வளைகுடாவில் வெள்ளி மற்றும் சனிக்கிழமை வார இறுதி நாள் அல்லாத ஒரே நாடாக ஐக்கிய அரபு இராச்சியம் மாறவிருப்பதோடு அது அரபு அல்லாத உலக நாடுகளின் போக்குடன் இணையவுள்ளது.

புதிய கால அட்டவணைப்படி அரச துறையின் வார இறுதி வெள்ளிக்கிழமை நண்பகலுடன் ஆரம்பித்து ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவடையவுள்ளது. பள்ளிவாசல்களில் வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகை ஆண்டு முழுவதும் பி.ப. 1.15க்கு இடம்பெறும்.

உலக சந்தைகளுடன் ஐக்கிய அரசு இராச்சியம் சிறந்த முறையில் இணையும் நோக்குடன் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அரச செய்தி நிறுவனமான வாம் தெரிவித்துள்ளது. புதிய வேலை வாரம் உலகில் மிகக் குறுகியதாக இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

## தஹ்ரீக்கே லப்பைக்கின் செல்வாக்கு அதிகரிப்பு



பாகிஸ்தானின் தடை செய்யப்பட்டிருந்த தஹ்ரீக்கே லப்பைக் பாகிஸ்தான் அமைப்பின் தடையை இம்ரான் கான் அரசு நீக்கி அதன் தலைவரையும் விடுதலை செய்ததை அடுத்து அந்த அமைப்பு எழுச்சி பெற்றிருப்பதாக கூறப்படுகிறது.

அந்த அமைப்பின் புதிய ஆர்ப்பாட்டங்களை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் கடந்த ஒக்டோபர் 31 ஆம் திகதி அரசுடன் இரகசிய உடன்படிக்கை இடம்பெற்றதாக உரிமைகள் மற்றும் பாதுகாப்பிற்கான சர்வதேச பேரவை தெரிவித்துள்ளது.

இந்த உடன்படிக்கை பொதுவெளியில் வெளியிடப்படாத நிலையில், நவம்பர் 7 ஆம் திகதி அமைச்சரவை தஹ்ரீக்கே லப்பைக்கின் தடையை அகற்றும் அறிவிப்பை வெளியிட்டது. பாகிஸ்தான் முஸ்லிம் லீக் நவாஸ் அரசு மற்றும் இராணுவத்தின் செல்வாக்குக் கொண்ட அரச பிரிவுகளில் தஹ்ரீக்கே லப்பைக் அனுகூலங்களை பெற்றதாக மேற்படி பேரவை குறிப்பிட்டுள்ளது.

## பிரியந்த குமார படுகொலை பாக். தேவாலயம் கண்டனம்



இலங்கையைச் சேர்ந்த பிரியந்த குமார, சியல்கோட்டில் கலகக்கார கும்பலால் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு பாகிஸ்தான் கிறிஸ்தவ தேவாலயத் தலைமைகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

விளையாட்டு ஆடைகள் உற்பத்தி தொழிற்சாலையில் கடந்த 10 ஆண்டுகளாக பொது முகாமையாளராக இருந்த பிரியந்த குமார மத நிந்தனை குற்றச்சாட்டில் கொடூரமாகக் கொல்லப்பட்டது முழு நாட்டுக்கும் அதிர்ச்சியையும் வேதனையையும் தந்துள்ளது என்று பாகிஸ்தான் தேவாலய தலைமை பாதிரியார் அசாத் மர்ஷா மற்றும் லாஹூர் ரோமன் கத்தோலிக்க பேராயர் செபஸ்டியன் பிரான்சிஸ் தெரிவித்துள்ளனர். 'குமாரவின் கொலை எம் அனைவரையும் கவலையில் ஆழ்த்தியுள்ளது. இந்த மாபெரும் துயரத்தில் அவரது குடும்பத்தினருக்கும் இலங்கை மக்களுக்கும் எங்களது பிரார்த்தனைகள் உரித்தாகட்டும். பாகிஸ்தானியர்களாக, நாம் தலை குனிந்துள்ளோம்' என்று அவர்கள் 'தி நேசன்' பத்திரிகைக்கு குறிப்பிட்டுள்ளனர்.

## சீன டிஜிட்டல் திட்டத்தை சார்ந்திருக்கும் பாகிஸ்தான்




பாகிஸ்தான் தனது டிஜிட்டல் மாற்றத்தில் சீனாவின் டிஜிட்டல் பட்டுப் பாதையில் சார்ந்திருப்பதாக கூறப்படுகிறது. தொழில்நுட்பம் மற்றும் தொலைத்தொடர்புக்கு விசேட முக்கியத்துவம் அளித்து சீனா–பாகிஸ்தான் பொருளாதார வழித்தடம் டிஜிட்டல் மாற்றத்தை மேற்கொண்டிருப்பதாக நிக்கெய் ஏசியா பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தானுடனான சீனாவின் முதன்மையான பொருளாதார வழித்தடம் தொழில்நுட்பம் மற்றும் தொலைத்தொடர்புகளில் அவதானம் செலுத்தி மேம்படுத்தப்படுகிறது. பெரிய போக்குவரத்து மற்றும் ஆற்றல் திட்டங்களை விட டிஜிட்டல் திட்டங்கள் குறைந்த முன்செலவு மற்றும் வேகமான காலக்கெடுவை வழங்க முடியும். எனினும் அவை அபாயங்களையும் கொண்டுள்ளன என்று பாகிஸ்தானின் திட்டமிடல் அமைச்சர் அண்மையில் நிக்கெய் ஏசியாவுக்கு தெரிவித்துள்ளார்.

தேவையான டிஜிட்டல் மாற்றத்திற்கு அவசியமான அத்தியாவசிய செயற்பாடுகளுக்காக சீனாவின் டிஜிட்டல் பட்டுப்பாதையில் பாகிஸ்தான் அதிகம் தங்கி இருப்பது, அதில் சார்ந்திருப்பது போன்ற தோற்றத்தை தருகிறது என்று நிக்கெய் ஏசியா சுட்டிக்காட்டியுள்ளது.

## ஒரே 'சூம்' அழைப்பில் 900 ஊழியர்கள் நீக்கம்



அமெரிக்க நிறுவனம் ஒன்றின் தலைவர் 'சூம்' அழைப்பு வழியாக சுமார் 900 ஊழியர்களை பணி நீக்கம் செய்தது கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது.

'நீங்கள் இந்த அழைப்பில் இருந்தால், பணிநீக்கம் செய்யப்பட்ட துரதிர்ஷ்டவசமான குழுவின் ஒருவராக இருப்பீர்கள்' என்று அடகு நிவனமான பெட்டர்.கொம் நிறுவனத்தின் தலைமை நிர்வாகி விஷால் கார்க் அந்த சூம் அழைப்பில் குறிப்பிட்டுள்ளார். இந்த வீடியோ பின்னர் சமூக ஊடகத்தில் வெளியாகியுள்ளது.

கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தை எதிர்நோக்கி இருக்கும் இந்த நேரத்தில் இது கடுமையான மற்றும் பயங்கர நடவடிக்கை என்று சமூக ஊடகத்தில் கருத்துகள் வெளியாகியுள்ளன. ஊழியர்களின் செயல்திறன் மற்றும் உற்பத்தித் திறன் மற்றும் சந்தையில் ஏற்பட்டுள்ள மாற்றம் இந்த பணி நீக்கத்திற்கு காரணம் என்று குறிப்பிட்டிருக்கும் விஷால் கார்க், தமது நிறுவனத்தின் ஒட்டுமொத்த ஊழியர்களில் 15 வீதமானவர்கள் நீக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

## செமேரு எரிமலை வெடிப்பு: மீட்புப் பணிகள் அதிகரிப்பு



செமேரு எரிமலை வெடித்ததைத் தொடர்ந்து அங்கு மீட்புப் பணிகளை மேலும் அதிகரிக்கவும் சேதமடைந்த வீடுகளைச் சரிசெய்யவும் இந்தோனேசிய ஜனாதிபதி ஜோக்கோ விடோடோ உத்தரவிட்டுள்ளார்.

ஜாவா தீவில் உள்ள செமேரு எரிமலை கடந்த சனிக்கிழமை குமுறியது. எரிமலையின் அருகிலிருந்த கிராமங்களும் வசிப்பிடங்களும் எரிமலைச் சாம்பலால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன.

குறைந்தது 34 பேர் உயிரிழந்திருப்பதாகவும் 17 பேரைக் காணவில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சுமார் 3,700 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி விடோடோ மக்கள் தஞ்சமடைந்துள்ள தற்காலிக முகாம்களுக்கு நேற்று சென்றார். அதன் பின்னர் ஹெலிகொப்டர் மூலம் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டார்.

சுமார் 2,000 வீடுகள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றித்தரப்படும் என்று அவர் கூறினார்.

நேற்று மட்டும் 3 முறை செமேரு எரிமலை குமுறியது. எரிமலைக் குமுறல் தொடரும் என்று அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். மோசமான வானிலையால் மீட்புப்பணிகளில் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன.

## கைவிடப்பட்ட காருக்குள் எட்டு சிறுவர்களின் சடலங்கள் மீட்பு



நைஜீரியாவின் மிகப்பெரிய நகரான லாகோஸில் கைவிடப்பட்ட கார் ஒன்றில் எட்டு சிறுவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டது குறித்து தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நான்கு முதல் ஆறு வயது கொண்ட சிறுவர்களின் உடல்களே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை சவச்சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் மரணத்திற்கான காரணத்தை கண்டறிய பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த குழந்தைளின் பெற்றோர் லாகோஸில் வசிக்கும் நைகர் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்பட்டுள்ளது. இந்த சிறுவர்கள் இரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று லாகோசில் இருக்கும் நைகர் நாட்டவர்களின் பிரிதிநிதிகள் சங்கத்தின் தலைவர் செய்த்து அப்துல் லாஹ் தெரிவித்துள்ளார்.

அது பற்றி முழுமையான விசாரணைகளை நடத்தும்படி அவர் நிர்வாகங்களை கேட்டுக்கொண்டுள்ளார். இந்த சிறுவர்களின் சடலங்கள் கைவிடப்பட்ட காரில் மூடப்பட்ட நிலையில் கடந்த சனிக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டன.




# தலவாக்கலை-லிந்துலை நகர சபையின் 2022 வரவு செலவுத் திட்டம் தோல்வி

ஹற்றன் சுழற்சி நிருபர்



தலவாக்கலை – லிந்துலை நகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நேற்று (07) தோல்வியடைந்துள்ளது.

வரவு செலவுத் திட்டத்திற்கு ஆளும் கட்சியின் இரண்டு உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தமையால் வரவு செலவுத் திட்டம் தோல்வியடைந்துள்ளது.

நகர சபையின் தலைவர் லச்சுமன் பாரதிதாசனினால், 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டது.

14 ஆயிரம் கோடியே 43 இலட்சத்து இருபத்து ஆயிரத்து 60 ரூபா மதிப்பிலான 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு நகர சபையில் நேற்று சமர்பிக்கப்பட்டது.

இந்த வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன சார்பில் சந்தன குணதிலக மற்றும் பிரசன்ன விதானகே ஆகியோர் வாக்களித்தனர்.

இதனால் வரவு செலவுத் திட்டம் 5க்கு 4 என்ற பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

தலவாக்கலை – லிந்துலை நகர சபையில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மூன்று உறுப்பினர்களும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மூன்று உறுப்பினர்களும், சுயேட்சை குழுக்கள் சார்பில் இரண்டு உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் இரண்டு உறுப்பினர்களும் உள்ளனர்.

இவர்களில் சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் சுயேட்சை குழு உறுப்பினர் நேற்று (07) சபைக்கு சமுகமளித்திருக்கவில்லை.

அதேபோல ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினவை பிரதிநிதித்துவப்படுத்திய மயில்வாகனம் பரமானந்தனுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டார்.

இந்த நிலையில் தனக்கு பதிலாக அசங்க சம்பத் நியமிக்கப்பட்டமைக்கு எதிராக மயில்வாகனம் பரமானந்தன் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் இடைகால தடை உத்தரவை நேற்று பெற்றுக்கொண்டார். இந்த தடை உத்தரவு குறித்த அறிவிப்பு நீதிமன்றத்தால் சபைக்கு அறிவிக்கப்பட்டது.

இதனால் உறுப்பினராகும் சந்தர்ப்பத்தை அசங்க சம்பத் பீரிசுக்கு நகர சபை தலைவர் வழங்கவில்லை. இதனால் சபையில் அமைதியின்மை ஏற்பட்ட நிலையில் அசங்க சம்பத் பீரிஸ் பொலிஸாரால் சபையில் இருந்து அகற்றப்பட்டார்.

இவ்வாறு தலவாக்கலை – லிந்துலை நகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தோல்வியடைந்ததால் சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

தெமோதரை, சௌதம் பாடசாலைக்கு

# புதிய பாலத்தை நிர்மாணித்து கொடுத்த செந்தில் தொண்டமான்



தெமோதரை தோட்டத்திலுள்ள சௌதம் பாடசாலைக்கு செல்ல மாணவர்கள் பயன்படுத்தும் மரக் கட்டைகளாலான பாலம் புதுப்பிக்கப்பட்டு, பிரதமரின் இணைப்பு செயலாளர் செந்தில் தொண்டமானால் மாணவர்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

இன்றைய மாணவர்கள் நம் நாட்டின் நாளைய சொத்துக்கள். மாணவர்களை பாதுகாத்து அவர்களை வழிநடத்த வேண்டியது நமது பொறுப்பாகும்.

தெமோதரை தோட்டத்திலுள்ள சௌதம் பாடசாலை அதிக மழை காலப்பகுதியில் மரக்கட்டைகளாலான பாலத்தின் ஊடாக மாணவர்கள் பாடசாலைக்கு செல்ல வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

அதனையடுத்து செந்தில் தொண்டமானிடம் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் முன்வைத்த கோரிக்கையை ஏற்று, இப்பாலம் நிர்மாணிக்கப்பட்டு மாணவர்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

இவ்வேலைத் திட்டமானது செந்தில் தொண்டமானுக்கு வழங்கப்பட்ட விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் முன்னெடுக்கப்பட்டது.

## இராணுவ வீரர் சடலமாக மீட்பு

குருவிட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வலந்துர கெரடி எல்ல பகுதியில் நீராட சென்று காணாமல் போன இராணுவ கபிதான் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் கரடி எல்ல கீழ்ப்பகுதியில் உள்ள ஆற்றில் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர். குருவிட பொலிஸ் அதிகாரிகள், குருவிட இராணுவ முகாம் அதிகாரிகள் மற்றும் பிரதேசத்திலுள்ள மக்கள் ஒன்றிணைந்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட போது சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குருவிட கெமுனு சேவை ரெஜிமேண்டில் பணியாற்றிய இராணுவ கபிதான் சுரன் ரணசிங்க(32) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு மரணமடைந்துள்ளார். இவர் மில்ல விடிய பகுதியைச் சேர்ந்தவராவர்.



ஒன்றிணைக்கப்பட்ட சுகாதார சேவை சங்கத்தின் செயலாளர் டெம்பிடிய சுகதானந்த ஹிமியை விடுதலை செய்ய கோரியும் சுகாதார சேவையாளர்களின் ஏனைய பிரச்சினைகளுக்கும் உடனடியாக தீர்வு பெற்று தரும்படி கோரியும் சுகாதார சேவையாளர்கள் நேற்று (7) பகல் 12 மணி முதல் 1 மணி வரை நுவரெலியா பொது வைத்தியசாலை முற்றத்தில் அடையாள பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட போது,... படம்: தலவாக்கலை குறூப் நிருபர்

மாத்தளை பழைய பொலிஸ் நிலைய காணி;

# தீர்வு பெற்றுதருவதாக மத்திய மாகாண ஆளுநர் தெரிவிப்பு

மாத்தளை சுழற்சி நிருபர்

மாத்தளை மாநகரசபை நிர்வாகத்தினரால் மாத்தளை பழைய பொலிஸ் நிலையம் அமைந்துள்ள காணியை பொறுப்பேற்கும் விடயத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகே நேற்று முன்தினம் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன் போது குறித்த காணியை ஆளுநர் பார்வையிட்ட பின்னர் அதன் சுற்றுப் பகுதியை வரைந்து வரைபடம் ஒன்றை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்குமாறும் காணியின் பிரச்சினையை இனங்கண்டு துரிதகதியில் இதற்கான தீர்வை பெற்றுத்தருவதாக ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார்

இந்நிகழ்வில் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான நலக்க கோட்டகொட, ரோஹன திஸாநாயக்க உட்பட மாத்தளை மாநகர சபை முதல்வர் எஸ்.பிரகாஷ், துணை முதல்வர் அமில நிரோஷன், மத்திய மாகாண ஆளுநரின் செயலாளர் திலகரத்ன, முன்னாள் மத்திய மாகாண சபை பிரதித் தலைவர் ரத்னாயக்க, பொலிஸ் அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்

# டயகம ஆக்ரோயா ஆற்றிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு

ஹற்றன் சுழற்சி நிருபர்

டயகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டயகம ஆக்ரோயா ஆற்றிலிருந்து பெண்ணின் சடலம் ஒன்று நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டதாக டயகம பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்ட பெண் டயகம 5ம் பிரிவை சேர்ந்த 53 வயதுடைய சாமிநாதன் தங்கேஸ்வரி என அடையாளம் காணப்பட்டுள்ளார். குறித்த ஆற்றில் பெண் ஒருவரின் சடலம் மிதப்பதைக் கண்ட பிரதேச மக்கள் உடனடியாக பொலிஸாருக்கு அறிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த டயகம பொலிஸார் சடலத்தை பார்வையிட்ட பின் மீட்டுள்ளனர். மீட்கப்பட்ட பெண்ணின் மரணம் தொடர்பில் பலகோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மரண விசாரணைகளின் பின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக நுவரெலியா ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை டயகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தொடர்ந்து வெடிக்கும் கேஸ் சிலிண்டர்கள் மற்றுமொரு மரணம் மாத்தளையில்

மாத்தளை சுழற்சி நிருபர்

மாத்தளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடுபிஹில்ல பகுதி வீடொன்றில் இடம்பெற்ற கேஸ் வெடிப்பு சம்பவத்தில் காயமடைந்து மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த பெண் ஒருவர் (6) நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

மாத்தளை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக எரிவாயு கசிவு மற்றும் எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இச்சம்பவத்தில் உடுபிஹில்லவை சேர்ந்த எம். என். சந்திரகுமாரி (69) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார்

கடந்த நவம்பர் மாதம் 19ஆம் திகதி காலை குறித்த பெண் தேநீர் தயாரிப்பதற்காக கேஸ் அடுப்பை மூட்டிய போதே இவ் அனர்த்தம் ஏற்பட்டுள்ளது என பொலிஸார் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. காயங்களுக்குள்ளான இப்பெண் கடந்த இரண்டு வாரங்களாக மாத்தளை மாவட்ட ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இது தொடர்பாக விசாரணைகளை மாத்தளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாத்தளை எல்கடுவ வனப்பகுதி இரண்டு சடலங்கள் மீட்பு

மாத்தளை சுழற்சி நிருபர்

மாத்தளை எல்கடுவ வனப்பகுதி ஒன்றில் ஆண் மற்றும் பெண் ஒருவருமாக இரண்டு சடலங்களை பொலிஸார் நேற்று முன்தினம் மீட்டுள்ளனர்

காட்டுப் பகுதிக்கு விறகு சேகரிக்க சென்றவர்களால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவல் ஒன்றின் அடிப்படையில் சடலங்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

உயிரிழந்தவர்கள் இருவரும் திருமணம் ஆனவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. எல்கடுவ ஹுனுகள வீதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான வி.ஜி அஜித் குமார (40) எல்கடுவ ஹப்புவித்த வைச் சேர்ந்த விஜயகுமாரி(31) ஆகியோரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார்

விஷப் பானம் அருந்தி இவர்கள் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர். இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மாத்தளை பொலிசாரினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது

# நுவரெலியாவில் நேற்று 05 எரிவாயு அடுப்புகள் வெடிப்பு

ஹற்றன் சுழற்சி நிருபர்

நுவரெலியா நகரம் மற்றும் நுவரெலியா மாகொட ஆகிய பிரதேசங்களில் உள்ள வீடுகளில் நேற்று (07) மதியம் எரிவாயு அடுப்புகள் வெடித்துள்ளன.

குடியிருப்பாளர்கள் கேஸ் அடுப்பில் சமையல் செய்து கொண்டிருந்த போது, திடீரென கேஸ் அடுப்பு வெடித்ததால், கேஸ் அடுப்பு பலத்த சேதம் அடைந்தது.

இந்த வெடிப்பு சம்பவத்தினால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்பதுடன் நுவரெலியா பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, நானுஓயா எடின் புரோ தோட்டத்திலும், பூண்டுலோயா ஹெரோ தோட்டத்திலும், ஹற்றன், வெளிஓயா மேற்பிரிவு தோட்டத்திலும் நேற்று (07) எரிவாயு அடுப்புகள் வெடித்துள்ள சம்பவங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாத்தளை மாவட்டத்தில் மாம்பழ செய்கை விஸ்தரிப்பு



மாத்தளை சுழற்சி நிருபர்

அரசாங்கத்தின் சௌபாக்கிய வேலை திட்டத்திற்கு அமைய மாத்தளை மாவட்டத்தில் மாம்பழ செய்கையை விஸ்தரிக்க அரசினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்கு மாத்தளை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள மாம்பழ உற்பத்தியாளர்களுக்கு இலவசமாக மாமரக்கன்றுகள் பகிர்ந்தளிக்கும் நிகழ்வில் அமைச்சர் ஜனக்க பண்டார தென்னக்கோன், மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரமித பண்டார தென்னக்கோன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கருத்து வெளியிடும் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும்

திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கருத்து வெளியிடும் சுதந்திரம் இருக்கின்றது. எனவே, அதற்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலான செயற்பாடுகள் இடம்பெறுவது கண்டிக்கத்தக்கது. இவ்வாறான நடவடிக்கைகள் ஜனநாயக ஆட்சிக்கு விரோதமான செயற்பாடுகளாகும்." என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

நுவரெலியா – வலப்பனை நாராங்தலாவ, மைலகஸ்தென்ன ஸ்ரீ தர்மராஜராமய விகாரையின் விகாராதிபதியை சந்தித்து ஆசி பெற்றுக்கொண்ட பின், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமது கருத்துகளை, நிலைப்பாடுகளை சுதந்திரமாக பாராளுமன்றத்துக்குள் வெளியிடும் உரிமை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்க வேண்டும். அந்த உரிமையை பயன்படுத்தி கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை தாக்க முற்படுவது, அவருக்கு அச்சுறுத்தல் விடுப்பது என்பன ஏற்புடைய விடயமாக அமையாது. அவற்றை கண்டிக்க வேண்டும். அதேபோல பாராளுமன்றத்துக்குள் கடந்த இரு நாட்களாக இடம்பெற்ற சம்பவங்களானவை ஜனநாயக ஆட்சிக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

எதிரணி எம்.பிக்களுக்கு எதிரான அச்சுறுத்தலை ஏற்கமுடியாது. எனவேதான், பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரை சபை அமர்வுகளை புறக்கணிப்பதற்கு நாம் தீர்மானித்துள்ளோம். அதற்கான நடவடிக்கை எவ்வாறு இடம்பெறும் என்பதை கட்சியின் பாராளுமன்றக்குழு தீர்மானிக்கும்.

# மஸ்கெலியா சீர்பாதம் மேற் பிரிவிற்கு செல்லும் பிரதான பாதையின் அவலம்

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

மஸ்கெலியா மவுஸ்ஸாக்கலை தோட்ட சீர்பாதம் மேற் பிரிவிற்கு செல்லும் பிரதான பாதை குண்டும் குழியுமாக காணப்படுகிறது.

சுமார் 4 கிலோ மீட்டர் தூரமான இப்பாதை கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒரு கிலோமீட்டர் கொங்கிரீட் வீதியே போடப்பட்டுள்ளது. மீதமுள்ள மூன்று கிலோமீட்டர் தூரம் செப்பனிடப்படாததால் மக்கள் சௌகரியங்களுக்குள்ளாகியுள்ளனர்.

மாணவர்கள், நோயாளர்கள் இவ்வீதி ஊடாக செல்லும் போது பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பாதை சீரமைக்கப்படுவது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்த வேண்டும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



# உள்ளூராட்சி சபைகளைத் தோற்கடிப்பது மக்களின் ஆணைக்கு முரணான செயற்பாடு

**யாழ்.விஷேட நிருபர்**

உள்ளூராட்சி சபைகளை தோற்கடித்து, ஆணையாளர்களின் கீழ் சபைகளைக் கொண்டுவர முயற்சிப்பதைப்போல ஒரு மோசமான நிலை, எதுவுமில்லையென முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ்பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர்,இவ்வாறு தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி சபை தவிசாளர்களின் செயற்பாடுகளில் பிழைகள் இருக்கலாம். அல்லது அவர்கள் நன்றாக செயற்படுகிறார்கள் என மக்கள் மத்தியில் அபிப்பிராயங்களும் இருக்கலாம். இவற்றில்,சில கட்சிகள் சுயலாபம் அடையும் நோக்கில்,அல்லது தனிப்பட்ட நோக்கில், சபைகளைத் தோற்கடிக்க முனைகின்றன. இது,ஆரோக்கிய சூழலை ஏற்படுத்தாது.

இன்னும் சில காலங்களுக்கு உள்ளூராட்சி சபைகள் நீடிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படும் சூழலில், இந்தச் செயற்பாடுகள் ஆரோக்கியமாக அமையாது.

உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் ஏப்ரல் மாதமளவில் முடிவடையவுள்ள நிலையில், ஆறுமாத காலப்பகுதிக்கோ , ஒரு வருட கால பகுதிக்கோ சபைகள் நீடிக்கப்படக் கூடும் என நிச்சயமாக நம்புகிறேன்.

இவ்வாறான சூழலில், உள்ளூராட்சி சபைகளை தோற்கடிப்பது, ஆணையாளரின் கீழ் சபைகள் நிர்வகிக்கப்படும் நிலைமையை ஏற்படுத்தும்.வட மாகாண சபை இல்லாததால் , ஆளுநர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை கண்களால் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். அதேபோல உள்ளூராட்சிசபைகள், ஆணையாளர்களால் நிர்வகிக்கப்படுமாயின் இதே,கதிதான் ஏற்படும்.

# வவுனியா ஓமந்தை இராணுவ சாவடியில் 154 கிலோ கேரளா கஞ்சாவுடன் இருவர் கைது

**வவுனியா விஷேட நிருபர்**



வவுனியா ஓமந்தை இராணுவச் சாவடியில், பொலிஸார் திடீர் சோதனை நடத்தியதில்,150 கிலோ கேரளா கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர். யாழ்ப்பாணத்திலிருந்து மீன்கள் ஏற்றும் குளிரூட்டி வாகனத்தில் கொழும்புக்கு 154 கிலோ கேரளா கஞ்சா கடத்தப்படுவதாக ஓமந்தை இராணுவத்திற்கு இரகசிய தகவல் கிடைத்தது.இத்தகவலின் அடிப்படையில் சந்தேகத்திடமான குறித்த வாகனத்தை ஓமந்தை இரணைுவ சாவடியில் வைத்து இராணுவத்தினர் வழி மறித்தனர். இதன் போது, வாகனத்தில் சூட்சுமமான முறையில் மறைந்து வைக்கப்பட்டிருந்த 154 கிலோ கேரளா கஞ்சாவை இராணுவத்தினர் கைப்பற்றினர். வாகனத்தின் சாரதி மற்றும் உதவியாளர் ஆகியோரும் கைதாகி ஓமந்தை பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர், வவுனியா நீதிமன்றில் இவர்களை ஆஜர்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின் றது.

# சிலிண்டர் விநியோக கம்பனியை மாற்றுமாறு கொட்டடியில் ஆர்ப்பாட்டம்

**யாழ். விஷேட நிருபர்**

நாடு முழுவதும் சிலிண்டர் வெடிப்பு சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதால், யாழ்ப்பாணம் கொட்டடி பகுதியில் அமைந்துள்ள சிலிண்டர் விநியோக கம்பனியை வேறு இடத்துக்கு மாற்றுமாறு மக்கள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்தப்போராட்டம் நேற்று (07) யாழ்ப்பாணம் கொட்டடிப்பகுதியில் இடம்பெற்றது.இதில் பெருந்திரளான பிரதேசவாசிகள் கலந்துகொண்டனர். எமது உயிருக்கு யார் உத்தரவாதம்?, தற்போதைய தரமற்ற எரிவாயு விநியோகத்திற்கு யார் பொறுப்பு?, ஏழைகளின் உயிரா? பணமா?, போன்ற பதாகைகளை இவர்கள் ஏந்தியிருந்தனர்.

# இளம்பெண்ணை கடத்திச் சென்ற டிப்பர் வாகனம் விபத்து, ஒருவர் பலி

**பரந்தன் குறுப் நிருபர்**

கிளிநொச்சியில் இளம்பெண்ணை கடத்திச் சென்ற டிப்பர் வாகனம் விபத்துக்குள்ளாகி, ஒருவர் உயிரிழந்ததுடன், இருவர் படுகாயம் அடைந்துள்ளனர்.

வட்டக்கச்சி புதுப்பாலம் பகுதியில் அதி வேகமாக வந்த டிப்பர் வாகனம் வாய்க்கால் ஒன்றுக்குள் தடம் புரண்டது. சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துடன் இளம்பெண் ஒருவர் உட்பட்ட இருவர் படுகாயம் அடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் (06) இவ்விபத்து நிகழ்ந்தது.

இதேவேளை, குறித்த டிப்பர் வாகனத்தை சிலர், மோட்டார் சைக்கிள்களில் துரத்திச் சென்றதாகவும், அதன்போதே டிப்பர் வாகனச் சாரதி அதி வேகமாக வாகனத்தைச் செலுத்தியதால் கட்டுப்பாட்டை இழந்து வாகனம் விபத்துக்குள்ளனதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் கிளிநொச்சி நாகேந்திரபுரம் பகுதியைச் சேர்ந்த 17 வயதான டிலக்சன் என்ற இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

வாகனத்தில் கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் 23 வயதுடைய இளம் பெண், படுகாயம் அடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இது குறித்து பெண்ணின் குடும்பத்தார் தெரிவித்ததாவது,

எமது பிள்ளையை சில நபர்கள் டிப்பர் வாகனத்தில் கடத்திச் சென்னைர்.அவர்களை விரட்டிச் சென்றபோது, தப்பிக்க முற்பட்ட டிப்பர் வாகனமே விபத்துக்குள்ளதானதாக தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# உமையாள்புரம் பகுதியில் வெடிபொருட்கள் மீட்பு

**பரந்தன் குறுப் நிருபர்**

கிளிநொச்சி உமையாள்புரம் சோலை நகர் பகுதியில் உள்ள வீடொன்றில், பெருந்தொகையான எறிகணைகள் மற்றும் வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. விஷேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் இவை,மீட்கப்பட்டன.

கிளிநொச்சி உமையாள்புரம் சோலை நகர்ப் பகுதியில், கடந்த ஞாயிற்றுக்கிழமை வீட்டுக்குள்ளிருந்து எறிகணை ஒன்று வெடித்தது. இதில் 25 வயதுடைய இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்ததுடன் 13 வயதுடைய சிறுவன் ஒருவன் காயமடைந்தார். மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு இச் சிறுவன் மாற்றப்பட்டார்.

இந்த நிலையில், ஏற்கனவே சம்பவம் இடம்பெற்ற வீட்டில் ஒரு சில வெடி பொருட்களையும் அனைறைய தினம் அடையாளம் காணப்பட்டிருந்தன.

இதைத் தொடர்ந்து, விஷேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில், குறித்த வீட்டிலிருந்தும் வீட்டு வளவுக்குள்ளும் பெருந்தொகையான வெடிபொருட்கள் நேற்று காலை மீட்கப்பட்டுள்ளன

# அபிவிருத்திக்கு போதிய நிதி இல்லாததால் பட்ஜட் தோல்வி

**ஓமந்தை விஷேட நிருபர்**



மக்களின் அபிவிருத்தி திட்டத்துக்கு போதிய நிதி ஒதுக்கப்படாததால், வவுனியா வடக்கு பிரதேச சபையின் பட்ஜட் இரண்டாவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டது.

இந்தப் பிரதேச சபை,தமிழ் தேசிய கூட்டமைப்பின் வசமுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரதேச சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் ச.தணிகாசலம் தலைமையில் நேற்று (07) இடம்பெற்றது.சபையின் பட்ஜட்,கடந்த மாதம்

முன்வைக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது தோற்கடிக்கப்பட்டது.

இதையடுத்து,நேற்று (07) அது மீளவும் முன்வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது.

இதன்போது மக்கள் சார்பான வேலைத் திட்டத்திற்கு போதியளவு நிதி ஒதுக்கப்படவி ல்லை என பல்வேறு உறுப்பினர்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

குறிப்பாக இந்த வரவுசெலவு திட்டத்தினை தோற்கடிக்க வேண்டும் என தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் வி.சஞ்சுதன் கருத்து தெரிவித்தார்.

அவரது கருத்தை தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் பிரதீபன் முன்மொழிய, தமிழர் விடுதலை கூட்டணியின் உறுப்பினர் முகுந்தன் வழிமொழிந்திருந்தார்.

பாதீட்டுக்கு எதிராக தமிழர் விடுதலை கூட்டணி, பொதுஜன பெரமுன, ஐக்கியதேசிய கட்சி, சுதந்திரக்கட்சி தமிழ் தேசியமக்கள் முன்னணி, சுயேச்சை குழு ஆகியவற்றை சேர்ந்த 17 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

பாதீட்டுக்கு ஆதரவாக தமிழ் கூட்டமைப்பை சேர்ந்த 8 உறுப்பினர்களும் ஐக்கியதேசிய கட்சியின் ஒரு உறுப்பினரும் வாக்களித்திருந்தனர். இதனால் 9 மேலதிக வாக்குகளால் பட்ஜட் இரண்டாவது முறையாகவும் தோல்வியடைந்தது.

புதிய தவிசாளரை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு விரைவில், சபையில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# கட்டாக்காலிகளை பிடிப்பதற்கு புதுக்குடியிருப்பு பிரதேச சபை நடவடிக்கை

**புதுக்குடியிருப்பு விஷேட நிருபர்**

புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் கட்டாக்காலி கால்நடைகளை பிடிக்கும் நடவடிக்கையில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை ஈடுபட்டுள்ளது.

இதற்கமைய,நேற்று இரவு (07) வீதிகளில் திரிந்த 75 கட்டாக்காலிகள் பிடிகப்பட்டு பிரதேச சபை வளாகத்தில் கட்டி வைக்கப்பட்டுள்ளன.இந்த கட்டாக்காலிகளால் வீதிகளில் விபத்துக்கள் இடம்பெறுவதுடன் பயிர்நிலங்களையும் இவை சேதப்படுத்துவ தாக பிரசேவாசிகள் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்தே, வீதிகளில் உள்ள கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிக்கும் நடவடிக்கைகளை புதுக்குடியிருப்பு பிரதேச சபை ஆரம்பித்துள்ளது.

இவ்வாறு பிடிக்கப்பட்ட மாடுகளுக்கு கால்நடைகளின் உரிமையாளர்களிடம் இருந்து தண்டம்அறவிடப்படவுள்ளது.

மாடு ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாவும், கன்று ஒன்றுக்கு ஆயிரம் ரூபாவும் மற்றும் ஒருநாள் பராமரிப்புக்கு இருநூறு ரூபாவும் என அறவிடப்படவுள்ளது.

# ஒன்றிணைந்த தொழிற்சங்க போராட்டத்திற்கு வடமாகாணம் ஆதரவு

**புதுக்குடியிருப்பு விஷேட நிருபர்**

பல்வேறு நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து, நாடுமுழுவதுமுள்ள அரச தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து இன்று (08)

மேற்கொள்ளவுள்ள ஒருநாள் வேலைநிறுத்த போராட்டத்திற்கு, ஆதரவு வழங்கியுள்ளதாக

வடமாகாண அபிவிருத்தி உத்தியேகத்தர்கள் சங்கம் அறிவித்துள்ளது.அந்தச் சங்கத்தின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நியாயமான கோரிக்கைகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்படும் இந்த போராட்டத்திற்கு வடமாகாணத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகிய நாங்களும் ஒத்துழைப்பு வழங்குகிறோம்.

இந்தப்போராட்டம் வெற்றி பெறத்தேவையான சகல ஒத்துழைப்புக்களும் எங்களால் வழங்கப்படும்.இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சேதன பசளையை ஊக்கிவிக்கும் நோக்கில் விவசாயிகளுக்கு உள்ளீடுகள் விநியோகம்

**புதுக்குடியிருப்பு விஷேட நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டத்தில் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ், சேதனப்பசளை பயன்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட விவசாயிகளுக்கு உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் சேதனப் பசளையை ஊக்கிவிக்கும் நோக்கில், 500 விவசாயிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான உள்ளீட்டு பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன.இதன், முதற்கட்டமாக 135 விவசாயிகளுக்கு உள்ளீடுகள் வழங்கப்பட்டது.

சமூக வலுவூட்டல் நிபுணர் சஞ்சீவனின் தலைமையில், ஒட்டுசுட்டான் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் (06) நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் பூவாளி,சவள்,புல்லுவெட்டும் இயந்திரம் நீர்த்தாங்கிகள் என்பன இவர்களுக்கு வழங்கப்பட்டன

முல்லைத்தீவு மாவட்டத்தில் முதற்கட்டமாக ஒட்டுசுட்டான், புளியங்குளம், தண்டுவான் ஆகிய விவசாய போதனாசிரியர் பிரிவுகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கே இவை, வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் த.அகிலன், விவசாய போதனாசிரியர்கள் ,பாடவிதான உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# வவுனியாவில் ஐந்து கடைகளில் திருட்டு

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா நகரப்பகுதியில் அமைந்துள்ள விற்பனை நிலையங்களில் ஒரே இரவில் பல திருட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

வவுனியா மில்வீதி, சூசைப்பிள்ளையார்குளம் வீதி, கந்தசாமிகோவில் வீதி ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள விற்பனை நிலையங்களிலே,இந்த திருட்டுக்கள் நேற்று (07) இடம்பெற்றுள்ளன.

கடைகளின், கூரைத்தகடுகளை உடைத்துக் கொண்டு உள் நுழைந்த திருடர்கள் பணம்,பொருட்களை திருடிச் சென்றுள்ளனர்.

கடைகளை மூடிவிட்டு வீட்டுக்குச் சென்ற உரிமையாளர்கள் நேற்று கடைகளைத் திறக்க வந்த சமயத்தில் இதை அவதானித்து,பொலிஸாருக்கு அறிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக சீசீடீவி கமராக்களின் உதவியுடன் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இரத்த அழுத்த கண்காணிப்பு இயந்திரங்கள் அன்பளிப்பு

**புதுக்குடியிருப்பு விஷேட நிருபர்**

மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு 11 இரத்த அழுத்த கண்காணிப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவை,நேற்று முன்தினம் (06) மல்லாவி சுகாதார வைத்திய பணிமனையில் வைத்து இரண்டு கட்டங்களாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தெழில்நுட்ப கலை கலாசாரம் மற்றும் பெண்கள் மேம்பாட்டு அமையத்தின் செயலாளர் ஆசிரியர் லயன் சு.சுபநேசன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. பெண்கள் அமையத்தின் காப்பாளர்

மா.விஜயகுலசிங்கத்தின் நிதியுதவியில் இந்த இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.இதில், வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் ஓய்வுநிலை கணக்காளர் திரு நா.இராசநாயகம்,உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கனடாவில் வசித்துவரும் திரு.சிவகுமார், கணேசலிங்கம், நளாயினி குடும்பம், யோகசுந்தரம் சிவகுமார் குடும்பங்களும் இதற்கான நிதியுதவியை வழங்கின.

# நகரசபை உறுப்பினர் மீது தாக்குதல்; பணத்தையும் பறித்து தப்பியோட்டம்

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

சாவகச்சேரி நகரசபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் மீது, தாக்குதல் மேற்கொள்ள ப்பட்டதில்,காயமடைந்த அவர், சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தபால் நிலைய வீதியில் இச்சம்பவம் நேற்று (07) இடம்பெற்றது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது;

சாவகச்சேரி தபால் நிலைய வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்ற நகரசபை உறுப்பினர், தபால் நிலையத்திற்குள் மோட்டார் சைக்கிளை திருப்பிய வேளையில், அவருக்கு பின்னால் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியில், விபத்துக்குள்ளானது. இதனால், ஆத்திரமடைந்த குறித்த இளைஞன் நகரசபை உறுப்பினர் மீது நடு வீதியில் வைத்து தாக்குதல் நடத்தியதுடன், இரண்டாயிரம் ரூபா பணத்தையும் பறித்துச் சென்றுள்ளார். இதில், வெள்ளாம்போக்கட்டி கொடிகாமத்தில் வசித்து வரும் சாவகச்சேரி நகரசபை உறுப்பினரான 72வயதுடைய க.வேலாயுதபிள்ளை என்பவரே தாக்குதலுக்கு உள்ளானார்.தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# புலமைக் கதிர்

## தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – I

1 மணித்தியாலம்

**எல்லா வினாக்களுக்கும் 1 மணி நேரத்தினுள் விடை அளியுங்கள். இவ்வினாக்களுக்கான விடைகள் அடுத்த வாரம் புலமைக் கதிரில் வெளியிடப்படும். பகுதி – 2 மாதிரி வினாத்தாள் அடுத்த வாரம் உங்கள் கரங்களில்!**

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக



1. வெயில், மழை
2. பொருள், மழை
3. வெயில், குளிர்

2.



1. கனி, பறவை
2. கனி, உணவு
3. காய், இலை

3. கடிகாரமொன்றில் வேகமாகச் சுற்றும் முள்
1. நிமிட முள் 2. மணி முள் 3. செக்கன் முள்

4. நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை எனில் நாளை மறுநாள்
1. வியாழக்கிழமை 2. வெள்ளிக்கிழமை 3. புதன்கிழமை

5. ஒரு பாடசாலையில் எப்போதும் காணக்கூடியது
1. ஆசிரியர் 2. அதிபர் 3. தளபாடங்கள்

6. சூழல் நேய பூச்சிக் கட்டுப்பாட்டுத் திரவம் அல்லாதது
1. யூரியா 2. வேப்பிலைச் சாறு 3. புகையிலைச் சாறு

7. இவ் இலச்சினை தொடர்புடையது



1. உணவு
2. விளையாட்டு
3. தொழில்

8. ரவியின் வயது கமலாவின் வயதின் அரைவாசியாகும். கமலாவின் வயது குமாரின் வயதின் அரைவாசியாகும். மூவரினதும் வயதின் கூட்டுத்தொகை 42 எனில் குமாரின் வயது?
1. 06 வருடங்கள் 2. 12 வருடங்கள் 3. 24 வருடங்கள்


9. இவ்வுருவில் காணப்படும் முகங்களின் எண்ணிக்கை



1. 1
2. 2
3. 3

10. ஒரு தேயிலைப் பொதியின் நிறை 250g ஆகும். அதே நிறையுள்ள 5 தேயிலைப் பொதியின் நிறை?
1. 1kg 2. 1kg 250g 3. 1kg 500g

11.



பின்வரும் உருவில் நிழற்றப்படாத பகுதியைத் தசம எண்ணாகக் காட்டுவது
1. 0.4
2. 0.3
3. 0.6

12. உடல் வளர்ச்சிக்கு அவசியமான போசணைக் கூறு
1. கொழுப்பு 2. விற்றமின்கள் 3. புரதம்

13. தேசிய கீதம் பாடப்படுவது
1. தேசியக் கொடி ஏற்றும் முன்பு
2. தேசியக் கொடி ஏற்றும் போது
3. தேசியக் கொடி ஏற்றிய பின்பு

14. மூன்று தீக்குச்சிகளைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய மிகப்பெரிய உரோமன் எண்?
1. IV 2. XI 3. IX

15. 10000 – 1 இன் பெறுமதி
1. 9990 2. 9999 3. 9099

16. மகாவலி கங்கை கடலுடன் கலக்கும் இடம் யாது?
1. திருகோணமலை 2. முகத்துவாரம் 3. காலி

17. தேசப்படத்தில் காடுகளை குறிக்கும் நிறம் யாது?
1. சிவப்பு 2. கபிலம் 3. பச்சை

15. 10000 – 1 இன் பெறுமதி
1. 9990 2. 9999 3. 9099

16. மகாவலி கங்கை கடலுடன் கலக்கும் இடம் யாது?
1. திருகோணமலை 2. முகத்துவாரம் 3. காலி


17. தேசப்படத்தில் காடுகளை குறிக்கும் நிறம் யாது?
1. சிவப்பு 2. கபிலம் 3. பச்சை

18.



இம்முகம் குறிப்பது
1. கவலை 2. கோபம் 3. மகிழ்ச்சி

19.




வெற்றிடத்திற்கு வர வேண்டிய எண்
1. 10 2. 9 3. 12


20. பின்வருவனவற்றுள் இயற்கை அனர்த்தமல்லாதது
1. வெள்ளப்பெருக்கு 2. சுனாமி 3. டெங்கு

21. நீரைச் சுத்திகரிக்கப் பயன்படும் இரசாயனப் பதார்த்தம்
1. குளோரின் 2. அமோனியா 3. யூரியா

22. பின்வருவனவற்றுள் பெயராகவும் வினையாகவும் வரும் சொல்
1. யோசி 2. நில் 3. பார்

23. பத்து ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதி
1. சகாப்தம் 2. தசாப்தம் 3. நூற்றாண்டு

24.



இதிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை
1. 4 2. 5 3. 6

25. லீப் வருடமொன்றில் முதல் 3 மாதங்களிலுள்ள நாட்களின் கூட்டுத் தொகை
1. 89 2. 90 3. 91


26. ஒரு கயிற்று துண்டின் நீளம் 2m 8cm இதனை 4 சமபங்காக வெட்டினால் ஒரு துண்டின் நீளம் என்ன?
1. 500cm 2. 52cm 3. 5cm

27. முதல் 6 ஒற்றை எண்களின் கூட்டுத்தொகை யாது?
1.36 2. 39 3. 33

28. மீனவனுக்கு வலை போன்று உழவனுக்கு…
1. வயல் 2. கலப்பை 3. பயிர்

29. ஓர் எண்ணும் அதன் 5 மடங்கும் 30 எனில் அவ்வெண்
1. 5 2. 6 3. 3

30.



இவ்வுருவிலுள்ள சதுரங்களின் எண்ணிக்கை
1. 6
2. 5
3. 4

31. இலங்கைக்கே உரித்தான முலையூட்டி விலங்கு
1. நாய் 2. அணில் 3. கருங்குரங்கு

32. அவுக்கன புத்தர் சிலை அமைந்துள்ள இடம்
1. பொலன்னறுவை 2. அனுராதபுரம் 3. கண்டி

33. ஒரு மெழுகுவர்த்தி எரிய 30 நிமிடங்கள் ஆகும். அதே போல் இரண்டு மொழுகுவர்த்திகள் பி.ப. 7 மணிக்கு கொளுத்தப்பட்டால் அவை எத்தனை மணிவரை ஒளிரும்?
1. பி.ப. 7.30 2. பி.ப. 8.00 3. பி.ப. 8.30

34. பாரமான பெரிய கல்லொன்றை நகர்த்திச் செல்ல உதவும் உபகரணம்
1. மண்வெட்டி 2. கோடரி 3. அலவாங்கு


(14ஆம் பக்கம் பார்க்க)



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

(13 ஆம் பக்கத் தொடர்)

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – I

35. எண்ணாயிரத்து எண்பத்தொன்று என்பதன் எண்குறி
   1. 8881   2. 8081   3. 8001

36. ஒரு மாணவன் ரூபாய் 25.00 மதிப்புள்ள 3 பேனாக்களும் ரூபாய் 10.00 மதிப்புள்ள ஒரு அழிறப்பரும் வாங்கி கடைக்காரருக்கு ரூபாய் 100.00 கொடுத்தால் அவன் பெறும் மிகுதிப்பணம் எவ்வளவு?
   1. ரூ.15.00   2. ரூ.10.00   3. 5.00

37. 5050, 5052, 5056, 5062, ………….. அடுத்து வரும் எண்
   1. 5070   20. 5068   3. 5066

38. சூழல் வெப்பத்தைக் குறைக்க எடுக்கும் நடவடிக்கை அல்லாதது
   1. மரங்களை வளர்த்தல்
   2. காடுகளை அழிக்காதிருத்தல்
   3. காடுகளை அழித்தல்

39. மாதம், நிலவு இரண்டையும் குறிக்கும் சொல்
   1. திங்கள்   2. மதி   3. நிலா

40. ரூ.60.00 மதிப்புள்ள 2 புத்தகங்கள் வாங்கும் பணத்திற்கு ரூபாய் 20.00 மதிப்புள்ள எத்தனை பென்சில்கள் வாங்கலாம்.
   1. 6   2. 4   3. 2

# வேலையை இலகுவாக்க நாம் பயன்படுத்தும் உபகரணங்கள்




பாக்குவெட்டி



இடுக்கி



தகரப்பேணிவெட்டி



குறடு



பொடிவெட்டி



பிணைக்கருவி



கப்பி



போத்தல் திறப்பான்



வில்பரோ



துளைகருவி



புரிச்சாவி



கத்தரிக்கோல்

## எதிர்ப்பொருட் சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ★ ஆக்கினை | - | கருணை | ★ இன்சொல் | - | வன்சொல் |
| ★ ஆக்கம் | - | கேடு | ★ இகம் | - | பரம் |
| ★ ஆடவர் | - | பெண்டிர் | ★ இசை | - | வசை |
| ★ ஆண்டவன் | - | அடியவர் | ★ இம்மை | - | மறுமை |
| ★ ஆத்திகன் | - | நாத்திகன் | ★ இயற்கை | - | செயற்கை |
| ★ ஆசாரம் | - | அநாசாரம் | ★ இல்லறம் | - | துறவறம் |
| ★ ஆதாயம் | - | நட்டம் | ★ இலாபம் | - | நட்டம் |
| ★ ஆதரவு | - | அநாதரவு | ★ இளமை | - | முதுமை |
| ★ ஆவேசம் | - | சாந்தம் | ★ இளையோர் | - | முதியோர் |
| ★ ஆலம் | - | அமிர்தம் | ★ இறத்தல் | - | பிறத்தல் |
| ★ ஆண்டான் | - | அடிமை | ★ இன்பம் | - | துன்பம் |
| ★ ஆரம்பம் | - | முடிவு | ★ இருள் | - | ஒளி |
| ★ ஆரோகணம் | - | அவரோகணம் | ★ இறக்கம் | - | ஏற்றம் |
| ★ ஆனந்தம் | - | துக்கம் | ★ இல்லை | - | உண்டு |
| ★ ஆசி | - | சாபம் | ★ இசைதல் | - | மறுத்தல் |
| ★ ஆதாரம் | - | நிராதாரம் | ★ இயக்கம் | - | நிலைபேறு |
| ★ ஆர்ப்பாட்டம் | - | அமைதி | ★ இயல்பு | - | விகாரம் |
| ★ இரகசியம் | - | பரகசியம் | ★ இயற்சொல் | - | திரிசொல் |
| ★ இணக்கம் | - | பிணக்கம் | ★ இயற்பெயர் | - | புனைபெயர் |
| ★ இணை | - | தனி | ★ இரண்டகம் | - | நேர்மை |
| ★ இகழ் | - | புகழ் | ★ இரவல் | - | சொந்தம் |
| ★ இன்னார் | - | இனியார் | ★ இரவலர் | - | புரவலர் |

## எதிர்ப்பாற் சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ★ கணவன் | - | மனைவி | ★ தலைவன் | - | தலைவி |
| ★ கள்ளன் | - | கள்ளி | ★ தனவான் | - | தனவதி |
| ★ காவற்காரன் | - | காவல்காரி | ★ தர்மவான் | - | தர்மவதி |
| ★ கிழவன் | - | கிழவி | ★ தனயன் | - | தனயை |
| ★ குமரன் | - | குமரி | ★ தாத்தா | - | பாட்டி |
| ★ குயவன் | - | குயத்தி | ★ திருடன் | - | திருடி |
| ★ குரு | - | குருபத்தினி | ★ திருவாளன் | - | திருவாட்டி |
| ★ குறவன் | - | குறத்தி | ★ தேவன் | - | தேவி |
| ★ கூலிக்காரன் | - | கூலிக்காரி | ★ தோழன் | - | தோழி |
| ★ சங்கரன் | - | சங்கரி | ★ நடிகன் | - | நடிகை |
| ★ சகோதரன் | - | சகோதரி | ★ நம்பி | - | நங்கை |
| ★ சிற்றப்பன் | - | சின்னம்மை | ★ நல்லவன் | - | நல்லவள் |
| ★ சிறுவன் | - | சிறுமி | ★ நாட்டியக்காரன் | - | நாட்டியக்காரி |
| ★ சீமான் | - | சீமாட்டி | ★ நாயகன் | - | நாயகி |
| ★ சீலவான் | - | சீலவதி | ★ நிபுணன் | - | நிபுணை |
| ★ சுந்தரன் | - | சுந்தரி | ★ பணக்காரன் | - | பணக்காரி |
| ★ செல்வன் | - | செல்வி | ★ பாட்டன் | - | பாட்டி |
| ★ சேவகன் | - | சேவகி | ★ பாடகன் | - | பாடகி |
| ★ ஞானவான் | - | ஞானவதி | ★ பாக்கியவான் | - | பாக்கியவதி |
| ★ தந்தை | - | தாய் | ★ பாங்கன் | - | பாங்கி |
| ★ தம்பி | - | தங்கை | ★ பாணன் | - | பாடினி |

## வினாத்தாள் ii இற்கான விடைகள் (01.12.2021)

(01) (i) ஈசன் நாமத்தை
(ii) அனுதினம்
(iii) புகழ
(iv) உன்னுயிரை
(v) நீ
(vi) ★ தருமம் காக்க வேண்டும்.
★ ஏத்திப் புகழ வேண்டும்
★ மதித்து வாழ வேண்டும்

(02) அ. (i) அழிக்கும்
(ii) வேலை
(iii) கரை

ஆ. (i) சகபாடி
(ii) விகடகவி
(iii) வள்ளல்

(03) (i) தயவு செய்து வெளியே செல்லுங்கள்
(ii) தயவு செய்து அமைதியாக இருங்கள்

(04) I am hungry.
(05) (i) Ruler (ii) Bottle
(06) இஸ்ஸரஹா என்ன
(07) எங்கள் வீட்டில் கதிரை உள்ளது.
(08) (i) அகம்
(ii) மாதந்தோறும்
(iii) இறுதிநாள்

(09) (i) எதையும் ஆராய்ந்தே செய்ய வேண்டும்.
(ii) கொடுத்தவர் தாழ்வதில்லை
(10) (வினா இல்லை)
(11) கல்மேல்/கன்மேல் எழுத்துப்போல
(12) இங்கிலாந்து

(13) உழைக்கின்றேன்
(14)அமர்ந்துகொண்டனர்
(15) வசிக்கின்றது
(16) (பொருத்தமான வாக்கியங்கள்)

(17) 8093
(18) IX ,VII, VI, IV
(19) (i) 754 (ii) 457
(20) (i) 8 (ii) 8/12
(21) 3000+500+20+4
(22) 24 மாணவிகள்
(23) (i) 3 மணித்தியாலம் 50 நிமிடம்
(ii) பி.ப 2.20
(24) ரூபாய். 110.00
(25) ஏதாவது இரண்டு கட்டங்களுக்கு நிறம் தீட்டுக.
(26) 22 வருடம் 2 மாதம்

(27) 5l 250ml
(28) 2/6
(29) 21, 28, 42
(30) (i) 2
(ii) 3

| | | |
|---|---|---|
| (31) 2 | (41) 2 | (51) 4 |
| (32) 1 | (42) 3 | (52) 1 |
| (33) 3 | (43) 1 | (53) 2 |
| (34) 2 | (44) 4 | (54) 1 |
| (35) 2 | (45) 2 | (55) 1 |
| (36) 4 | (46) 4 | (56) 4 |
| (37) 4 | (47) 4 | (57) 3 |
| (38) 3 | (48) 1 | (58) 1 |
| (39) 2 | (49) 3 | (59) 3 |
| (40) 2 | (50) 1 | (60) 1 |

# கிழக்கின் குரல்



# கல்முனை மாநகர சபை வரவு செலவு திட்டத்துக்கு ஆதரவு வழங்க கூடாது

## தமிழரசு கட்சி கல்முனை கிளையில் தீர்மானம்

(பெரியநீலாவணை விசேட நிருபர்)

கல்முனை மாநகர சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பு இன்று 8ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இந்த வரவு செலவுத் திட்டத்திற்கு இலங்கை தமிழரசு கட்சி உறுப்பினர்கள் ஆதரவு வழங்கக் கூடாது என கட்சியின் கல்முனை கிளை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

இந்த தீர்மானத்தை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு திங்கட்கிழமை (06) கல்முனையில் நடைபெற்றது.

கல்முனைத் தொகுதி கிளை செயலாளர் சிவஞானம் ஜெயக்குமார், இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியின் துணை செயலாளர் அ.நிதர்ஜன் ஆகியோர் இங்கு கருத்துக்களை வெளியிட்டனர், தொடர்ந்து இவர்கள் கருத்து தெரிவிக்கும் போது,

கல்முனை மாநகர சபை வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பு இன்று (08) நடைபெறவுள்ளது. கடந்த 30 வருடங்களுக்கு மேலாக கல்முனைத் தமிழர்களின் பிரச்சினையாக புரையோடிப்போயுள்ள கல்முலை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பில் பலமுறை முஸ்லிம் காங்கிரஸ் தலைமை, எல்லை நிரணய பிரச்சினைகள் தொடர்பில் இன நல்லிணக்க ரீதியாக செயற்படாத சூழ்நிலையில், தொடர்ச்சியாக கல்முனை மாநகர சபை வரவு செலவுத் திட்டத்திற்கும் முஸ்லிம் காங்கிரஸின் ஆட்சிக்கும் ஆதரவு வழங்கக்கூடாது என தமிழ் அரசுக் கட்சியின் கல்முனை தொகுதிக் கிளை உறுப்பினர்கள் தீர்மானம் எடுத்துள்ளனர்.




மேலும் தொடர்ச்சியாக கிழக்கு பாகாணத்தில் முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் சேர்ந்து எமக்கெதிராக உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைத்து வருகின்றது. குறிப்பாக வாழைச்சேனை கோறளைப் பற்று பிரதேச சபை இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் தரமுயர்விற்கு முட்டுக்கட்டையாக இருப்பதுடன், கல்முனை மாநகர சபையால் செய்யப்படும் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் கல்முனை தமிழ் கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன.

அந்த அடிப்படையில் அனைத்து ஆலயங்கள் மற்றும் பொது அமைப்புக்களின் வேண்டுகோளுக்கிணங்க எமது கட்சி உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்கவும் 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திற்கு தமிழ் அரசுக் கட்சியின் மாநகர சபை உறும்பினர்கள் ஆதரவு வழங்கக் கூடாதெனும் தீர்மானத்தை தொகுதிக் கிளையின் தீர்மானமாக அறியத்தருகின்றோம்.

எமது இந்த தீர்மானத்தை மீறி எவரேனும் ஒரு உறுப்பினர் ஆதரவாக வாக்களித்தால் அது வாக்களித்த மக்களுக்கு அவர்கள் செய்யும் துரோகமாகும்.

இதற்கு மக்கள் சரியான தீர்மானத்தை எடுப்பார்கள் என்று நினைக்கின்றோம். வாக்களித்த மக்கள் சார்பாக எடுக்கப்பட்டுள்ள இந்த தீர்மானத்தை கட்சியின் பொதுச் செயலாளருக்கும் சம்மந்தப்பட்ட மாநகர சபை உறுப்பிர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளோம் என்றும் தெரிவித்தனர்.

# இறக்காமம் பிரதேச செயலக பிரிவில் மரம் நடுகை நிகழ்வு

(இறக்காமம் தினகரன் நிருபர்)

ஜனாதிபதியின் சுரகிமு கங்கா வேலைத்திட்டத்தின் கீழ் ஆறுகளைப் பாதுகாத்தல் தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கல்லோயா ஆற்றின் அரிப்பைத் தடுக்கும் நோக்குடன் இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள ஆஸ்பத்திரி சேனையில் மரம் நடுகை நிகழ்வு புதன்கிழமை (01) இடம் பெற்றது.



இறக்காமம் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் நஸீல் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மாவட்ட செயலாளர் டீ.எம்.எல்.பண்டார நாயக்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

கல்லோயா ஆற்றை மையப்படுத்தி ஆற்றின் மருங்குகள் நீரினால் அடித்துச் செல்லப்படுவதை தடுக்கும் நோக்கில் 1500 மூங்கில் மரங்கள் மற்றும் 200 பழ மரங்களை நாட்டி வைக்கும் ஆரம்ப கட்ட பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது ஆஸ்பத்திரிசேனை விவசாய அமைப்பினால் அதிதிகள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் இறக்காமம் பிரதேச சபைத் தவிசாளர் எம்.எஸ்.ஜெமீல் காரியப்பர், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கிழக்கு மாகாண பணிப்பாளர் எம்.சிவகுமார், உதவித் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் கே.எல்.எம்.ஹம்ஸார், பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் எம்.எஸ்.எம்.நவாஸ், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அம்பாறை பிரதேச சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.இஸ்ஹாக் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

படம்:இறக்காமம் திகாரன் நிருபர்

# மாணவர்கள் இழந்த கல்வியை ஆசிரியர்கள் மீள வழங்க வேண்டும்

-கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர்

(வாச்சிக்குடா விஷேட நிருபர்)

கொவிட் தொற்று காரணமாக மாணவர்கள் இழந்த கல்வியை மீளப் பெறுவதற்கு அதிபர்கள்,ஆசிரியர்கள்,கவனம் செலுத்த வேண்டும் என கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி.நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவித்தார்.

திருக்கோவில் அக்கறைப்பற்று கண்ணகி வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட கல்வி திறன் வகுப்பறை திறப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் விஷேட அதிதியாக திருக்கோவில் வலயக்கல்வி பணிப்பாளர் யோ.ஜெயச்சந்திரன், சிறப்பு அதிதிகளாக இலத்திரனியல் கல்வி தொண்டு நிறவனத்தின் தலைவர் செ.முரளிதரன், செயலாளர் கலாநிதி கு.கணேசன், திருக்கோவில் கல்வி வலயத்தின் இணைப்பாளர் கலாநிதி.வாசுதன் செல்லத்துரை,கிழக்கு மாகாண இணைப்பாளர் சா.சுதாகரனும், ஆலையடிவேம்பு கோட்டக்கல்வி பணிப்பாளர் திருமதி எம்.மயூரன், அதிபர்கள்,ஆசிரியர்கள்,மாணவர் பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



பிரதம அதிதி உள்ளிட்டவர்கள் இணைந்து கல்வி திறன் வகுப்பறையைத் திறந்து வைத்தனர். அதனைத்தொடர்ந்து ஒன்லைன் கற்கை நெறி மூலமான பாடத்திட்டத்தினையும் ஆரம்பித்து வைத்தனர்.

மாகாண கல்விப் பணிப்பாளர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

கல்வியை தொடர்ச்சியாக கற்பதன் மூலம் எமது சமூகத்தின் இழப்புக்கள் பலவற்றை நிவர்த்தி செய்ய முடியும். நாட்டில் இரண்டு வருடங்களாக மாணவர்களின் கல்வி பாதிப்படைந்துள்ளது. இவ்வாறு இழந்த கல்வியை நிவர்த்தி செய்வதற்கு எமது சமூகம் சார்ந்தவர்கள்,நிறுவனங்கள்,புத்திஜீவிகள் கல்வித்தேவைக்காக உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆசிரியர்கள் சரியான பாதையில் மாணவர்களுக்கு கற்றுக்கொடுத்து கல்வியில் சிறந்த பெறுபேறுகளை ஈட்டிக்கொள்ள முடியும். க.பொ.தா உயர்தரப் பரீட்சை மற்றும் புலமைப் பரீட்சைகள் போன்றவற்றில் மாணவர்கள் சித்தியடைவதற்கு ஆசிரியர்கள் கவனம் செலுத்தி கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு இருக்கின்றது எனத் தெரிவித்தார்.

# வீதியை மூடியமைக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம்





(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு கிரான்குளம் பிரதேசத்தில் 15 வருடமாக பயன்படுத்தி வந்த வீதியொன்றை பலவந்தமாக இரண்டு மாதமாக மூடிவைத்திருப்பதற்கு கண்டம் தெரிவித்தும், அந்த வீதியை திறந்து பொது மக்களின் போக்குவரத்துக்கு வழி செய்யுமாறும் கேட்டு, கிரான்குள பிரதான வீதியிலுள்ள ஸ்ரீ மஹா விஷ்ணு ஆலயத்துக்கு முன்பாக ஞாயிற்றுக்கிழமை (05) பொது மக்களால் கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று இடம் பெற்றது.

கிரான்குளம் அமரபுரம் கிராமத்தைச் சேர்ந்த பொது மக்கள் கடந்த 15 வருடங்களாக பாவித்து வந்த கிரான் குளம் புதுக்குடியிருப்பு வீதியை காணி சீர்திருந்த ஆணைக்குழுவின் அதிகாரி விமல்ராஜ் என்பவர் அடைத்து வைத்துள்ளதாகவும், இதனால் பொது மக்கள் பாடசாலை மாணவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவித்து இந்த கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதன் போது மண்முனைப் பற்று தவிசாளர் டி.தயானந்தன் உட்பட மண்முனை பிரதேச சபை உறுப்பினர்கள் சிலரும் பொது மக்களும் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

# ஆளுமைக்கான விருதுகள் வழங்கும் நிகழ்வு

(ஒலுவில் கிழக்கு தினகரன், பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்கள்)

அக்கரைப்பற்று ஆர்.கே.எஸ். வலையமைப்பு நிறுவனம் நடாத்திய ஆளுமைக்கான விருதுகள் வழங்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை லொயிட்ஸ் மண்டபத்தில் ஊடகவியலாளர் எம்.ஐ.றியாஸ் தலைமையில் நடைபெற்றது.

இதன் 2021ஆம் ஆண்டுக்கான சிறந்த ஆளுமைக்கான விருதினை அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவர் எஸ்.எம். சபீஸ், 2021ஆம் ஆண்டுக்கான சிறந்த ஊடகவியலாளர் விருதினை சிலோன் மீடியா போரத்தின் பொருளாளர் நூருல் ஹுதா உமர், பூர்விக சமூகத்தின் நம்பிக்கை விருதினை ஆலையடிவேம்பு பிரதேச சபை உதவி தவிசாளர் விக்டர் ஜெகன், சிறந்த கல்விச் சேவைக்கான விருதினை ஏ.எம்.எம். தாஜுதீன், சிறந்த சமூகவியலாளர் விருதினை எம்.எஸ். மர்சூக் , சமூக சேவைக்கான விருதினை ஏ.பி. பதுறுதீன், வளர்ந்துவரும் அரசியல் தலைமைத்துவ விருதினை எம்.எஸ்.அமீன், இளம் தலைமைத்துவ சமூக விருதினை எம்.ஐ. அரசாத், சிறந்த இளம் தொழிலதிபர் விருதினை அனீஸ் , இளம் தொழிலதிபர் விருதினை வை.எம். ஹக்கீம், மக்கள் அபிமான விருதினை ஆதம் அமீர், சிறந்த ஆயுர்வேத வைத்திய சாலை நிருவாகத்திற்கான விருதினை டாக்டர் எம்.ஏ. நபில், சிறந்த ஆயுர்வேத வைத்தியர் விருதினை டாக்டர் ஏ.சி. டில்ஷாத், மருந்தாளருக்கான விருதினை ஐ.எல். அப்துல் ரஹ்மான், நல்லிணக்கத்துக்கான விருதினை எஸ்.எம். லாபிர், சமூக தலைவருக்கான விருதினை சட்டத்தரணி எம்.எஸ். ஜுனைதீன், பிராந்திய சுகாதார சேவைகளுக்கான விருதினை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். அகிலன், சிறந்த எழுத்தாளருக்கான விருதினை கலாபூஷணம் என்.எல். நூர்தீன், விளையாட்டுத்துறை விருதினை ஏ.எல். நாஸர், பெண்கள் மேம்பாட்டுக்கான விருதினை பிரதேச சபை உறுப்பினர் திருமதி ஜெமீலா ஹமீட், ஆளுமைப் பெண்ணுக்கான விருதினை உதவிப்பிரதேச செயலாளர் சட்டத்தரணி எப். நஹீஜா முஸாபிர், சமூக சேவைக்கான விருதினை ஏ.எல்.எம். இஸ்மாயில் ஆகியோர்கள் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# பெரிய நீலாவணை ஸ்ரீ வேம்படி விநாயகர் ஆலயத்திற்கு குடிநீர் வசதி

(கல்முனை விசேட நிருபர்)

கல்முனை, பெரிய நீலாவணை ஸ்ரீ வேம்படி விநாயகர் ஆலயத்திற்கு மிக நீண்ட காலத் தேவையாக இருந்து வந்த பொதுக்கிணறு ஒன்று கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் ஏற்பாட்டில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.



இந்த ஆலயத்தில் அன்றாடம் சமய ஆராதனைகளுக்கு வருகின்ற மக்களுக்கு குடிநீர் வசதி இல்லாதிருந்தமை பெரும் குறைபாடாக காணப்பட்ட நிலையில், இப்பிரச்சினையை ஆலய நிர்வாகிகள் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஆர்.செலஸ்டினா ஊடாக மாநகர பிரதி முதல்வரும் மேற்படி அமைப்பின் தலைவருமான ரஹ்மத் மன்சூரின் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தனர்.

இதையடுத்து, ரஹ்மத் மன்சூர் மேற்கொண்ட அவசர நடவடிக்கையின் பயனாக குறித்த ஆலய வளாகத்தில் பொதுக்கிணறு ஒன்று துரிதமாக நிர்மாணிக்கப்பட்டு, ஞாயிற்றுக்கிழமை (05) அவரது பங்கேற்புடன் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் மாநகர சபை உறுப்பினர்களான ஆர்.செலஸ்டினா, கே.புவனேஸ்வரி மற்றும் ஆலய நிர்வாகிகள் உள்ளிட்ட பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# ஆலய வளாகத்தில் சடலம் மீட்பு

மணல்சேனை நிருபர்

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கச்சேனை அம்பிளாந்துறை பிரதேசத்தில் ஆலய வளாகத்திலிருந்து குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக திங்கட்கிழமை (06) மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான முருகப்பன் லோகீதன் (வயது 47) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். வீட்டின் அருகில் உள்ள ஆலயத்தில் இரவு நேரங்களில் தங்குவதாகவும், வழமை போன்று சம்பவ தினத்தன்று ஆலயத்தில் பணிபுரியும் நபர் ஒருவர் ஆலயத்திற்குள் சென்ற போது குறித்த நபர் மரணமடைந்த நிலையில் காணப்பட்டதனையடுத்து, சம்பவம் பற்றி உறவினர்களுக்கு தெரியப்படுத்தியதாக ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.



மட்டக்களப்பு மாவட்டம் வவுணதீவு களப்பு பகுதியில் பெண்கள் பாரம்பரிய முறையில் அத்தாங்கு கொண்டு மீன்பிடியில் ஈடுபடுவதை படத்தில் காணலாம். (படம்;பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

# கனியமணல் அகழ்வில் இருந்து பாதுகாக்க உதவுங்கள் குச்சவெளி பிரதேச பொது மக்கள் வேண்டுகோள்

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை புடவைக்கட்டு கிராமத்தை கனியமணல் அகழ்வில் இருந்து பாதுகாக்க உதவுங்கள் என குச்சவெளி பிரதேச பொது மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

கடந்த 2012 ஆம் ஆண்டு கடற்கரையோரங்களில் இல்மணைட் படிவுகள் இருப்பதாக கூறி அவற்றை அகழ்வு செய்ய இங்குள்ள பொது அமைப்புகளிடம் அனுமதி கேட்டு, அவர்களுடன் ஒரு உடன்படிக்கையையும் மேற்கொண்டு கனியமணல் அகழ்வை மேற்கொண்டனர்.

ஆனால் அவர்கள் செய்து கொண்ட உடன்படிக்கைகளில் குறிப்பிட்ட ஒன்றையும் நிறைவேற்றவில்லை. அதன்பின் தனியார் காணிகளில் மண் அகழத் தொடங்கினர். அப்போது இங்கு 3 அடி வரை மணல் அகழ்வதாக கூறிக் கொண்டு 20 அடி வரை அகழ்ந்து உரிய முறைகளில் கூட மீள் நிரப்பவில்லை.

இதனால் தற்போது இவ்விடங்கள் வழமையான இடங்களை விட தாழ்நிலப் பகுதிகளாகவே காணப்படுகின்றன எனத் தெரிவிக்கின்றனர்.

# கிழக்கின் குரல்



மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில்

## மட்டக்களப்பு மாவட்ட காணி பயன்பாட்டு குழுக் கூட்டம்

(கல்லடி குறூப்நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட காணி திட்டமிடல் பயன்பாட்டுக் குழுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை (07) மாவட்ட செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

மாவட்ட காணி திட்டமிடல் பயன்பாட்டுக் குழுக்கூட்டமானது, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான கே.கருணாகரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றுள்ளது.

இதன் போது பிரதேச செயலக ரீதியாக முன்வைக்கப்பட்டிருந்த 120 விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுடன், பிரதேச செயலக ரீதியில் காணப்படுகின்ற அரச திணைக்களங்களுக்கான காணி ஆவணங்களை பெற்றுக்கொள்வது



தொடர்பாக பரிசீலனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேவேளை பிரதேச மட்ட காணி பயன்பாட்டு குழு கூட்டங்களில் எடுக்கப்பட்ட சிபாரிசுகளின் அடிப்படையில் மாவட்ட பயன்பாட்டு குழு முன்னிலையில் முன் வைக்கப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு சிபாரிசு வழங்கப்பட்டுள்ளது.

அதேபோன்று முதலீட்டாளர்களால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் குறுங்கால மற்றும் நீண்ட கால குத்தகைக்கு காணிகளை வழங்குவது தொடர்பாகவும், உள்ளூராட்சி மன்றங்களுக்கான சந்தை மற்றும் விளையாட்டு மைதானங்களுக்காக காணிகளை பாராதீனப்படுத்துதல் தொடர்பாகவும் அரசினால் முன்னெடுக்கப்பட்டு வரும், இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு காணி வழங்குதல் தொடர்பாகவும் இதன்போது பரிசீலனை செய்யப்பட்டுள்ளதுடன், பல திட்டங்களுக்கு சிபாரிசுகளும் வழங்கப்பட்டுள்ளது.

மேலதிக மாவட்ட செயலாளர் திருமதி. நவரூபரஞ்ஜனி முகுந்தனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக் கூட்டத்தில், காணிப் பயன்பாட்டு திட்டமிடல் திணைக்கள மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.எஸ்.கிறிசாந்தினி, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி, பிரதேச செயலாளர்கள், காணி உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் உத்தியோகத்தர்கள், ஏனைய திணைக்களங்களின் அரச அதிகாரிகள் உள்ளிட்ட முதலீட்டாளர்களும் இதன்போது கலந்து கொண்டனர்.

## கிழக்கு மாகாண பிரதம செயலாளராக கடமையேற்பு



(கிண்ணியா மத்திய, முள்ளிப்பொத்தானை குறூப், தோப்பூர் குறூப், கந்தளாய் தினகரன், ரொட்டவெவ குறூப் நிருபர்கள்)

கிழக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்ட டி.எம்.எல்.பண்டாரநாயக்க, தமது கடமைகளை செவ்வாய்க்கிழமை (7) திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் சமயத் தலைவர்களின் ஆசீர்வாதத்தின் பின்னர் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தார்.

இலங்கை நிர்வாக சேவையின் சிரேஸ்ட அதிகாரியான இவர், இதற்கு முன்னர் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள, திணைக்கள தலைவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## அரச வானொலி விருது பெற்றவர்களுக்கு கௌரவம்



இம்முறை நடைபெற்ற அரச வானொலி விருது விழாவில் விருதினைப் பெற்றுக் கொண்ட இலங்கை வானொலி பிராந்திய சேவையான பிறை எப்.எம்.வானொலி அறிவிப்பாளர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அம்பாறை மாவட்ட தமிழ்ப் பட்டறை இலக்கியப் பேரவை மூலம் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட தமிழ்ப் பட்டறை இலக்கியப் பேரவையின் தலைவர் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஹனீபா இஸ்மாயில் தலைமையில் ஒலுவில் கிறீன் விலா அரங்கில் ஞாயிற்றுக்கிழமை (05) மாலை இடம்பெற்ற இந்நிகழ்வின்போது, இலங்கை வானொலி பிறை எம்.எம். சேவை நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பசீர் அப்துல் கையூம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

பட்டயக் கணக்காளர் ஏ.எல். அமீன் கௌரவ அதிதியாய் கலந்து கொண்ட இந்நிகழ்வின்போது, தேசிய வானொலி விருது பெற்ற பிறை எப்.எம். சேவை நிலையத்தில் சேவையாற்றும் அறிவிப்பாளர்களான எம்.ஏ.றமீஸ் மற்றும் ஜே.வஹாப்தீன் ஆகியோர் பொன்னாடை போரத்தி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

## வீதியை புனரமைக்குமாறு பிரதேச மக்கள் கவனஈர்ப்பு



பாசிக்குடா நிருபர்

மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள புலி பாய்ந்த கல் பிரதான வீதியானது மண் ஏற்றும் கனரக வாகனங்களின் போக்குவரத்து காரணமாக வீதி சேதமடைந்து காணப்படுவதாக தெரிவித்து, பிரதேச மக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து குறித்த வீதியினை புனரமைத்து தருமாறு கோரி வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு எதிராக திங்கட்கிழமை (6) கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ் வீதியினூடாக மக்கள் தங்களது அன்றாட விடயங்களை மேற்கொண்டு வருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே அரசியல்வாதிகள் மற்றும் நிர்வாகிகள் அக்கறை செலுத்தி இவ் வீதி மற்றும் பாலத்தினை புனரமைத்து தருமாறு கேட்கின்றனர்.

இதே வேளை இவ் விடயம் தொடர்பாக தங்களது கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட மக்களின் கோரிக்கையினை கிரான் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாவு வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு தெரிவித்திருந்தார்.

## போரதீவுப்பற்று பிரதேச செயலகத்தில் மாற்றுத் திறனாளிகள் தின நிகழ்வு



பாண்டிருப்பு தினகரன் நிருபர்

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு போரதீவுப்பற்று பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் ஆர். ராகுலநாயகி தலைமையில் நடைபெற்றது.

இம்முறை சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் மற்றும் நிலைபேறான தன்மையுடன் கூடிய கொவிட்19 இற்கு பிந்தியதான மாற்றுத்திறனாளிகளின் பங்கேற்பும் தலைமைத்துவமும் எனும் தொனிப்பொருளில் கொண்டாடப்படுகின்றது.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் எஸ்.புவனேந்திரன், நிர்வாக உத்தியோகத்தர் ரீ.உமாபதி, சமூக சேவை உத்தியோகத்தர் சபேஷன், நிதி அனுசரணை வழங்கிய ஸ்லாமீக் ரீலீப்ட் நிறுவனத்தின் முகாமையாளர் கே.சசிகுமார், களுதாவளை சமூக பொருளாதார கல்வி அபிவிருத்திச் சபை சங்க தலைவர் கே.கிசோவன், மாற்றுத்திறனாளிகள் அமைப்பின தலைவர் சுதா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இங்கு சமூகத்தில் மாற்றுத்திறனாளிகள் சாதித்துவரும் சாதனைகள் பற்றியும், மாற்றுத்திறனாளிகளை மற்றவர்களும் மதித்து நடக்கும் பண்பு பற்றியும் பலராலும் எடுத்துக் கூறப்பட்டது.

## மூதூரில் டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பு

தோப்பூர் குறூப் நிருபர்

மூதூர் பிரதேச சுகாதார வைத்தியதிகாரி பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களில் நவம்பர் மாதம் மட்டும் 36 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக மூதூர் சுகாதார வைத்தியதிகாரி முகைதீன் பாவாஹில்மி தெரிவித்தார்.

மூதூர் பிரதேசத்தில் மழை பெய்து விட்டதை அடுத்து, டெங்கு நோயாளர்கள் அதிகளவில் இனங்காணப்படுகின்றனர். இதற்காக மூதூர் சுகாதார வைத்தியதிகாரி ஊழியர்கள் திடீர் சுற்றிவளைப்பினை மேற்கொண்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு வழங்கும் நிகழ்வுகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருவதாக சுகாதார வைத்தியதிகாரி தெரிவித்தார்.

"நமக்காக அரை மணி நேரம் "என்னும் தொணிப்பொருளில் பொதுமக்கள் நாளாந்தம் தங்களது வீட்டுச்சூழலை சுத்தமாக வைத்திருக்க முன்வர வேண்டுமென சுகாதார வைத்தியதிகாரி பொதுமக்களுக்கு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## உயிர்காக்கும் மேலங்கிகள் வழங்கும் நிகழ்வு

மட்டக்களப்பு விசேட நிருபர்



"உயிரைக் காப்போம் பாதுகாப்பாக இருப்போம்" எனும் கருத்தாக்கத் திட்டத்தின் கீழ் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கோடும் மற்றும் வெள்ள காலம் உள்ளிட்ட நேரங்களில் நீர்ப் பிரயாணம் செய்யும்போது ஏற்படவுள்ள அனர்த்தத்தைத் தடுக்கும் நோக்கோடு, உயிர் காக்கும் மேலங்கிகள் வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை (02) சந்திவெளியில் நடைபெற்றது.

சந்திவெளிப் பிரதேசத்தை அண்டியுள்ள மக்கள் தங்களது அன்றாட தேவைகளுக்காக மிதப்புப் படகின் மூலம் சுமார் 300 மீற்றர் தூரம் நீர் வளிப்பயணத்தை மேற்கொண்டு கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திகிலிவட்டை, வட்டவான் உள்ளிட்ட 32 கிராமங்களுக்கு செல்லும்போது ஏற்படும் உயிராபத்தைத் தடுப்பதற்காக வியாபார நிறுவனங்களின் சமூக கடமை திட்டத்தின் கீழ் எல்.ஜி. அபான்ஸ் நிறுவனத்தினால் 120 பாதுகாப்பு அங்கிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் அப்துல் சமட் முகமட் சியாத், கோப் இன்ரநசனல் இலங்கை நிறுவனத்தின் செயலாளர் லசித நாணயகார, அபான்ஸ் சந்தைப்படுத்தல் அதிகாரி புத்திக்க தர்மவர்த்தன ஆகியோர் கலந்து கொண்டு பிரதேச மக்களுக்கு வழங்கி வைத்தனர்.

## பாண்டிருப்பில் கடல் கொந்தளிப்பு; ஊருக்குள் கடல் நீர் உட்புகுர்வு

ஆலயங்கள், வீடுகளுக்கு பாதிப்பு

(கல்முனை விசேட நிருபர்)



கல்முனை மற்றும் பாண்டிருப்பு பிரதேசங்களில் ஏற்பட்ட கடற் கொந்தளிப்பு காரணமாக கடற்கரை வீதியையும் தாண்டி குடியிருப்பு பகுதிக்குள் கடல் நீர் புகுந்து, வெள்ளக்காடாக மாறியதையடுத்து மாநகர சபையின் கனரக இயந்திரங்கள் மூலம் கடல் நீரை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

செவ்வாய்க்கிழமை (07) அதிகாலை இப்பிரதேசத்தில் திடீரென கடற்கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் கல்முனை மாமாங்க விநாயகர் ஆலயம் மற்றும் பாண்டிருப்பு விஷ்ணு ஆலயம் உள்ளிட்ட பகுதிகளும் பல வீடு, வளவுகளும் வெள்ளத்தில் மூழ்கி, பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

இதனால் இப்பிரதேச மக்கள் அச்சமும் கலவரமும் அடைந்த நிலையில் அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர். இதையடுத்து கல்முனை மாநகர சபை உறுப்பினரான ஹென்றி மகேந்திரன், மாநகர முதல்வர் மற்றும் ஆணையாளர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கியதையடுத்து, மாநகர சபையின் கனரக இயந்திரங்கள் மூலம் அப்பகுதிகளில் தேங்கியுள்ள கடல் நீரை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அண்மைக்காலமாக கல்முனை மற்றும் பாண்டிருப்பு பிரதேசங்களில் கடலரிப்பு ஏற்பட்டு வருகின்றது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு கரையோரம் பேணல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் சுற்றாடல் அதிகார சபை உள்ளிட்ட அரச நிறுவனங்கள் அவசர நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமெனக் கோரி கல்முனை மாநகர சபையில் பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



நற்பிட்டிமுனை அல்அக்ஸா மத்திய கல்லூரியில் 60 வயதிற்கு மேற்பட்டோருக்கான மூன்றாம் கட்ட பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்படுவதையும், வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம். அஸ்மி பொதுச் சுகாதார பரிசோதகர் ஜுனைதீன் ஆகியோர் அவதானிப்பதையும் படத்தில் காணலாம். (படம்: நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

## அக்கரைப்பற்று பிரதேசத்தில் உணவகங்கள் சுற்றிவளைப்பு

(ஒலுவில் விசேட நிருபர்)

அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட பிரதேசங்களில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் எவ்.எம்.ஏ. காதர் தெரிவித்தார்.

கொவிட் 19 தொற்று அதிகரிப்பையடுத்து உணவகங்கள், உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களில் பாவனைக்கு உதவாத உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யப்படுவதாக பொது மக்களால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜீ.சுகுணனின் ஆலோசனைக்கமைய பொதுச் சுகாதார பரிசோதகர்களால் உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்கள், பேக்கரிகள் என்பன திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

பரிசோதனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பாவனைக்குதவாத உணவுப் பண்டங்கள், பொருட்கள், காலாவதியான பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டு அழித்தொழிக்கப்பட்டு வருவதாடு, உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். உணவு பாதுகாப்பு சட்ட திட்டங்களை மீறுபவர்களுக்கெதிராக நீதிமன்றினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதோடு, பாவனைக்குதவாத உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் நிலையங்கள் கண்டுபிக்கப்பட்டால் அதன் உரிமையாளருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்நிலையங்கள் மூடப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சிறந்த சந்தைப்படுத்தல் மற்றும் இலச்சினைக்காக அங்கீகரிக்கப்பட்ட HNB FINANCE




இலங்கையின், முன்னணி நிதி நிறுவனங்களில் ஒன்றான HNB FINANCE PLC, 2021 ஆசிய வங்கி மற்றும் நிதி விருதுகளில் (ABF மொத்த விற்பனை மற்றும் சில்லறை வங்கி விருதுகள் )தொடர்ச்சியாக இரண்டாவது, தடவையாகவும் 'Sri Lanka Outstanding Marketing and Branding Approach'விருதை'அண்மையில் வென்றது. ABF விருதுகளில் இந்த அங்கீகாரத்தைப்பெற்ற இலங்கையின் ஒரே வங்கி அல்லாத நிதி நிறுவனமாக HNB FINANCE PLC உள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆசிய வங்கி மற்றும் நிதி விருது வழங்கும் நிகழ்வில் இரண்டாவது தடவையாக ஆன்லைனில் (டிஜிட்டல் விருது வழங்கும் விழாவாக) நடைபெற்றது மற்றும் ஆசியாவின் பல முன்னணி வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் இதில் கலந்துகொண்டன.

கடந்த காலத்தில், HNB FINANCE ஆனது ஆன்லைன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பல்வேறு வெற்றிகரமான சந்தைப்படுத்தல் மற்றும் இலச்சினை மேம்பாட்டு திட்டங்களைச் சாதித்து வாடிக்கையாளர்களைச் சென்றடைய முடிந்தது.

இந்த ஒவ்வொரு மேம்பாட்டு நடவடிக்கைகளின் மூலமாகவும், நிறுவனத்தால் தெளிவான வணிக செயற்பாடுகளை புத்தாக்க மற்றும் அந்த திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள சிறப்பு மற்றும் தனித்துவமான டிஜிட்டல் சேவைத் திறன் ஆகியவற்றின் மூலம் அடைய முடிந்தது.

“ஆசிய பிராந்தியத்தில் முன்னணி நிதி நிறுவனமாக HNB FINANCE மீண்டும் ஆசிய வங்கிகள் மற்றும் நிதி விருதுகளில் அங்கீகாரம் பெற்றதன் மூலம் நிறுவனத்திற்கு மேலும் பெருமை சேர்த்துள்ளது. உலகெங்கிலும் உள்ள துரிதமான வளர்ச்சிக்கு ஏற்ப எங்கள் வாடிக்கையாளர்களும் விரிவான மற்றும் புத்தாக்கமான நிதிச் சேவைகளை அனுபவிப்பதை உறுதி செய்வதில் எங்கள் முதலீடுகளின் தரத்திற்கு இந்த சாதனை ஒரு சான்றாகும்.” என HNB FINANCE PLCஇன் சந்தைப்படுத்தல் பிரிவின் பிரதானி உதார குணசிங்க தெரிவித்தார்.

# சர்வதேச அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனத்துடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட DFCC வங்கி




இலங்கையின் முன்னணி வங்கியான DFCC, சமத்துவமான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சிக்கு அனுசரணை வழங்குவதன் மூலம், எந்த சூழ்நிலையிலிருந்தும் மீண்டெழும் திறன்கொண்ட நாட்டைத் தோற்றுவிப்பதற்கான தனது பயணத்தில், அமெரிக்க அரசாங்கத்தின் சர்வதேச அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனத்திடமிருந்து வங்கிக்கு கிடைக்கவுள்ள மிகப்பாரிய கடன் வசதிகளுள் ஒன்றான 150 மில்லியன் அமெரிக்க டொலர் தொகையை முழுமையாக பயன்படுத்த எண்ணியுள்ளது. உள்ளூர் நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் சார்ந்த தொழில்துறைகளுக்கு கடன் வழங்கும் நோக்கத்திற்காக இந்த கடன் வசதி உபயோகிக்கப்படவுள்ளது.

இதுவரை எந்தவொரு இலங்கைப் பங்காளர் நிறுவனத்திற்கும் சர்வதேச அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனத்தால் வழங்கப்படும் மிகப் பாரிய கடன் தொகை இதுவாகும். பாலின சமத்துவமின்மை மற்றும் பொருளாதார சமத்துவமின்மை போன்ற நெருக்கடிமிக்க பிரச்சினைகள், கொவிட்19 தொற்றுநோயால் மிகவும் மோசமடைந்துள்ள நிலையில், அவற்றைச் சமாளிக்கும் நோக்கத்துடன் உலகெங்கிலும் உள்ள பின்தங்கிய சமூகங்களைச் சென்றடையும் நோக்கத்துடன் இக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

கடன் வசதி மற்றும் அதன் மூலமான நன்மைகள் குறித்து கருத்து தெரிவித்த DFCC வங்கியின் தலைமை நிர்வாக அதிகாரி, லக்ஷ்மன் சில்வா, அமெரிக்காவிடமிருந்து இக்கடன் வசதியைப் பெறுவதில் நாங்கள் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். இது DFCC வங்கியின் ஒட்டுமொத்த கடன் வழங்கல் இலக்குகளை மேம்படுத்தவும், தொடரும் தொற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவும் உதவும்.

கடந்த 66 வருடங்களில், DFCC வங்கி அதன் பாரம்பரியத்திற்கு ஏற்ப, இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அபிவிருத்தியை கற்பனை செய்யமுடியாத அளவிற்கு முன்னெடுத்துச்சென்ற பல முன்னோடி செயற்திட்டங்களுக்கு கடன் வழங்கியுள்ளது என்று குறிப்பிட்டார்.

# இலங்கையில் ஒரே பிரசவத்தில் பிறந்த 6 குழந்தைகளுக்கு சிறந்த பராமரிப்பை வழங்க கைகோர்க்கும் பேபி செரமி




2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி, இலங்கையில் முதன்முறையாக ஒரே பிரசவத்தில் 6 குழந்தைகள் பிறந்தன. இந்த நிகழ்வைக் கொண்டாடும் வகையில், இலங்கையின் முதற் தர குழந்தை பராமரிப்பு தரக்குறியீடான பேபி செரமி (Baby Cheramy), தனது அனைத்து வகையான குழந்தை பராமரிப்பு தயாரிப்புகளையும், குறித்த குழந்தைகளின் ஒரு வருடம் முழுவதிற்கும் வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் முன்வந்துள்ளது.

பெற்றோரின் அங்கலாய்ப்பை உறுதியாகப் புரிந்துகொள்ளும் ஒரு தரக்குறியீடு எனும் வகையில் பேபி செரமி அக்குடும்பத்திற்கு அத்தியாவசியமான குழந்தை பராமரிப்புப் பொருட்கள், டயபர்கள், ஷம்பு, சவர்க்காரம், க்ரீம், கொலோன், எண்ணெய், சலவை பராமரிப்பு பொருட்கள் போன்றவற்றை வழங்குவதாக உறுதியளித்துள்ளது. இதன் முதல் தொகுதிப் பொருட்கள், குறித்த ஆறு குழந்தைகளின் தந்தையான உதயங்க மரவனகொடவிடம் அண்மையில் கையளிக்கப்பட்டது.

இந்த வரலாற்று ரீதியான தருணம் குறித்து பேபி செரமியின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தனுஷ்க சில்வா கருத்துத் தெரிவிக்கையில், “குறிப்பாக சிறந்த தரம் வாய்ந்த குழந்தை பராமரிப்பு தயாரிப்புகளை வழங்க உறுதிபூண்டுள்ள தயாரிப்பு எனும் வகையில், இந்த 6 குழந்தைகளின் பிறப்பு எமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் அளித்தது. சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு மிகுந்த ஆறுதலையும் பராமரிப்பையும் உறுதி செய்யும் அதே வேளையில், எமது தரக்குறியீட்டின் நோக்கம், சிறந்த பெற்றோர் பராமரிப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்துவதாகும். " என்றார்.

# செலான் வங்கியின் மன்னார் கிளை அதிக இடவசதி படைத்த புதிய இடத்துக்கு இடம்மாற்றம்

அன்புடன் அரவணைக்கும் வங்கி, செலான் வங்கி தனது மன்னார் கிளையை அதிகளவு இடவசதி படைத்த புதிய மனையிடத்திற்கு சமீபத்தில் இடம்மாறியது. புதிய கிளை, இல. 181, தலைமன்னார் வீதி, மன்னார் எனும் முகவரியில் அமைந்துள்ளது. புதிய மன்னார் கிளையை வாடிக்கையாளர்கள் 0232223241 அல்லது 0232223242 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாக தொடர்பு கொள்ள முடியும் அத்துடன், mannar.bmg@seylan.lk எனும் மின்னஞ்சல் வாயிலாகவும் தமது கோரிக்கைகளை கிளைக்கு அனுப்ப முடியும்.



புதிய கிளையின் அமைவிடம் வாடிக்கையாளர்களுக்கு இலகுவான முறையில் கிளையையும் ATM சேவைகளையும் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அமைந்துள்ளது. வழமையான வேலை நேரங்களில் வங்கிக் கிளை செயலில் இருக்கும் என்பதுடன், அதிகளவு இடவசதி படைத்த புதிய கிளை, வாடிக்கையாளர்களுக்கு அதிகளவு பிரத்தியேகமான சேவைகளை வழங்கும் வகையில் அமைந்திருப்பதுடன், உயர்ந்த சௌகரியத்தை உறுதி செய்யும்.

தனது நாளாந்த செயற்பாடுகளை முன்னெடுக்கையில், சுகாதார அதிகாரத் தரப்பினரால் வழங்கப்படும் சகல வழிகாட்டல்களையும் செலான் வங்கி பின்பற்றுவதுடன், வாடிக்கையாளர்களையும் முன்னெச்சரிக்கையாக இருக்குமாறு ஊக்குவிக்கின்றது. தமது தினசரி கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு செலான் வங்கியின் டிஜிட்டல் கட்டமைப்புகளை பயன்படுத்துமாறு வங்கி அழைப்பு விடுத்துள்ளது. www.seylan.lk எனும் இணையத்தளத்திலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். மேலதிக உதவிகளைப் பெறுவதற்கு வாடிக்கையாளர்கள் வங்கியின் 24/7 ஹொட்லைன் இலக்கமான 0112 00 88 88 உடன் தொடர்பு கொள்ளலாம்.

# ஊழியருக்கு புதிய வீடொன்றை அன்பளிப்பு செய்துள்ள லக்மீ எக்ஸ்போர்ட்ஸ் லங்கா நிறுவனம்



எம்மவர் குணமும் எம்மவர் சுவையும் என்ற வாசகத்தின் கீழ் மக்களினது சுகாதாரத்துக்காகவும் போசாக்குக்காகவும் தம்மை அர்ப்பணித்துள்ள, தடயம் பட்டாசோயா மீற் உள்ளிட்ட தரமான பல்வேறு உற்பத்திகளை சந்தைக்கு வழங்கும் வரையறுக்கப்பட்ட லக்மீ எக்ஸ்போர்ட்ஸ் லங்காதனியார்நிறுவனத்தின் பூரண அனுசரணையுடன் அந் நிறுவனத்தின் பணியாட்டொகுதி அங்கத்தவரான விதுச லக்மாலுக்கு புது வீடொன்றை நிர்மாணித்து அதன் திறப்பு குறித்த பயனாளிக்கு அண்மையில் கையளிக்கப்பட்டது.

இதன் புது மனை புகும் கிரகப் பிரவேச நிகழ்வுக்கு இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க உள்ளிட்ட ஏராளமான சிறப்பு விருந்தினர்களுடன் லக்மீ எக்ஸ்போர்ட்ஸ்ஊழியர்களில்சிலர், விதுச லக்மாலின் குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் உள்ளூர் வாசிகளும் கலந்து கொண்டனர். லக்மீ நிறுவனம் எப்பொழுதும் தமது ஊழியர்களின் நலனோம்புகை தொடர்பாக கூடுதல் அக்கறை கொண்டுள்ளது. இப்பணி அதன் மேலுமொரு நீட்சியாகும். நாம் இரண்டாவது தடவையாக ஊழியரொருவருக்கு வீடொன்றை கையளித்துள்ளோம். தொடர்ந்தும் இவ்வாறான திட்டங்களை முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம் என லக்மீ எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் அதிபர் உசான் உடுமுல்ல தெரிவித்தார்.

அனுராதபுரம், தலாவ பிரதேசத்தில் சிறியதொரு தொழில்முயற்சியாக வெறும் 5 கிலோ சோயா மீற் உடன் 2008 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட லக்மீ எக்ஸ்போர்ட்ஸ்நிறுவனமானது, மிகக் குறுகிய காலத்திலேயே உள்நாட்டு சந்தையை வெற்றி கொண்ட பெரும் நிறுவனமாக தடம்பதித்துள்ளது. தற்பொழுது தடயம் பட்டா சோயாமீற், ப்ளெக் சிக்கன் சோயாமீற், லக்மீ சோஸ் வகைகள், மெஜிக் மிக்ஸ் நூடில்ஸ், பொல்டா தேங்காய் வினாக்கிரி உள்ளிட்ட 55 நுகர்வுப் பொருட்கள் லக்மீ இல்லத்திலிருந்து சந்தைக்கு வருகின்றன.

# GABV யின் ஆசிய பசுபிக் பிராந்திய அமர்வை நடத்தியது SDB வங்கி

பிராந்தியத்தில் சூழலிலும் சமூகத்திலும் அக்கறை கொண்ட வங்கிகள் மற்றும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களையும் ஒன்றிணைக்கும் வகையிலமைந்த, மதிப்புகள் மீதான வங்கியியலுக்கான உலகளாவிய கூட்டணி (GABV) ஆசிய பசுபிக் வருடாந்த அமர்வை SDB வங்கி 2021 நவம்பர் 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் முன்னெடுத்திருந்தது.

2009 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட மதிப்புகள் மீதான வங்கியியலுக்கான உலகளாவிய கூட்டணி (GABV) அமைப்பு, உலகின் சகல பாகங்களையும் சேர்ந்த வங்கியியல் முன்னோடிகளின் வலையமைப்பாக அமைந்திருப்பதுடன், வங்கியியல் துறையில் நேர்த்தியான மாற்றத்தை ஏற்படுத்த தன்னை அர்ப்பணித்துள்ளது. கொவிட்19 பரவல் காரணமாக, இந்த ஆண்டுக்கான அமர்வு டிஜிட்டல் தொழில்நுட்பத்துடன் மெய்நிகர் (Virtual) முறையில் இடம்பெற்றது. கொவிட்19 தொற்றுப் பரவலுக்கு பின்னர் வாடிக்கையாளர்களினதும் வியாபாரங்களினதும் மீட்சிக்காக தாம் முன்னெடுக்கும் தந்திரோபாயங்களை பகிர்ந்து கொள்வதற்கு அங்கத்துவ அமைப்புகளுக்கு வாய்ப்பளித்திருந்தது.

உலக வங்கியின் மதிப்பீடுகளின் பிரகாரம், இலங்கையில் கொவிட் 19 தொற்றுப் பரவல் காரணமாக அரை மில்லியனுக்கும் அதிகமானவர்கள் வறுமையில் தள்ளப்பட்டுள்ள நிலையில், பொருளாதார மீட்சியில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான போதியளவு நிதி ஒதுக்கீடு இலங்கை அரசாங்கத்திடம் இல்லை எனவும் கண்டறியப்பட்டுள்ள நிலையில், இலங்கை போன்ற வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் நிலைபேறான நிதியியல் பரவலை ஏற்படுத்துவதற்கு நிதித் துறையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் உரையாடல்கள் இடம்பெற்றதுடன், மூலதனத்தை திரட்டிக் கொள்வதற்கு சர்வதேச கூட்டாண்மைகளின் அவசியம் தொடர்பிலும் பேசப்பட்டிருந்தது. இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் யிவெட் பெர்னான்டோ, SDB வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி திலக் பியதிகம ஆகியோர் இலங்கையின் நிலைபேறான நிதியியல் முன்னேற்றம் தொடர்பான விளக்கங்களை வழங்கியிருந்தனர்.

# மெய்நிகர் தொடர்பாடல் சந்தைப்பகுதியை ஏற்படுத்த ‘The Creative Isle’ உடன் SLT- MOBITEL கைகோர்ப்பு

அல் இமா இஸ்லாமிய சேவைகள் அமைப்பின் ஏற்பாட்டில் குவைட் உயர்ஸ்தானிகராலயத்தினால் வத்துபிட்டிவெல தள வைத்தியசாலைக்கு ரூபா 9 மில்லியன் பெறுமதியான மருத்துவ ஒட்சிசன் சிலிண்டர்கள் 300 வழங்கி வைக்கும் வைபவம் குவைட் உயர்ஸ்தானியராலயத்தின் இரண்டாவது செயலாளரும் பதில் தூதுவருமான அப்துல் அஸீஸ் அத்வானியினால் வைத்தியசாலையின் பிரதான வைத்திய அத்தியட்சகர் சிறாஜிடம் கையளிப்பதைக் காணலாம். (படம் மாவத்தகம தினகரன் நிருபர்)

# கொமர்ஷல் வங்கியில் சிறுவர் சேமிப்புக் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு சரசவி புத்தகசாலையில் 20% வரை கழிவு

நாடு முழுவதும் உள்ள சரசவி புத்தகசாலையின் எந்தவொரு கிளையிலும் 2022 ஆகஸ்ட் மாத இறுதிவரை புத்தகங்கள் மற்றும் காகிதாதிகளை வாங்கும் கொமர்ஷல் வங்கி சிறுவர் கணக்கு வாடிக்கையாளர்களுக்கு 20% வரையான விஷேட கழிவு வழங்கப்படும். பல மாத காலங்களாக முடக்க நிலை காரணமாக வீடுகளுக்குள் முடங்கி இருந்த சிறுவர்களுக்கான ஒரு ஆறுதலாக கொமர்ஷல் வங்கி இந்தத் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

COMMERCIAL BANK

கொமர்ஷல் வங்கியின் அருணலு சிறுவர் சேமிப்புக் கணக்கு, இசுறு சிறுவர் சேமிப்புத் திட்டம், டொட்கொம் பருவ வயது கணக்குகள் என்பன உள்ளவர்கள் இந்தக் கழிவுகளுக்கு உரித்துடையவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. தமது வாசிப்பு மற்றும் புத்தாக்க இயல்புகளை மேம்படுத்திக் கொள்ளும் அதேவேளை பணத்தை சேமித்துக் கொள்ளவும் இது ஒரு வாய்ப்பாக அமையும்.

ஊக்குவிப்புக் காலப்பகுதியில் சரசவி கிளைகளில் உள்ள சரசவி வெளியீடுகள் மற்றும் வீரோதார காகிதாதிகளுக்கு 20% கழிவையும், ஏனைய சகல வெளியீடுகளுக்கும் காகிதாதிகளுக்கும் பத்து வீத கழிவையும் பெற்றுக் கொள்ள முடியும். கணனிக் கருவிகள், கல்வி வெளியீடுகள் மற்றும் சரசவியின் ஏனைய சேவைகளுக்கு இந்தக் கழிவுத் திட்டம் செல்லுபடியாகாது என வங்கி மேலும் அறிவித்துள்ளது. கொமர்ஷல் வங்கியில் மேற்படி கணக்குகளை வைத்திருப்பவர்கள் அதனை நிரூபிக்கும் வகையில் உரிய கணக்குப் புத்தகங்களையும் அல்லது சான்றிதழ்களையும், டொட்கொம் கணக்கு வைத்திருப்பவர்கள் அதற்கான டெபிட் அட்டையையும் கொள்வனவின் போது புத்தகசாலை கரும பீடத்தில் காட்ட வேண்டும். அப்போது தான் உரிய கழிவு வழங்கப்படும்.





அகில இலங்கை வை.எம்.எம். ஏ பேரவையின் தேசிய தலைவர் சஹித் எம் ரிஸ்வியின் வழிக்காட்டலின் கீழ் கம்பளை வை.எம். எம் ஏ யின் தலைவர் இஹ்திஸான் முஹம்மட் தலைமையின் கீழ் வெள்ளம் மற்றும் மண் சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலர் உணவுப் பொதி வழங்கி வைக்கும் நிகழ்வு கம்பளை உடப்பலாத்த பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.நிகழ்வில் உடப்பலாத்த பிரதேச செயலகத்தின் உதவி செயலாளர் திசானாயக்கவும் கலந்து கொண்டார். படம் மாவத்தகம தினகரன் நிருபர்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு

முழு உலகமும் கொரோனா தொற்றினால் முடங்கி,
பொருளாதாரம் மற்றும் சமூக வாழ்வு சீர்குலைந்திருந்த காலகட்டத்தில்,
முன்னொருபொழுதும் இல்லாதவாறு தைரியத்துடன் எழுந்த
பெருமையுடைய இலங்கையர்கள் நாமாவோம்...

தொற்று பரவலினால் இரண்டு வருட காலம் படிப்படியாக சீர்ழந்த
வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறைக்கு புத்துயிர் அளித்து மீண்டெழுந்து,
பதிவு செய்து வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்குச் செல்பவர்களின் தொகை
இலட்சத்தின் அளவை
தாண்டுவதற்கு தேர்ச்சி பெற்றோம்.

இது முழு வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறைக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.
இவ்வாறான அபாயகரமான நிலையில் தைரியத்துடன் சவால்களுக்கு முகங்கொடுத்த
புலம்பெயர் தொழிலாளர் சமூகத்திற்கு தேசத்தின் வாழ்த்துக்கள்

நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கின் மூலம் தடைகளைவென்று
தைரியத்துடன் முன்னோக்கிச் செல்ல தலைமைதாங்கிய மற்றும் வழிகாட்டிய
அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள்
கௌரவ பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள்
தொழில் அமைச்சர் கௌரவ நிமல் சிறிபால த சில்வா அவர்கள்
வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தைப்பல்வகைப்படுத்தல்
இராஜாங்க அமைச்சர் கௌரவ பியங்கர ஜயரத்ன அவர்கள்
அமைச்சின் செயலாளர், உள்ளிட்ட ஊழியர்கள் குழாமிற்கு மற்றும்
இலங்கைக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை பெற்றுக் கொள்ள திறம்பட செயற்பட்ட
உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களுக்கு,
வெளிநாட்டிலுள்ள வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களுக்கு,
அனுசரணையாளர்களுக்கு அந்த பணிகளுக்கு ஆதரவு வழங்கும் இலங்கை
தூதுவராலய அலுவலகர்களுக்கு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப்
பணியகத்தின் பணிப்பாளர் சபையினர் உள்ளிட்ட அனைத்து ஊழியர்
குழாமிற்கு நன்றி கூறுகின்றேன்.



மேஜர் ஜெனரல் மஹிந்த ஹதுருசிங்க - தலைவர்
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

# நகர்வலம்



## 'தட்டு தாவாரம்' கவிதை நூல் அறிமுக விழா இன்று கொழும்பில்

"ஈழத்து நூன்" எம்.ஏ.எம்.நிலாம் எழுதிய 'தட்டு தாவாரம்' கவிதை நூல் அறிமுக விழா இன்று புதன் கிழமை (08) பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு 2, முஸ்லிம் காங்கிரஸ் தலைமையக தாருஸ்ஸலாம் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் உப தலைவி கலாபூஷணம் புர்கான் பீ. இப்திகார் (எம்.ஏ.) தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், பிரதம அதிதியாக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் "முனீருள் மில்லத்" பேராசிரியர் கே.எம். காதர் மொஹிதீன் கலந்து கொள்வதோடு, நிகழ்வின் சிறப்பு அதிதிகளாக ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என். எம். அமீன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மல்லியப்பூ சந்தி திலகர், கல்லொழுவை அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர் எம்.ரி.எம்.ஆஸிம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கின்றனர்.

நூலின் முதல் பிரதியை தொழிலதிபர் முஸ்லிம் சலாஹுதீன் பெற்றுக் கொள்வதோடு, டாக்டர் மௌலவி ஜலீல் சுல்தான் (மன்பஈ) திருச்சி மாவட்ட அரசு டவுன், டாக்டர் வி.எஸ்.ஏ. ஷேக் முகமது சுஹைல் (தலைவர், செயலாளர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி திருச்சி), திருச்சி டாக்டர் எம்.கே. ஷாஹுல்ஹமீது (ஊடகவியலாளர் மணிச்சுடர், மக்கள்குரல்) எழுத்தாளர்களான கே.ஜே.உமர்கயான், பழனி சஹான் ஆகியோர் சிறப்பதிதிகளாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

## வெலிகம நகர பகுதிகளில் டெங்கு நோய் அபாயம்

### விழிப்பாக இருக்குமாறு சுகாதார அதிகாரிகள் வேண்டுகோள்

**வெலிகம தினகரன் நிருபர்**



வெலிகம நகர சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட சில பகுதிகளில் டெங்கு நோய் பரவும் அபாயம் தோன்றியுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மக்களின் கவனயீனமே இதற்கு பிரதான காரணமாக உள்ளது. நகர சுகாதார அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையில் 22 பேருக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட நபர்கள் அவர்களது சுற்றுச்சூழலை சுத்தமாக வைக்காததையிட்டே இவ்வாறு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. டெங்கு நுளம்பு பெருகும் வண்ணம் இப்பகுதிகள் காணப்பட்டன. டெங்கு நுளம்பு பெருகும் சுற்றுச்சூழலை வைத்திருப்பவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரவும் சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

எனவே, நீர்த் தேங்கி நிற்கும் இடங்களை இனங்கண்டு அவற்றை உடனடியாக அகற்றி விடுமாறு கேட்கப்பட்டுள்ளனர். கொரோனா தொற்று இன்னும் முழுமையாக கட்டுப்பாட்டுக்கு வராத நிலையில் டெங்கு நோய் பரவும் அபாயம் தோன்றியுள்ளது. இது பெரும் நெருக்கடியைத் தோற்றுவிக்கும். எனவே சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறு பொதுமக்களுக்கு சுகாதார அதிகாரிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## புத்தளம் வெள்ள அனர்த்தம்;

# ரூ.1200 மில். பெறுமதியான இறால்கள் அழிவடைவு



**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



புத்தளம் மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட இறால் வளர்ப்பு பண்ணையாளர்களுக்கு நஷ்டஈடாக இறால் குஞ்சுகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அதிகார சபை உதவிப் பணிப்பாளர் ஜே.பி. சமிந்த லக்மால் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக புத்தளம் மாவட்டத்தில் 1200 மில்லியன் ரூபா பெறுமதியான இறால்கள் அழிவடைந்துள்ளன.

புத்தளம் மாவட்டத்தில் உள்ள 8 பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் 1700 ஹெக்டேயர் நிலப்பரப்பில் இறால் பண்ணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாவட்டத்தில் 850 இறால் பண்ணைகள் காணப்படுகின்ற போதிலும், அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தில் மூழ்கி, 163 இறால் பண்ணைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால், 1200 மில்லியன் பெறுமதியான 800 தொன் கொண்ட இறால்கள் அழிவடைந்துள்ளன. சுமார் 95 மில்லியன் பெறுமதியான இறால் குஞ்சுகளும் வெள்ளத்தினால் முழுமையாக அழிவடைந்துள்ளன.

### பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடாக இறால் குஞ்சுகள் - உதவிப்பணிப்பாளர்

இவ்வாறு வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட இறால் பண்ணைகளின் வளர்ப்பாளர்களுக்கு நஷ்டஈடாக இறால் குஞ்சுகளை கொள்வனவு செய்து கொடுக்க நிதி அமைச்சிடம் அனுமதி கோரி கடிதம் அனுப்பி வைத்துள்ளதாகவும் அதற்கான பதில் இன்னும் கிடைக்கவில்லை எனவும் இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அதிகார சபை உதவிப் பணிப்பாளர் ஜே.பி. சமிந்த லக்மால் மேலும் தெரிவித்தார்.



அரசாங்கத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தி இளம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைப்பு பாகிஸ்தான் பதில் உயர் ஸ்தானிகர் தன்வீர் அஹமடினை அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் சந்தித்தனர். இதன்போது பாகிஸ்தானில் கொலை செய்யப்பட்ட பொறியியலாளா பிரியங்ககுமாரவின் கொலை தொடர்பில் தமது கண்டனத்தை அவர்கள் தெரிவித்துக்கொண்டதோடு பாக். பிரதமர் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு இவர்கள் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொண்ட பின் கூட்டாக எடுத்த படம். படம்: அஷ்ரப் ஏ சமத்

## கடலாமையை கடத்திய மூவர் பொலிஸாரால் கைது



**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

கற்பிட்டி கப்பலடி கடற்கரைப் பகுதியில் (06) மாலை சூட்சுமமான முறையில் கடலாமையை உரைப் பையில் மறைத்து கொண்டு செல்ல முற்பட்ட மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் விஷேட புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய கற்பிட்டி பொலிஸாருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது கற்பிட்டி, கொச்சிக்கடை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கடலாமை ஒலிவ நிற (Olive Redly) வகையைச் சார்ந்தது என வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

குறித்த கடலாமை இறைச்சிக்காக பயன்படுத்துவதற்காக பிடிக்கப்பட்டதாக பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரையும் புத்தளம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பொலனறுவை மாவட்ட வைத்தியசாலைகளுக்கு ஒக்சிஜன் இயந்திரங்கள் வழங்கி வைப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**



பொலனறுவை மாவட்டத்தில் உள்ள ஐந்து வைத்தியசாலைகளுக்கு தேவையான ஒக்சிஜன் இயந்திரங்களை வட மத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் பிரதேச சுகாதார பணிப்பாளர் டபிள்யு குமாரசிங்கவிடம் கையளித்தார்.

பொலனறுவை புதிய நகரில் அமைந்துள்ள ஆளுநர் அலுவலகத்தில் வைத்தே இவ்வுபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

பொலனறுவை மாவட்டத்தில் அமைந்துள்ள ஹிங்குரங்கொட, மெதிரிகிரிய, கல்அமுன, வெலிகந்த மற்றும் அரலகங்வில உள்ளிட்ட ஆரம்ப வைத்தியசாலைகளுக்கே மேற்படி ஒக்சிஜன் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இராஜாங்க அமைச்சர் ரொசான் ரணசிங்க விடுத்த வேண்டுகோளின் பேரிலேயே சுமார் 70 இலட்சம் ரூபா பெறுமதியான இவ் வைத்திய உபகரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன் போது இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க, வட மத்திய மாகாண பிரதான செயலாளர் சந்திரசிறி பண்டார, ஆளுநரின் செயலாளர் சுஜந்த ஏக்கநாயக்க, பொலனறுவை மாவட்ட செயலாளர் டபிள்யு. ஏ.தர்மசிறி, சுகாதார அமைச்சின் செயலாளர் நயனா தசநாயக்க மற்றும் பொலனறுவை பிரதேச சுகாதார பணிப்பாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## கலீபத்துல் குலபாவுக்கு இன்று துஆ பிரார்த்தனை

### சீனன்கோட்டை பள்ளிச்சங்கம் ஏற்பாடு

**அஜ்வாத் பாஸி**



இலங்கை சாதுலிய்யா தரீக்காவின் தலைவரும் கொழும்பு பெரிய பள்ளிவாசலின் பிரதம கதீபும் சீனன்கோட்டை ஜும்ஆ பள்ளிவாசலின் கதீப்களில் ஒருவருமான கலீபதுல் குலபா மௌலவி அல்ஹாஜ் ஜே. அப்துல் ஹமீத் (பஹ்ஜி) கடும் சுகயீனமுற்று கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சத்திர சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. வைத்தியசாலையில் தற்போது அவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

அனைவரினதும் நன்மதிப்பை பெற்ற நாடறிந்த உலமாவான அன்னாரின் பூரண சுகத்துக்காக விசேட துஆ பிரார்த்தனை மஜ்லிஸொன்று இன்று புதன் கிழமை (08) ளுஹர் தொழுகையை தொடர்ந்து சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய ஜும்ஆ பள்ளிவாசலில் நடைபெறவுள்ளது.

வெலிகம கப்புவத்தை ரிபாஇய்யா அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி அப்துல்லாஹ் ஸூபி (ரவ்ழி) விசேட துஆப்பிரார்த்தனை நிகழ்த்துவார். இந்நிகழ்வில் ஊர் ஜமாஅத்தார்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு பள்ளிச்சங்க கூட்டுச்செயலாளர் அல்ஹாஜ் ஷிஹாப் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

## வெள்ளப் பாதிப்பு பகுதிகளுக்கு இராஜாங்க அமைச்சர் விஜயம்



**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளத்தில் அடிக்கடி வெள்ளத்தினால் பாதிக்கப்படும் கடையாக்குளம் மற்றும் சமகி மாவத்தை பகுதிகளுக்கு கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பெரேரா அண்மையில் விஜயம் செய்தார்.

இதன்போது அடிக்கடி வெள்ளத்தினால் பாதிக்கப்படுகின்ற பிரதேசங்களை நகர பிதா எம்.எஸ்.எம். ரபீக்குடன் சென்று பார்வையிட்டார்.

அன்றைய தினம் பொதுமக்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட கலந்துரையாடலிலும் இராஜாங்க அமைச்சர் கலந்துகொண்டதோடு பொது மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்துகொண்டார். தற்போதைய மழையுடனான காலநிலை முடிவுக்கு வந்தவுடன் குறித்த பகுதிகளில் நிலவும் வீதி மற்றும் வடிகான் பிரச்சினைகளுக்கு நகரசபையினூடாக உரிய தீர்வுகளை தாம் வழங்கவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் இதன்போது உறுதியளித்தார்.

இக்கலந்துரையாடலில் நகரசபை உறுப்பினர் ரனீஸ் பதுர்தீன் உட்பட பிரதேச உலமாக்கள் சமூக ஆர்வலர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## மர்ஹூம் நியாஸ் மௌலவி பௌண்டேசனால் வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்



**ஏ.எஸ்.எம்.ஜாவித்**

கொரோனா நோய் காரணமாக நாடு முடக்கப்பட்டிருந்த நிலையில் தொழில் இன்றியிருந்த வசதியற்ற குடும்ப பிள்ளைகளுக்கு அவர்களின் குடும்ப நிலைமைகளைக் கருத்திற் கொண்டு மர்ஹூம் கலாநிதி நியாஸ் மௌலவி பௌண்டேசனால் இலவச அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

கொழும்பு 12, பீர்சாஹிப் ஜீம்ஆப் பள்ளிவாசல் நலன்புரிச் சங்கமும், நியாஸ் மௌலவி பௌண்டேசனும் இணைந்து பவுண்டேசனின் பணிப்பாளர் மௌலவி எல்.எம். லமீர் ஹாபிழ் (அல்ஹாசிமி) தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இஹ்ஸானியா அரபுக் கல்லூரியின் அதிபர் மௌலவி ஹுஸைன் (தீனி), கொழும்பு மாநகர சபையின் பிரதி மேயர் எம்.ரி.எம்.இக்பால், வாழைத்தோட்ட பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி, தனவந்தர்கள், நற்பணி மன்ற உறுப்பினர்கள் மற்றும் உலமாக்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில் மூவினத்தையும் சேர்ந்த சுமார் 150 மாணவ மாணவிகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இரண்டாம் கட்டமாக மேலும் 200 மாணவ மாணவிகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



# குறுகிய காலத்தில் முன்னோக்கி செல்ல ஊடகம் எமக்கு பெரும் சக்தியாக திகழ்ந்தது

## வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜி எல் பீரிஸ்

ஒரு கட்சியாக மிகவும் குறுகிய காலத்தில் பெற்றுக்கொண்டுள்ள வெற்றிக்கு இந்நாட்டின் ஊடகங்கள் பெரும் சக்தியாக இருந்துள்ளதாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளரும் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருமான பேராசிரியர் ஜி எல் பீரிஸ் கூறினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடக மத்திய நிலையத்துக்கு மூன்று ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதை சுட்டிக்காட்டிய அவர் நமது நாட்டில் ஊடகவியலாளர்கள் மக்களுக்கு விடயங்களை அறியத் தருவதற்காக ஆற்றும் அளப்பரிய சேவையை பாராட்டுவதாகவும் மிகவும் அவசியமான பிரிவாக ஊடகப்பிரிவை கூறலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

அமைச்சர் இதனை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கட்சி தலைமையகத்தில் கடந்த (06) ந் திகதி நடைபெற்ற விசேட சந்திப்பு ஒன்றில் பங்குபற்றியபோதே தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடக மத்திய நிலையத்தை ஆரம்பித்து தற்போது மூன்று வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள வேளையில் அதனை கொண்டாடும் விதமாக இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கடந்த காலத்தைத் திரும்பிப் பார்த்தால் இந்த மூன்று வருட காலத்திற்குள் பல சம்பவங்கள் எமது நாட்டில் இடம் பெற்றுள்ளன. அத்துடன் பெருமளவான மக்களின் ஆதரவுடன் வரலாற்று ரீதியான வெற்றியைப் பெற முடிந்துள்ளதாகவும் ஞாபகப்படுத்திய அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தேர்தல்கள் பலவற்றை வெற்றி பெறுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதோடு இவை அனைத்தும் தானாகவே நடக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

2016ஆம் ஆண்டு பசில் ராஜ்பக்ஷ இக் கட்சியை ஸ்தாபித்த சந்தர்ப்பத்தில் இவ்வளவு தூரம் பயணப்பட முடியும் என யாரும் எண்ணியிருக்கவில்லை . அதற்காக பல காரணிகள் சாதகமாக அமைந்ததுடன் ஒன்றிணைந்த பலமும் அதற்கு காரணமானதாக அமைந்தது என தெரிவித்தார்.

சவால்களுக்கு முகம் கொடுக்கும் பலம் தங்களது கட்சிக்கு உள்ளது என ஞாபகப்படுத்திய அமைச்சர் அதற்காக இந்நாட்டின் ஊடகங்கள் பெரும் பலமாக அமைந்தது எனவும் அவர்கள் அனைவருக்கும் கட்சியின் மரியாதையை தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார். தற்போது வலுவான அஸ்திவாரம் ஒன்று போடப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டிய அவர் இது பயணத்தின் முடிவல்ல ஆரம்பம் மட்டுமே எனவும் இன்னும் பல வெற்றிகளை எதிர்காலத்தில் பெறுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி சாகர காரியவசம், பாராளுமன்றஉறுப்பினர்ஜயந்தகெடகொட, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நிர்வாக செயலாளர் ரேணுகா பெரேரா, ஊடக மத்திய நிலையத்தின் தலைவர் திலக் தேனுவர மற்றும் ஊடகத் தலைவர் சிசிர முனசிங்க ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

**வீ.ஆர்.வயலட்**



# யாழ்ப்பாணத்தில் ஐம்பது வயதை கடந்தும் முச்சக்கரவண்டி ஓட்டும் பெண்

எனது விருப்பத்துக்கமைய பெண்களையும் வயோதிபர்களையும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்களையும் முச்சக்கரவண்டியில் அதிகளவில் ஏற்றிச் செல்கின்றேன். அவர்களும் பயமின்றி சுதந்திரமாக பயணிக்கலாம் என்ற நம்பிக்கையுடன் எனது முச்சக்கரவண்டியில் பயணிக்கின்றார்கள் என்கிறார் பெண் முச்சக்கரவண்டி ஓட்டுநர் கோமளேஸ்வரி.

வயதில் ஐம்பதைக் கடந்திருக்கும் இவர், யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி தரிப்பிடத்தில் கடந்த 2012ஆம் ஆண்டிலிருந்து முச்சக்கரவண்டி ஓட்டுநராக தொழில் புரிந்து வருகின்றார்.

பாரம்பரியத் தொழில்களை விட்டு விலகி ஆண்களால் மட்டும் செய்யப்பட்டு வந்த சாரதித் தொழிலை தங்களாலும் முடியும் என சாதித்துக் காட்டிய பெண் முச்சக்கரவண்டிச் சாரதிகள் வரிசையில் கோமளேஸ்வரி செல்வகுமாரும் சுயாந்தினி இந்திரகுமாரும் இணைந்து கொள்கின்றனர்.

அந்த வகையில், அவரும் அவரது சக தொழில் நண்பியான சுயாந்தினியும் தங்களது தொழில் அனுபவங்களை தினகரன் வாசகர்களோடு பகிர்ந்து கொள்கின்றனர்.

ஏற்கெனவே நான் சோம்பிக் கிடக்கவில்லை. வாழ்வாதாரத்துக்காகவும் வருமானத்துக்காகவும் கோழி, ஆடு, மாடு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டு வந்தேன். ஆனாலும் அந்தத் தொழில் எனக்கு வெற்றி அளிக்கவில்லை. அன்றாடத் தேவைக்கான வருமானத்தைக் கூட ஈட்ட முடியவில்லை என்று தனது அனுபவத்தை விவரிக்கின்றார் கோமளேஸ்வரி.

வறுமையான சூழ்நிலையில் எனது வாழ்வாதாரத்துக்காக நான் முச்சக்கரவண்டி ஓட்டுநர் தொழிலில் ஈடுபட உத்தேசித்தேன்.

எனது தந்தையும்; வாகனச் சாரதியாக கடமையாற்றியதால் எனக்கு சாரதித் தொழிலில் ஆர்வம் இருந்தது. அந்த ஆர்வம்தான் என்னை பெண் முச்சக்கரவண்டிச் சாரதியாக ஆக்கியுள்ளது. எனக்கு உடலாற்றல் உள்ளவரை இந்தத் தொழிலைச் செய்வதில் உறுதியாக இருக்கின்றேன்.

அதேவேளை நான் இந்த முச்சக்கரவண்டிச் சாரதித் தொழிலில் ஈடுபடுவதற்கு எனது குடும்பத்திலும் பூரண ஆதரவு கிடைத்துள்ளது.

முச்சக்கரவண்டி ஓட்டுவதன் மூலம் எதிர்பார்த்தளவு வருமானம் இல்லையென்றபோதிலும் கூட, ஓரளவு வருமானத்தை ஈட்ட முடிவதுடன், அந்த வருமானத்தைக் கொண்டு குடும்பச் செலவு உட்பட எனது பிள்ளைகளின் படிப்புச் செலவுகளையும் பூர்த்தி செய்யக்கூடியதாகவும் உள்ளது.

நான் எனது வீட்டு வேலைகளையும் கவனித்துக்கொண்டு நாளொன்றுக்கு சுமார் 5 மணித்தியாலங்கள் வரையில் முச்சக்கரவண்டிச் சாரதித் தொழிலில் ஈடுபட்டு அண்ணளவாக 1,500 ரூபா வரையில் சம்பாதிக்கின்றேன்.

முழுநேரத் தொழிலாக ஈடுபட்டால் இதைவிட கூடுதலான வருமானத்தை ஈட்ட முடியும். ஆனால், குடும்பப் பெண்ணாக இருப்பதால் வீட்டு வேலைகளையும் கவனிக்க வேண்டிய பொறுப்பு உள்ளது.

தற்போது எனது பிள்ளைகள் கல்வி கற்கின்றார்கள். பிள்ளைகள் தற்போதைய வயதில் கல்வியில் நாட்டம் காட்ட வேண்டும் என்பதுடன், நான் இழந்த கல்வியை அவர்கள் இழக்கக்கூடாது என்பதையுமே விரும்புகின்றேன்.

இருந்தபோதிலும், எனது பிள்ளைகளின் எதிர்கால நன்மை கருதி அவர்களுக்கு முச்சக்கரவண்டிச் சாரதித் தொழிலை பழக்கிக்கொடுக்கும் உத்தேசம் உள்ளது.



ஒன்பது வருடங்களாக சாரதியாக குடும்பத்தை காப்பாற்றும் பெண்

காரணம் தொழிலொன்று இல்லாது போகும் பட்சத்தில் சுயதொழிலில் ஈடுபடுவதற்கு அது கைகொடுக்கும் என்பதால் அவர்களும் முச்சக்கரவண்டி ஓட்டக் கற்றுக்கொள்ள வேண்டும் என விரும்புகின்றேன்.

ஆண், பெண் என்ற பால் வேறுபாடின்றி இருபாலாரையும் சமமாக மதித்து எனது முச்சக்கரவண்டியில் நான் ஏற்றிச் செல்கின்றேன். எனது தைரியமான முச்சக்கரவண்டிச் சாரதித் தொழிலை ஆண்கள் பாராட்டுவதுடன், என்னைப் போன்று ஏனைய பெண்களும் முச்சக்கரவண்டிச் சாரதித் தொழிலில் ஈடுபட வேண்டும் எனவும் வாழ்த்துக் கூறுவார்கள். எனக்கு சமுதாயத்தில் வரவேற்புக் கிடைக்கின்றது என்பதே இதன் மூலம் தெட்டத்தெளிவாகின்றது.

வீடு, உறவினர் என்று குறுகிய வட்டத்திற்குள் வாழ்ந்த எனக்கு, முச்சக்கரவண்டிச் சாரதித் தொழிலில் ஈடுபடத் தொடங்கியதைத் தொடர்ந்து யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனைத்து இடங்களையும் தெரிந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டியுள்ளது.

அது மாத்திரமின்றி, பயணிகள் எனது முச்சக்கரவண்டியை வாடகைக்கு அமர்த்திச் செல்வதால் யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற இடங்களுக்குச் செல்லும் சந்தர்ப்பமும் எனக்கு கிடைத்துள்ளது இது மகிழ்ச்சியளிப்பதாகும்.

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக நாடு முடக்கப்பட்டிருந்த காலத்தில் முச்சக்கரவண்டிச் சாரதித் தொழிலில் கடும் பின்னடைவு ஏற்பட்டது.

அத்தோடு, முச்சக்கரவண்டியை வீட்டிலேயே நிறுத்தி வைக்க வேண்டி வந்ததால் முச்சக்கரவண்டியின் பற்றரி (மின்கலம்) உள்ளிட்ட பல உதிரிப் பாகங்கள் பழுதடைந்துள்ளன.

கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பினால் பஸ், ரயில் போக்குவரத்துகளில் சீரின்மை காணப்படுகின்றது. பயணிகளின் வருகையும் குறைவாக உள்ளது. இதனால் தற்போது முச்சக்கரவண்டித் தொழில் மூலம் கிடைக்கும் வருமானத்திலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

ஆண் முச்சக்கரவண்டிச் சாரதிகளினால், பெண் முச்சக்கரவண்டிச் சாரதிகளுக்கு கேலி, கிண்டல் வருவதில்லை.

ஆனால், கொரோனா ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் பெண் முச்சக்கரவண்டிச் சாரதிகளுக்கு ஒதுக்கப்பட்ட தரிப்பிடத்திற்கு எம்மால் போக முடியாது போனது.

இந்நிலையில், தற்போது பெண் முச்சக்கரவண்டிச் சாரதிகளுக்கான தரிப்பிடம் என்று இடப்பட்டிருந்த பெயர்ப் பலகை அகற்றப்பட்டுள்ளது. எமது தரிப்பிடத்தில் ஆண் முச்சக்கரவண்டிச் சாரதிகள் தரித்துச் செல்கின்றார்கள். இதனால் நாம் புதிய பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளோம். இந்தப் பிரச்சினை உரிய தரப்பினரால் தீர்த்து வைக்கப்பட வேண்டும். யாழ்ப்பாணம் மாநகர சபை இந்த விடயத்தில் அக்கறை காட்ட வேண்டும். பெண்களும் முச்சக்கரவண்டி சாரதித் தொழிலில் ஈடுபடுகின்றார்கள் என்பதை அவர்கள் உணர்ந்து எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தங்கி வாழாமல் பிறரிடம் கையேந்தாமல் நான் சுயமாக சம்பாதிக்கின்றேன் என்ற மனத்திருப்தி எனக்கு இருக்கின்றது. என்னைப் போன்று ஏனைய பெண்களும் முச்சக்கரவண்டிச் சாரதித் தொழிலில் ஈடுபட்டு சுயமாக சம்பாதிக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன் என்கின்றார் கோமளேஸ்வரி.

**கணவரின் மறைவுக்குப் பின்னர் கைகொடுத்தது முச்சக்கரவண்டி**

**சுயாந்தினி இந்திரகுமார்**

கணவரின் மறைவுக்குப் பின்னர் கடந்த 9 வருடங்களாக முச்சக்கரவண்டி ஓட்டியே தனது குடும்ப வாழ்வாதாரத்தைக் தேடிக் கொள்வதாக யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி தரிப்பிடத்தில் முச்சக்கரவண்டிச் சாரதியாக தொழில் புரியும் 42 வயதுடைய சுயாந்தினி இந்திரகுமார் தெரிவிக்கின்றார். தற்போது தலைதூக்கியுள்ள கொரோனா வைரஸ் தொற்று நெருக்கடி காரணமாக முச்சக்கரவண்டி ஓட்டி சம்பாதிப்பதில் வருமான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் தனது குடும்ப வாழ்வாதாரத்தைக் கொண்டுசெல்வதில் சிரமப்படுவதுடன், முச்சக்கரவண்டி பழுது மற்றும் குத்தகைப் பணம் செலுத்துதல் உள்ளிட்ட செலவுகளை சமாளிப்பதிலும் மிகவும் கஷ்டப்படுகின்றேன்.

மேலும் அவர் தனது அனுபவத்தை விவரிக்கையில், எனது 9 வருட சேவைக் காலத்தில் முச்சக்கரவண்டிச் சாரதித் தொழில் மூலமாக நான் எதுவித பிரச்சினையையும் எதிர்நோக்கியதில்லை

எனக்கு உடலாற்றல் இருக்கும்வரை நான் முச்சக்கரவண்டிச் சாரதித் தொழிலை செய்வதற்கு எண்ணியுள்ளேன்.


அத்துடன், எனது பிள்ளைகளுக்கும் இத்தொழிலை பழக்கிக்கொடுக்க உத்தேசித்துள்ளேன். ஒரு கட்டத்தில் எனக்கு இயலாமல் போகும் பட்சத்தில் எனது பிள்ளைகள் இத்தொழிலை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

பாடசாலைகளுக்கு பெண் பிள்ளைகளை ஏற்றிச்செல்வதுடன், பெண்களே அதிகளவில் எனது முச்சக்கரவண்டியில் பயணிக்கின்றனர். அதேவேளை, ஆண்களையும் எனது முச்சக்கரவண்டியில் ஏற்றிச் செல்கின்றேன்.

ஆண் முச்சக்கரவண்டிச் சாரதிகளினாலும் எனக்கு தக்க தருணத்தில் பூரண ஒத்துழைப்புக் கிடைக்கின்றது.

எனக்கு சமுதாயத்தில் வரவேற்புக் கிடைப்பதுடன், நான் பாராட்டப்பட்டு உதவிகளும் கிடைத்துள்ளன. சர்வதேச மகளிர் தினத்தில் நான் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளேன் என்று பெருமிதத்துடன் கூறுகின்றார் சுயாந்தினி.

தங்களைப் போன்று மேலும் பெண்கள் சாரதித் தொழில் செய்ய முன்வர வேண்டும் என்று முன்னோடிகளான கோமளேஸ்வரியும் சுயாந்தினியும்ஆதங்கப்படுகின்றனர்.



**ஆர்.சுகந்தினி**

# USAID பணிப்பாளரினால் தொழில் பயிற்சி அதிகாரசபைக்கு தொழில் பேருந்து கையளிப்பு

இலங்கை USAID பணிப்பாளர் Reed Aeschliman இனால், தொழில் பயிற்சி அதிகாரசபையின் (VTA) தலைவர் எரங்க பஸ்நாயக்கவிடம் தொழில் பேருந்து ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கோட்டை வளாகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கையளிக்கப்பட்டது. அதன் தொடக்க நிகழ்வாக, நாடு தழுவிய பயணத்தில், சர்வதேச மேம்பாட்டுக்கான அமெரிக்க அரசாங்கத்தின் (USAID) ஆதரவுடன் செம்மையாக்கப்பட்ட VTA வின் தொழில் பேருந்து ஆனது, உலகத் தரம் வாய்ந்த தொழில்முறை,தொழில் சோதனை மற்றும் வழிகாட்டுதலை வழங்குவதற்காக இலங்கையின் தென் முனையில் உள்ள தேவேந்திர முனை முதல் வடக்கின் பருத்தித் துறை வரை ஆறு மாவட்டங்களிலுள்ள 21 பின் தங்கிய கிராமங்களைச் சேர்ந்த 2,600 இளைஞர் யுவதிகளிடம் சென்றடையவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், USAID உயர் அதிகாரிகள், தொழில் பயிற்சி அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# நெருக்கடிக்கு மத்தியில் கொழும்பு ஸ்டார்ஸ் அணிக்கு முதல் வெற்றி



கொழும்பு ஸ்டார்ஸ் மற்றும் கோல் கிளேடியேட்டர்ஸ் அணிகள் இடையே நடைபெற்று முடிந்திருக்கும், 2021ஆம் ஆண்டுக்கான லங்கா பிரீமியர் லீக் ரி 20 தொடரின் 03ஆவது போட்டியில் கொழும்பு ஸ்டார்ஸ் அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றியினைப் பதிவு செய்திருப்பதோடு, தொடரினையும் வெற்றியுடன் ஆரம்பித்திருக்கின்றது.

லங்கா பிரீமியர் லீக் தொடரில், கோல் கிளேடியேட்டர்ஸ் அணிக்கு இரண்டாவது போட்டியாகவும், கொழும்பு ஸ்டார்ஸ் அணிக்கு முதல் போட்டியாகவும் அமைந்த தொடரின் மூன்றாவது மோதல் கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் (06) நடைபெற்றது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற கோல் கிளேடியட்டர்ஸ் அணியின் தலைவர் பானுக்க ராஜபக்ஷ, இந்த தொடரில் தமது இரண்டாவது வெற்றியினை எதிர்பார்த்த வண்ணம் போட்டியில் முதல் துடுப்பாட்டத்தினை தெரிவு செய்திருந்தார்.

அதன்படி போட்டியில் முதலில் துடுப்பாடிய கோல் கிளேடியட்டர்ஸ் அணிக்கு ஆரம்ப வீரர்களாக வந்திருந்த தனுஷ்க குணத்திலக்க, குசல் மெண்டிஸ் ஆகிய இருவரும் ஏமாற்றம் தந்திருந்தனர்.

இதில் 12 பந்துகளை எதிர்கொண்ட தனுஷ்க குணத்திலக்க ஒரு ஓட்டத்தினை மாத்திரம் பெற்று சொதப்பியிருக்க, குசல் மெண்டிஸ் 4 ஓட்டங்களை மாத்திரம் பெற்றிருந்தார்.

மறுமுனையில் பந்துவீச்சில் கொழும்பு ஸ்டார்ஸ் அணிக்கு அதன் தற்காலிக தலைவர் தனன்ஞய டி சில்வா மற்றும் துஷ்மன்த சமீர ஆகியோர் பலம் சேர்க்க, அகில தனன்ஞயவும் தனது மாய சுழல் மூலம் பங்களிப்பினை வழங்கினார்.

இதனால் தொடர்ச்சியாக விக்கெட்டுக்களை பறிகொடுக்க தொடங்கிய கோல் கிளேடியட்டர்ஸ் அணி, தமது முக்கிய துடுப்பாட்டவீரர்களான பானுக்க ராஜபக்ஷ, சமிட் பட்டேல் போன்ற முன்னணி வீரர்களின் விக்கெட்டுக்களை அவர்கள் சிறந்த இன்னிங்ஸ் ஒன்றினை எட்ட முடியாத நிலையில் பறிகொடுத்திருந்தது.

ஆனால் மத்திய வரிசையில் பென் டங், மற்றும் இசுரு உதான ஆகியோர் சிறு ஆறுதல் வழங்க கோல் கிளேடியட்டர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 116 ஓட்டங்களை எடுத்தது.

கோல் கிளேடியட்டர்ஸ் அணியின் துடுப்பாட்டம் சார்பாக பென் டங் 25 பந்துகளுக்கு ஒரு சிக்ஸர் மற்றும் 4 பௌண்டரிகள் அடங்கலாக 38 ஓட்டங்கள் பெற, இசுரு உதான 2 சிக்ஸர்கள் அடங்கலாக 17 பந்துகளில் 25 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தார்.

கொழும்பு ஸ்டார்ஸ் அணியின் பந்துவீச்சில் தனன்ஞய டி சில்வா, அகில தனன்ஞய மற்றும் துஷ்மன்த சமீர ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்கள் வீதம் சாய்த்திருந்தனர்.

பின்னர் போட்டியின் வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்ட 117 ஓட்டங்களை 20 ஓவர்களில் அடைய பதிலுக்கு துடுப்பாடிய கொழும்பு ஸ்டார்ஸ் அணி, தொடக்கத்தில் தடுமாற்றத்தினை காட்டியிருந்தது.

அந்தவகையில் கொழும்பு ஸ்டார்ஸ் அணியின் முன்வரிசை வீரர்களாக காணப்பட்டிருந்த பெதும் நிஸ்ஸங்க, குசல் பெரேரா மற்றும் டொம் பென்டன் ஆகியோர் 10 ஓட்டங்களை கூட தாண்டியிருக்காத நிலையில் ஆட்டமிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் அணியின் பதில் தலைவர் தனன்ஞய டி சில்வா மற்றும் தினேஷ் சந்திமால் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்துடன் கொழும்பு ஸ்டார்ஸ் அணி போட்டியின் வெற்றி இலக்கினை 17.3 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 117 ஓட்டங்களுடன் அடைந்தது.

கொழும்பு ஸ்டார்ஸ் அணியின் வெற்றியினை உறுதி செய்த தினேஷ் சந்திமால் 26 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காது இருக்க, தனன்ஞய டி சில்வா 24 ஓட்டங்களுடன் அணியின் வெற்றிக்கு சகலதுறைகளிலும் பங்களிப்புச் செய்தார்.

கோல் கிளேடியட்டர்ஸ் அணியின் பந்துவீச்சில் எதிரணிக்கு நெருக்கடி உருவாக்கிய நுவான் துஷார மற்றும் புலின தரங்க ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்கள் வீதம் கைப்பற்றியிருந்தது குறிப்பிடத்தக்கது.

போட்டியின் ஆட்டநாயகனாக கொழும்பு ஸ்டார்ஸ் அணியின் தலைவரான தனன்ஞய டி சில்வா தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

OBSERVER SLT-MOBITEL 43rd SCHOOL CRICKETER OF THE YEAR 2021
SLTMOBITEL The Connection

43வது ஒப்சவர் SLT–மொபிடெல்
மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2021

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் ஒப்சேவர் SLT-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2021
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2020/2021 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2021
தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2020/2021 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..........
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..........
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ..........
வாக்களித்தவர் பெயர் : ..........
முகவரி : ..........
மொபைல் இல. : ..........

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:
1வது பரிசு : ரூ. 2,500 2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

43வது ஒப்சவர் SLT- மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:
SLT- மொபிடெல் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.
ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 11-12-2021 இல. 10




## மட்டக்களப்பு மாவட்ட செயலக அணி சம்பியன்

**கல்லடி குறூப் , வெல்லாவெளி தினகரன் நிருபர்கள்**



கோறளைப்பற்று பிரதேச செயலாளர் வெற்றி கிண்ணத்தை மட்டக்களப்பு மாவட்ட செயலக அணி தட்டிக்கொண்டது.

கோறளைப்பற்று பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நான்காவது தடவையாக நடாத்தப்பட்ட

அரச திணைக்களங்களுக்கிடையிலான

கோறளைப்பற்று பிரதேச செயலாளர் வெற்றி கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட செயலக அணி வெற்றி கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

கடந்த 2020 ஆம் ஆண்டிற்கான கோறளைப்பற்று பிரதேச செயலாளர் வெற்றி கிண்ண மென்பந்து கிறிக்கட் சுற்றுப்போட்டியின் முதல்

சுற்று போட்டிகள் கடந்த வருடம் நிறைவு பெற்றிருந்த நிலையில் கொவிட் 19 தொற்று காரணமாக சுற்று போட்டியானது இடை நிறுத்தப்பட்டிருந்தது.

இச்சுற்றுப்போட்டியின் அரையிறுதி போட்டிகள் கடந்த 30.11.2021 திகதி முதல் ஆரம்பமாகிய நிலையில் வாழைச்சேனை வீ.சி மைதானத்தில் போட்டிகள் இடம்பெற்றிருந்தது.

இந்நிலையில் கடந்த 03.12.2021 ஆம் திகதி வாழைச்சேனை பஸ் டிப்போ அணியினருக்கும் மாவட்ட செயலக அணியினருக்கும் இடையில் இடம்பெற்ற இறுதிச் சுற்றின் போது மாவட்ட செயலக அணியினர் 26 ஓட்டங்களினால் வெற்றிக்கிண்ணத்தினை சுவீகரித்துள்ளனர்.

அரச திணைக்களங்களுக்கிடையிலான 10 ஓவர்களை கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் மாவட்ட செயலக அணி, 14 பிரதேச செயலக அணியினர் மற்றும் வாழைச்சேனை பஸ் டிப்போ அணியினர் அடங்கலாக 16 அணிகள் இச் சுற்றுப்போட்டிகளில் பங்குபற்றியுள்ளதுடன், குறித்த சுற்றுப்போட்டியில் சிறந்த விளையாட்டு வீரராக மாவட்ட செயலக அணியைச் சேர்ந்த எம்.எம்.எம்.பாஹிமும், சிறந்த பந்து வீச்சாளராக மாவட்ட செயலக அணியைச் சேர்ந்த வை.ஜெயராஜ் மற்றும் தொடராட்ட நாயகனாக மாவட்ட செயலக அணியைச் சேர்ந்த துரைசிங்கம் ராஜ்குமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் வெற்றி பெற்ற அணியினரிற்கும் தெரிவு செய்யப்பட்ட வீரர்களுக்குமான வெற்றிக்கிண்ணங்களையும் பரிசில்களையும் கோறளைப்பற்று பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் திருமதி. நிருபா பிரிந்தன் வழங்கிவைத்துள்ளார்.

## தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டிய மாற்றுத்திறனாளிகள் கௌரவிப்பு

**கிண்ணியா மத்திய நிருபர்**

திருகோணமலை வலயக் கல்வி அலுவலக பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளின் விசேட கல்விப் பிரிவில் கல்வி கற்று, தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாற்றுத்திறனாளிகள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதற்கான நிகழ்வு அண்மையில் நிலையான உலகை நோக்கியதான மாற்றுத் திறனாளிகளின் தலைமைத்துவமும், பங்கேற்பும் என்ற தொனிப்பொருளில் திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறீதரன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது, திருகோணமலை மாதுமை அம்பாள் வித்தியாலயம் மாணவன் வரதகுமார் விதுசன் (பரிதி வட்டம் 1ஆம் இடம்), திருகோணமலை கலைமகள் மகா வித்தியாலய மாணவன் சாந்தகுமார் சஞ்சயன் (100 மீற்றர் 3ஆம் இடம்), திருகோணமலை கலைமகள் மகா வித்தியாலயம் ரவி அஸ்வின் ( பரிதி வட்டம் 1ஆம் இடம், குண்டெறிதல் 1ஆம் இடம்), திருகோணமலை அல்அஸ்ஹர் முஸ்லிம் மகா வித்தியாலய மாணவன் முகம்மது ஆசிக் முகம்மது ராசித் (பரிதி வட்டம் 1ஆம் இடம், 100 மீ ஓட்டம் 1ஆம் இடம்) ஆகியோர் பதக்கங்கள் அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

## கிண்ணியா எழிலரங்கு மைதானம் 50 இலட்சம் ரூபா செலவில் அபிவிருத்தி

ஜனாதிபதியின் சுபிட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்துக்கு அமைய விளையாட்டு மைதானம் அபிவிருத்தி செய்யும் நோக்கின் கீழ் கிண்ணியா எழிலரங்கு மைதானமும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

கிண்ணியா எழிலரங்கு மைதானத்துக்கான அபிவிருத்தி பணியினை மேற்கொள்ளும் அங்குரார்ப்பண வைபவம் கடந்த (01) மாலை இடம் பெற்றது. திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்து கோரள அவர்கள் ஊடாக பொதுஜன பெரமுன மூதூர் தொகுதி இணைப்பாளர் எம்.எஸ்.உவைஸ் அவர்களின் தலைமையில் இடம் பெற்ற இதில் சுமார் 50 இலட்சம் ரூபா செலவில் குறித்த மைதானம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

விளையாட்டுத் துறை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் புனரமைப்புச் செய்யப்படவுள்ள இம் மைதான அங்குரார்ப்பண நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ், கிண்ணியா நகர சபை உபதவிசாளர் ஐயூப் நளீம் சப்ரீன்,கிண்ணியா நகர சபை உறுப்பினர்களான எம்.எம். மஹ்தி, நிவாஸ் உட்பட விளையாட்டு கழக உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## அம்பாறை மாவட்ட ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டி: அக்கரைப்பற்று அணி தேசிய போட்டிக்குத் தெரிவு

**அக்கரைப்பற்று மத்திய நிருபர்**



இளைஞர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சினால் 33வது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவினை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்தில் நடாத்தப்பட்ட ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் அக்கரைப்பற்று பிரதேச செயலக இளைஞர் கழகங்களின் அணி முதலாமிடம் பெற்று வெற்றிவாகை சூடியுள்ளது.

இப்போட்டியானது வரிப்பத்தாஞ்சேனை பொது மைதானத்தில் இடம்பெற்றதுடன் அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேச செயலக அணிகள் பங்கேற்றன.

இறுதிப் போட்டிக்கு அட்டாளைச்சேனை பிரதேச செயலக இளைஞர் கழகங்களின் அணியும் அக்கரைப்பற்று பிரதேச செயலக இளைஞர் கழகங்களின் அணியும் தெரிவாகி மோதின. இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அக்கரைப்பற்று அணி 05 ஓவர் முடிவில் 02 விக்கெட் இழப்புக்கு 65 ஓட்டங்களை பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அட்டாளைச்சேனை அணி 05 ஓவர் முடிவில் 05 விக்கெட் இழப்புக்கு 57 ஓட்டங்களை எடுத்தது.

இதனடிப்படையில் அக்கரைப்பற்று பிரதேச செயலக அணி 07 ஓட்டங்களால் வெற்றிபெற்று இம் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள தேசிய இளைஞர் விளையாட்டு விழா கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கவுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 டிசம்பர் மாதம் 8ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

பிரதேச செயலாளர் குறிப்பு இல : 9/3/5/50
காணி அமைச்சின் குறிப்பு இல : 4-3/5/2018/HA/105

ஒரு பகிரங்க தேவைக்காக கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டை வாலவெல கிராம உத்தியோகத்தர் சேவை பிரிவில் கட்டட நிர்மாணிப்பதற்கு ஒரு பகுதி காணியினை எடுத்துக் கொள்ள அரசாங்கம் எண்ணியுள்ளது. இக்காணி தொடர்பாக மேலதிக விபரங்களுக்கு இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2021.10.30 ஆம் திகதிய 2251 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| மாகாணம் | : | மத்திய |
| மாவட்டம் | : | மாத்தளை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : | யட்டவத்தை |
| கிராமத்தின் பிரிவு | : | வாலவெல |
| காணியின் பெயர் | : | வாலவெல கும்புர அல்லது மாலிகாவே கும்புர |
| நில அளவை இல (ஆ.வ) | : | ஆ.வ.மா.1844 |

**டி.ஆர்.கே.ஹேரத்நாயக்க**
**பிரதேச செயலாளர்**

**யட்டவத்தை**
**2021.12.03**
**யட்டவத்தை பிரதேச செயலகம்**

**அற்றோணி தத்துவ அதிகாரத்தை இரத்து செய்வதற்கான அறிவித்தல்**

தங்காலை, திஸ்ஸ வீதி, இல. 213 என்ற இடத்தில் குடியிருக்கும் ஜோன் சில்வா எதிரிசூரிய ஆகிய நான் 2006.05.08 ஆம் திகதி கொழும்பில் பிரசித்த நொத்தாரிசு ஏ.பி.எஸ்.ஆர். குணசேகர என்பவரால் எழுதி உறுதி செய்யப்பட்ட அற்றோணி தத்துவ பத்திர இல. 10748 என்ற அற்றோணி தத்துவ பத்திரம் மூலம் தங்காலை, தேக்கவத்த, உடபார, இல. 1/175 என்ற இடத்தில் குடியிருக்கும் ரத்னவீர படபெந்திகே ஸ்ரீயானந்த என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணி தத்துவ அதிகாரத்தை, எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் உடனடியாக ரத்துச்செய்கிறேன்.

ரத்னவீர படபெந்திகே ஸ்ரீயானந்த என்பவர் மேற்படி அற்றோணி தத்துவ பத்திரம் மூலம் இதன் பின் புரியப்படும் ஏதேனும் நடவடிக்கைகளுக்கு நான் பொறுப்பு கூற மாட்டேன் என அறியத்தருகின்றேன்.

**ஜோன் சில்வா எதிரிசூரிய**
**கையொப்பம் தெளிவில்லை**

**அற்றோணி தத்துவ அதிகாரத்தை இரத்து செய்வதற்கான அறிவித்தல்**

தங்காலை, திஸ்ஸ வீதி, இல. 213 என்ற இடத்தில் குடியிருக்கும் ஜோன் சில்வா எதிரிசூரிய ஆகிய நான் 2018.08.28 ஆம் திகதி கொழும்பில் பிரசித்த நொத்தாரிசு எஸ். பகீரதன் என்பவரால் எழுதி உறுதி செய்யப்பட்ட அற்றோணி தத்துவ பத்திர இல. 4403 என்ற அற்றோணி தத்துவ பத்திரம் மூலம் தங்காலை, தேக்கவத்த, உடபார, இல. 1/175 என்ற இடத்தில் குடியிருக்கும் ரத்னவீர படபெந்திகே ஸ்ரீயானந்த என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணி தத்துவ அதிகாரத்தை, எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் உடனடியாக ரத்துச்செய்கிறேன்.

ரத்னவீர படபெந்திகே ஸ்ரீயானந்த என்பவர் மேற்படி அற்றோணி தத்துவ பத்திரம் மூலம் இதன் பின் புரியப்படும் ஏதேனும் நடவடிக்கைகளுக்கு நான் பொறுப்பு கூற மாட்டேன் என அறியத்தருகின்றேன்.

**ஜோன் சில்வா எதிரிசூரிய**
**கையொப்பம் தெளிவில்லை**

**அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்**

இல. 43, அங்கம்மன வீதி, இரத்தினபுரி என்ற இடத்தில் வசிக்கும் சுமுது பிரசன்ன கொடிதுவக்கு (தே.அ.அ.இல. 810813776V) ஆகிய எனது அட்டோர்ணி அதிகாரியாக 39/7C அங்கம்மன வீதி, இரத்தினபுரி என்ற இடத்தில் வசிக்கும் கொடிதுவக்கு ஆரச்சிகே நிலந்திமாலா கொடிதுவக்கு (தே.அ.அ.இல. 686082628V) என்பவரை நியமித்து எழுதி உறுதி செய்யப்பட்ட பகிரங்க நொத்தாரிசு திருமதி டி.பி.ஏ. இனோகா சியாமினி ஜயசேகரவினால் எழுதி உறுதி செய்யப்பட்ட இல. 1426 மற்றும் 2016.03.02ஆம் திகதிய சாதாரண அட்டோர்ணி தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்படுவதாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் அதன் பொதுமக்களுக்கும் இத்தால் அறிவிக்கிறேன். மேற்படி அட்டோர்ணி அதிகாரப் பத்திரம் 2022 ஜனவரி 01 முதல் அமுலுக்கு வருமாறு இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுவதாகவும் அன்று முதல் அவ் அட்டோர்ணி பத்திரத்தின் கீழ் மேற்படி கொடிதுவக்கு ஆரச்சிகே நிலந்தி மாலா கொடிதுவக்கு என்பவரால் என் பெயரில் அல்லது என்சார்பாக மேற்கொள்ளும் எந்த செயற்பாட்டிற்கும் அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் எந்த பொறுப்பும் மற்றும் இணக்கப்பாடும் இல்லை என்பதை இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**அட்டோர்ணி அதிபதி**
**(சுமுது பிரசன்ன கொடிதுவக்கு)**

**அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்**

இங்கு கீழ்க்காணும் அட்டோர்ணி அனுமதிப்பத்திரத்தில் அட்டோர்ணி அதிபதியான வத்தளை, ஸ்ரீ விக்ரம மாவத்த, இல 80 இல் வசிக்கும் வெலிசரகே ஜோசப் சியன் ரந்திக்க பெர்னாந்து (தே.அ.அ.இல 781662399V) ஆகிய என்னால் எனது அட்டோர்ணி தத்துவதாரராக வஹகோட்டே, மெதபெத்த, மொரகொல்லயாயவத்த இல. 108/பீ இல் வசிக்கும் வெலிசரகே சுரங்க பெர்னாந்து என்பவரை நியமித்து பகிரங்க நொத்தாரிசு நாமலி குணரத்ன வினால் எழுது உறுதிப்படுத்திப்பட்ட இல 3639 மற்றும் 2015.09.08ம் திகதிய பத்தரமுல்ல பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இல 152 அட்டோர்ணி தத்துவ புத்தகத்தின் 72ஆம் தொடர் இல 12144 பக்கத்தில் பதிவு செய்துள்ள அட்டோர்ணி தத்துவத்தின் மூலம் என்னால் வழங்கப்பட்டுள்ள அட்டோர்ணி அதிகாரத்தை இரத்துச் செய்வதாக இத்தால் சகலருக்கும் அறிவித்துக் கொள்கிறேன்.


# வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| HS -7XXX | MITSUBISHI | LANCER CS3 | 2003 |
| **ஜீப்** | | | |
| GZ -0XXX | MITSUBISHI | MONTERO SPORT | 2002 |
| KH -2XXX | MICRO | KYRON 200XDI | 2008 |
| **வேன்** | | | |
| 054 -5XXX | MAZDA | BONGO | 1989 |
| 062 -7XXX | TOYOTA | LH117 | 1992 |
| **லொறி** | | | |
| PP -6XXX | TATA | ACE | 2010 |
| PS -8XXX | TATA | ACE-EX | 2011 |
| PS -4XXX | MAHINDRA | MAXXIMO | 2012 |
| PY -3XXX | TATA | SUPER ACE | 2014 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| HV -7XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| JW -6XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| JI -7XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| QB -2XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QA -6XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QC -7XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QB -1XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QY -0XXX | BAJAJ | FE | 2005 |
| QH -6XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QI -0XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QE -4XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QE -0XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QE -1XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QN -8XXX | BAJAJ | AUTO AR4S | 2007 |
| QN -2XXX | BAJAJ | AUTO AR4S | 2007 |
| QK -6XXX | BAJAJ | AUTO AR4S | 2007 |
| QK -4XXX | BAJAJ | AUTO AR4S | 2007 |
| QQ -7XXX | BAJAJ | AUTO AR4S | 2008 |
| QO -0XXX | BAJAJ | AUTO AR4S | 2008 |
| QT -5XXX | BAJAJ | 4ST | 2009 |
| YL -6XXX | BAJAJ | RE 205 | 2011 |
| YR -2XXX | BAJAJ | RE 205 | 2011 |
| YU -5XXX | BAJAJ | RE205 | 2011 |
| AAH -8XXX | BAJAJ | RE 205 | 2012 |
| AAT -7XXX | PIAGGIO | APE | 2014 |
| AAZ -8XXX | PIAGGIO | APE CITY | 2014 |
| ABC -7XXX | BAJAJ | RE | 2015 |
| **துவிச்சக்கர வண்டிகள்** | | | |
| BCA -6XXX | BAJAJ | DISCOVER125 M | 2014 |
| BIG -3XXX | APRILIA | SR-125 | 2018 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மேர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2021 டிசம்பர் 8ஆம், 9ஆம், 10ஆம் மற்றும் 13ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்கக் கொள்ளப்படுவது 2021 டிசம்பர் 13ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மேர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்துக்கும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

இக் கேள்விகள் தொடர்பாக மேர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.

மேர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

Mercantile Investments and Finance PLC

தொடர்பு:
**ஜானக்க - 071 1624559 / மொதித - 071 9530350**


ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Pradeshiya Sanwardhana Bank

# மீட்கப்படாத தங்க ஆபரணங்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்

பிரதேச அபிவிருத்தி வங்கியின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள், அலுவலகங்கள், அடகு மத்திய நிலையங்கள் மற்றும் 2019.04.01ம் திகதியில் முன்னைய லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி கிளைகளிலும் அடகு மேற்கொள்ளப்பட்ட, கீழே அட்டவணையின் பிரகாரம் 2022.01.14ம் திகதி வரையில் மீட்கப்படாத தங்க ஆபரணங்கள் 2022.01.15ம் திகதி முதல் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிராந்திய அலுவலகங்களில், மாவட்ட அலுவலகங்களில் மற்றும் கிளைகளில் பகிரங்க ஏல விற்பனை மேற்கொள்ளப்படும்.

**அனைத்து ஏல விற்பனைகளும் முற்பகல் 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.**

| அடகினை பெற்றுக் கொண்ட இறுதி திகதி | அடகு காலம் | அடிப்படையான திகதி | கழிந்த காலம் |
|---|---|---|---|
| 2020-10-31 | 12 மாத காலத்திற்காக அடகு வைக்கப்பட்டவை | 2021-10-31 | 01 வருட காலம் கழிந்தவை |
| 2021-04-30 | 06 மாத காலத்திற்காக அடகு வைக்கப்பட்டவை | 2021-10-31 | 06 மாத காலம் கழிந்தவை |
| 2021-07-31 | 03 மாத காலத்திற்காக அடகு வைக்கப்பட்டவை | 2021-10-31 | 03 மாத காலம் கழிந்தவை |

**பிராந்திய அலுவலகம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மத்திய (தொ.இ 0812214115/6/7) | வட மத்திய (தொ.இ 0252223080/ 0252225214) | வட மேல் (தொ.இ 0372231880) | சப்ரகமுவ (தொ.இ 0452224566) | ஊவா (தொ.இ 0552223635) | மேல் (தொ.இ 0332248731 0332248583) | கிழக்கு (தொ.இ 0652225881) | தென் (தொ.இ 0412226208/9) |

**மாவட்ட அலுவலகம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கண்டி (தொ.இ 0812214115/6/7 0812214124) | பொலன்னறுவை (தொ.இ 0272223212) | குருநாகல் (தொ.இ 0372268323) | இரத்தினபுரி (தொ.இ 0452230512) | மொனராகலை (தொ.இ 0552273930) | கம்பஹா/ கொழும்பு (தொ.இ 0332234922) | அம்பாறை (தொ.இ 0632223420) | ஹம்பாந்தோட்டை (தொ.இ 0472240647/8) |
| மாத்தளை (தொ.இ 0662051332/3) | அநுராதபுரம் (தொ.இல 0252223080) | புத்தளம் (தொ.இ 0322223448) | கேகாலை (தொ.இ 0352230333) | பதுளை (தொ.இ 0552224192) | களுத்துறை (தொ.இ 0342264276 0342262526) | மட்டக்களப்பு (தொ.இ 0652225845) | மாத்தறை (தொ.இ 0412231585) |
| நுவரெலியா (தொ.இ 0522224552 0522222630) | வட மாவட்டம் (தொ.இ 0212280180) | | | | | | காலி (தொ.இ 0912222458) |

**மேல் மாகாணம்**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அஹலவத்தை | பதுரலிய | அவிஸ்ஸாவளை | பேருவளை | புளத்சிங்கள | திவுலப்பிட்டி | தொடங்கொட | கம்பஹா | கோனப்பொல | ஹோமாகம | ஹொறண | இங்கிரிய |
| ஜா- எல | களுத்துறை | மீகஹதென்ன | மில்லனிய | மினுவங்கொட | மீரிகம | மிரிஸ்வத்தை | மொறகஹஹேன | மொறந்துட்டுவ | நிட்டம்புவ | நீர்கொழும்பு | பாணந்துறை |
| பிலியந்தலை | றாகம | வாத்துவ | வலகெதர | வறக்காகொட | களனி | கிரிந்திவெல | கொலன்னாவ | மதுகம | மாவரமண்டிய | நுகேகொட | |

**மத்திய மாகாணம்**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அக்கரப்பத்தனை | தம்புள்ளை | தந்துரே | தவுலகல | கலேவெல | நுவரெலியா | கினிஹத்தேன | ஹதரலியத்த | ஹங்குரன்கெத்த | ஹேதெனிய | உடுதும்பர | உடவெல |
| கட்டுகஸ்தோட்டை | கண்டி இரண்டாம் நகர கிளை | கண்டி | கொடகல | லக்கலை | மனிக்கின்ன | மாறஸ்ஸண | செங்கடகல | மாத்தளை | மொறயாய | வத்தேகம | வில்கமுவ |
| நில்தண்டாஹின்ன | நாவலப்பிட்டி | நாஉல | கம்பளை | பேராதெனிய | பூஜாப்பிட்டி | பூண்டுலோயா | ரத்தோட்டை | ரிகில்லகஸ்கட | தெல்தெனிய | | |

**வட மத்திய மாகாணம்**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அநுராதபுர புதிய நகரம் | அநுராதபுரம் | அறலகன்வில | பக்கமுன | கலென்பிந்துனுவெவ | சுன்னாகம் | சிறிபுர | போகஸ்வேவ | கல்நேவ | கதுருவெல | கிளிநொச்சி |
| ஹிங்குரக்கொட | யாழ்ப்பாணம் | கோணப்பத்திராவ | கதுருவெல புதிய நகரம் | கஹடகஸ்திகிலிய | கெக்கிராவ | திறப்பன | செவணப்பிட்டிய | மன்னார் | மன்னம்பிட்டி | மிஹிந்தலை |
| பொலன்னறுவை | தம்புத்தேகம நகரம் | புலஸ்திகம | ரம்பேவ | கனகராயன்குளம் | கல்அமுண | தலாவ | தம்புத்தேகம | வவுனியா | மெதிரிகிரிய | மதவாச்சி |

**வட மேல் மாகாணம்**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பண்டுவஸ்நுவர | அளவ்வ | அம்பன்பொல | ஆனமடுவ | போவத்தை | சிலாபம் | தும்மலசூரிய | கல்கமுவ | கிரிஉல்ல | அத்துகல்புர | இப்பாகமுவ | கிரிமெட்டியான |
